
பார்த்தேன் கேட்டேன் படித்தேன்



தமிழ்ச்செம்மல்
மு . அழகுராஜ்

தமிழால் இணைவோம் பதிப்பகம்

(25 ஆண்டு கால வரலாறு)

To
Library
Nachiappa Swamigal
Arts & Science College

பார்த்தேன் கேட்டேன் படித்தேன்

தமிழ்ச் செம்மல் மு.அழகுராஜ்

வெளியீடு
தமிழால் இணைவோம் பதிப்பகம்
(25 ஆண்டு கால வரலாறு)
சென்னை

நூல் குறிப்பு

நூல்	:	பார்த்தேன் கேட்டேன் படித்தேன்
நூல் பொருள்	:	பல்சுவைத் தகவல்கள்
ஆசிரியர்	:	தமிழ்ச் செம்மல் மு.அழகுராஜ்
உரிமை	:	ஆசிரியருக்கு
பதிப்பு	:	டிசம்பர் 2025
பக்கம்	:	128
வெளியீடு	:	தமிழால் இணைவோம் பதிப்பகம், அலைபேசி 9442477645
விலை	:	ரூ.150/-
அச்சு	:	நியூஸ்மேன் புக் பிரிண்டர்ஸ் 40, யூனிகார்ன் காம்ப்ளக்ஸ், குருவிக்காரன் சாலை, அண்ணாநகர் மதுரை - 625 020 செல் : 98430 08113

பதிப்புரை

தமிழால் இணைவோம் பதிப்பகத்தின் சார்பாக இதுவரை. கதை, கட்டுரை, சங்க இலக்கியம், பக்தி இலக்கியம், பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுகளின் நூலாக்கம், நாட்டுப் புறப் பாடல்கள், அறிவியல், கல்லூரிகளுக்கான பாடநூல் இப்படிப் பல நூல்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

தற்போது தமிழால் இணைவோமின் காரைக்குடி மாவட்ட ஆளுநர் மதிப்புறு முனைவர் அழகுராஜ் அவர்களின் தகவல் பேழையான பார்த்தேன், கேட்டேன் படித்தேன் என்ற புதிய நூலை வெளியிடுவதில் பெருமை கொள்கிறோம். படிப்பதற்கு மட்டுமல்ல பாதுகாத்து வைக்கக்கூடிய பல செய்திகள் பதிவு செய்யப் பட்டிருப்பதால் பலருக்கும் பயன் தரும் நூலாக வெளிவருகின்றது.

வாசகர்கள் வாங்கிப் படிப்பதோடு தமிழால் இணைவோம் பதிப்பகத்திற்கும் ஆதரவு தந்து இது போன்ற நல்ல நூல்களை வெளியிட ஆதரவு நல்க வேண்டுமாய் அன்புடன் வேண்டுகிறோம்.

சத்தியநாராயணராஜ் பாலகுரு
பதிப்பாளர்,
தமிழால் இணைவோம் பதிப்பகம்.

அணிந்துரை



அ.சுப்ரமணியன்
அறிஞர் அண்ணா விருதாளர்
தலைமைச் செயலாளர்,
தமிழால் இணைவோம்
உலகத்தமிழ்ப்பேரியக்கம்

தமிழ்ச் செம்மல் மதிப்புறு முனைவர் மு.அழகுராஜ் அவர்கள் புதிய நூல் ஒன்றைத் தமிழ் கூறும் நல்லுலகிற்கு வழங்கியுள்ளார். அந் நூல் அணிந்துரைக்காக வந்தபோது படித்தேன், ரசித்தேன் படித்ததையும் ரசித்ததையும் பகர்கின்றேன்.

நூலைப் படிக்கின்றபோதே நூலாசிரியரின் அருமையையும் பெருமையையும் அவர் பயன்படுத்தியுள்ள சொல்லாட்சித் திறன் வாயிலாக அறிந்து கொள்ளமுடிகிறது. நல்ல தமிழ்ச் சொற்களை நயமாக வடித்துள்ளார். பல்லாண்டு காலம் அவர் செய்த ஆசிரியப் பணியும் தமிழறிஞர் பேரா. முனைவர் இ.கி.ராமசாமியார், இலக்கணப் பேராசான் பேரா. முனைவர் வீ.கோபால் போன்றோருடன் அவர் கொண்டுள்ள நட்பும் கவின்கலை வேந்தர் சத்யநாராயணராஜ் அவர்களின் தமிழால் இணைவோம் உலகத் தமிழ்ப் பேரியக்கத்தில் அவர் கொண்டுள்ள தொடர்பும் பொறுப்பும் அவருக்கு சொல் ஆளுமைத் திறனைக் கொடுத்துள்ளது வெள்ளிடை மலையெனத் தெரிகின்றது.

நூலுக்கு அவர் கொடுத்துள்ள தலைப்பே நம்மை நூலுக்குள் இழுத்துச் செல்கிறது. பல அறிஞர்களின் நூல்களைப் படித்ததின் விளைவாக நாம் படித்ததை மற்றவர்களும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் காரணமாகப் பிறந்த நூல் என்று எண்ணுகின்றேன். முப்பதுக்கும் மேற்பட்ட தலைப்புகளில் முத்தான கருத்துக்களை எப்போதும் பயன்படும்படியாக எடுத்துக் காட்டியுள்ளார்.

இந்தியவிடுதலைக்குப் பாடுபட்டவர்கள் என ஏற்கனவே பலரை நமக்குப் பலர் காட்டியுள்ளபோதிலும் எண்ணற்றவர்களின் தியாகம் மறைக்கப் பட்டுள்ளது என்பதும் உண்மை. மறைக்கப்பட்டவர்களின் வரலாறுகளை வெளிக்கொணரும் வகையில் போர்த்துக்கீசியர்களின் பிடியில் இருந்த கோவா டையூ டாமன் பகுதிகளை இந்தியாவுடன் இணைக்கப் போராடி மரணதண்டனை பெற்ற மாவீரன் ராணடே அவர்களைப் பற்றிய தகவல் அவர் விடுதலைக்கு வித்திட்ட அறிஞர் அண்ணாவின் உதவி நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது.

வள்ளுவன் குறளுக்கு வரைந்த பொருளுரைகள் எண்ணிலடங்கா. ஆனாலும் அவை அத்தனையும் ஒன்றை ஒன்று நகல் எடுத்ததாகவே உள்ளது. இந்நூலில் தேவகோட்டை சேவுகன் அண்ணாமலை கலை அறிவியல் கல்லூரியின் மேனாள் முதல்வர் முனைவர் ரெ.சந்திரமோகன் அவர்கள் நான்கு குறள்களை எடுத்து இன்றைய வாழ்வியலுக்கு ஏற்ற உரை கொடுத்திருப்பது புதிய சிந்தனை. அவருக்குத் தமிழால் இணைவோம் கொடுத்த வாழும் வரலாறு என்ற விருது எத்தனை பொருத்தமுடையது என்பது பொருள் கொள்ளத் தக்கது.

மகாகவி பாரதியின், மன்னர் கொடுத்தது அழியும் செல்வம். நான் கொண்டு வந்திருப்பது அழியாச் செல்வம் என்று செல்லம்மாளிடம் சொல்லும் வரிகள் நூல்களைப் பற்றிய எத்தகைய உண்மை. வள்ளல் அழகப்பரைப் பற்றிச்

சொல்லும் போது வளரந்த செடி வீழாமல் காத்தான் வள்ளல் பாரி. ஆனால் பூங்கொடிகள் பயில்வதற்கு இல்லம் தந்தான் அழகப்ப வள்ளல். இந்த வரிகள் பெண்கல்வியின் பெருமை பேசுகின்றன.

இப்படி எத்தனையோ ஆழமான வரிகள் நம் நெஞ்சுக்குள் நிறைகின்றன இந் நூலைப் படிப்பதின் வாயிலாக. மட்டைப் பந்தில் இந்தியப் பெண்கள் அணி உலக அளவில் படைத்த சாதனையைப் பதிவு செய்கின்றபோது நூலாசிரியர் மு.அழகுராஜ் அவர்கள் முழுமையான விளையாட்டு வர்ணனையாளராகவே மாறியிருப்பது நம்மை வியக்க வைக்கிறது.

மதுரையைப் பற்றிய செய்திகள், சிறுகதை செப்பும் செய்திகள், தமிழ் வளரத்த அறிஞர்கள், குழந்தைகளின் கொஞ்சும் செய்திகள் இப்படி எத்தனை எத்தனையோ சிந்தனைக்குரிய செய்திகளை நம் நினைவிற்குக் கொண்டு வருகிறார் நூலாசிரியர் அழகுராஜ் அவர்கள்.

சில நூல்களை நாம் படித்துவிட்டுப் பின்னர் மறந்துவிடுவோம். இந் நூல் என்றைக்கும் பாதுகாத்து வைக்கும் தகவல் களஞ்சியமாக உள்ளது. அழகுராஜ் அவர்களுக்கு வாழ்த்தைத் தெரிவித்து இன்னும் இப்படி பயனுரு நூல்களைப் படைக்க வாழ்த்துகிறேன்.

மதிப்புரை



சத்யநாராயணராஜ் பாலகுரு
நிறுவனர்/தலைவர்
தமிழால் இணைவோம்
உலகத் தமிழ்ப்பேரியக்கம்

மதிப்புறு முனைவர் அழகுராஜ் அவர்கள் பல நூல்களைப் படைத்த பண்பாளர். தமிழால் இணைவோம் உலகத் தமிழ்ப் பேரியக்கத்தின் பால் பற்றுக் கொண்டு பல நிகழ்வுகளில் பங்களிப்பு செய்து வருகின்றார். தமிழர்களின் வாழ்வியல் நூலான புறநானூற்றைத் தொடர் நிகழ்வாகத் தந்து கொண்டிருப்பதிலேயே அவரின் தமிழ்ப் புலமையைத் திறமையை நானறிவேன்.

தற்போது பார்த்தேன் கேட்டேன் படித்தேன் என்ற பல் தகவல் நூலைச் சுவைபட வழங்கியுள்ளார். பல நூல்களைப் படித்துத் தெரிந்து கொள்ளும் செய்திகளை ஒரே நூலைப் படித்துத் தெரிந்து கொள்ளும் வகையில் மிகச் சிறப்பாகப் படைத்துள்ளார். கதை கட்டுரை, கவிதை, இப்படி எந்நூலாயினும் அந்நூல் படிப்போர் பயனுறும் வண்ணம் அமைய வேண்டும்.அப்போதுதான் சமுதாய மாற்றம் நிகழும். நச்சுக் கருத்துக்களை நீக்கி நல்ல பல கருத்துக்களை நயம் பட உரைக்கின்றவரே சமுதாய நலன் கொண்டவராகின்றார்.

இந்நூலில் முப்பதுக்கும் மேற்பட்ட தலைப்புக்களில் தான் முயன்றெடுத்த கருத்துக்களைப் பதித்துள்ளார். மரண தண்டனை ஏற்புடையதா? நுண்ணியம் என்பார்

அளக்கும் கோல், வள்ளுவர் கலங்கியிருப்பார் என்ற தலைப்புக்களில் வள்ளுவன் குறளை எடுத்துக் கொண்டு இன்றைய சமுதாயப் பிரச்சினைகளை ஆசிரியர் மாணவர் வழியாக அலசித் தீர்வு கண்டிருப்பது, திருக்குறளை எப்படிப் பார்க்கவேண்டும் என்று இன்றைய சமுதாயத்திற்கு எடுத்துக் காட்டியிருப்பதில் முதல்வர் முனைவர் ரெ. சந்திர மோகன் அவர்கள் திருக்குறள் உலகப் பொதுமறை என்பதை உண்மையாக்கியிருக்கின்றார்.

கற்பித்தலில் ஆசிரியர் பங்கு, கற்றலில் மாணவர் பங்கு அதில் உள்ள இடையூறுகள் என்று எத்தனை உண்மைகளை உலகிற்கு இந் நூலின் வாயிலாகச் சொல்லியிருப்பது ஒரு பொறுப்புள்ள நல்ல முதல்வர் என்பதைக் காட்டுகின்றது. அதை இந்நூலில் கொண்டுவந்த மதிப்புறு முனைவர் அழகுராஜ் அவர்களையும் பாராட்ட வேண்டும்.

கோழி எறிந்த கொடுங்கால் கனங்குழை என்ற தலைப்பில் உள்ள செய்தி அன்றைய தமிழர்கள் தங்கத்தை எங்கே வைத்திருந்தார்கள் என்பதையும் இன்றைய தமிழர்கள் ஏன் இப்படி தங்கத்தில் மோகம் கொண்டு மூழ்கியிருக்கிறார்கள் என்ற சிந்தனையைக் கிளறுவதாக இருக்கின்றது. அறிந்த ஊர் அறியாத செய்திகள் என்ற தலைப்பில் மதுரையைப் பற்றிய பல செய்திகளை நாம் அறிந்து கொள்கிறோம். அது மட்டுமல்ல நம்மை ஆண்ட வெள்ளையர்கள் நமக்குப் பயன்படும் வகையில் எவை எல்லாம் செய்திருக்கிறார்கள் என்பதையும், உயர்ந்த எண்ணம் கொண்ட அந்நிய அதிகாரிகளையும் நம் கண் முன்னே காட்டுகிறார்.

இரண்டு மன்னர்களுக்குள் சண்டை என்ற தலைப்பில், பெண் அவள் சம்பந்தப்பட்ட முடிவுகளை அவளே எடுக்கும் போது தேவதையாக இருக்கின்றாள். முடிவுகள் அவள்மீது திணிக்கப்படும் போது சூனியக்காரக் கிழவியாகி விடுகிறாள் என்ற சொல்லாட்சி இன்றைய சமூகத்தில் எவ்வளவு உண்மை என்பது படிப்பவரைச் சிந்திக்க வைக்கிறது.

வள்ளல் அழகப்பரின் பன்முகத் தன்மை என்ற தலைப்பு, காரைக்குடி என்ற பின் தங்கிய பகுதியைக் கல்விக் குடியாக்கி,பெண் கல்வியில் பெரும் பங்கு வகித்த வள்ளல் அழகப்பரின் அரிய செயல்களை நாம் அறிந்து கொள்ள உதவுகின்றது.

கவலை தீர்க்கும் மருந்து என்ற தலைப்பில், வள்ளுவன் குழந்தைச் செல்வத்தைக் குறைவற்ற செல்வம் என்று காட்டியிருப்பது நமக்கும் மகிழ்வைத் தருகின்றது.ஒரு இராணுவ வீரனின் தந்தை என்ற தலைப்பில் தனது மூன்று மகன்களையும் இந்திய நாட்டுப் பாதுகாப்பில் ஈடுபடுத்தி அவர்கள் தங்கள் இணையற்ற உயிர்களைத் தந்து நாடு காத்த நல்ல செய்தியைச் சொல்லி, மூன்று மகன்களையும் இழந்த பின்னே அந்தத் தந்தையின் வீரச் செயலை விவரித்து இப்படிப் பட்டவர்களைப் பாராட்டாமல், நடிகர்களையும், நல்லவர்களைப் போல நடிக்கும் அரசியல்வாதிகளையும் புகழ்கின்ற நிலையை மனம் வருந்திக் கூறியுள்ளது இன்றைய தலைமுறை எங்கே போகிறது என்று சிந்திக்க வைக்கிறார்.

நடமாடக் கோவில் என்ற தலைப்பில், கடவுளுக்குச் சிலைவைத்து வழிபாடு செய்வதைவிட, கடும் பசியால் இருப்பவனுக்கு இலை வைத்துச் சோறு போடுங்கள் அதைவிடச் சிறந்த தொண்டு இந்த உலகில் வேறு எதுவுமில்லை என்ற பதிவு எத்தனை உண்மையானது என்பதை நம்மைச் சிந்திக்க வைக்கிறது.நான் சொன்னது சில செய்திகளே. இன்னும் எத்தனையோ பயனுள்ள படித்து சுவை கொள்கின்ற தகவல்கள் ஏராளம் இதில் புதையலைப் போலப் புதைந்துள்ளது.

இப்படி எண்ணற்ற பயனுள்ள சொற் கோவைகள் அடங்கியுள்ள, படிப்போரைச் சிந்திக்க வைக்கின்ற இந்நூலைப் படைத்த மதிப்புறு முனைவர் மு. அழகுராஜ் அவர்களை வாழ்த்துகிறேன்.

நன்றியுரை

நாவல், நாடகம், கவிதைகள் போன்ற படைப்புகளை எல்லோரும் விரும்பிப் படிப்பர் என்பது சற்றுக் கடினமே, மாறாக நேரில் கண்ட ஒரு சில நிகழ்வுகளையும் காதால் கேட்கும் காணொலிப் பதிவைக் கேட்கும் வகையிலம் நூல்களை வாசிக்கும்போது உள்ளத்தைத் தொடும் சில கருத்துக்களையும் ஓரிரு பக்க அளவில் கட்டுரைகளாகத் தயாரித்து நூலாக்கம் பெறுவது ஒரு புதிய முயற்சி. வாசிப்பதற்கு எளிமையாகவும்? வாசிக்கும் திறனை மேம்படுத்துவதாக அமையும்.

2019-ஆம் ஆண்டு கொரோனா என்னும் பெரும் தொற்றுநோய் உலக முழுவதும் பரவியிருந்த கால கட்டத்தில் இணையவழியில் உலகத் தமிழ்ச்சங்கம், தமிழால் இணைவோம், உலகத் தமிழ்ப்பேரியக்கம், திருக்குறள் மாமன்றம், நட்புத்தமிழ்வட்டம் போன்ற தமிழ் அமைப்புகள் நடத்திய நிகழ்வுகள் மூலம் பார்த்தும் கேட்டும் கலந்துரையாடவும் ஒரு அரிய வாய்ப்பு கிட்டிட்று.

கொரோனா பெருந்தொற்று நோய்க்கு முன்னும் பின்னும் உலகத் தமிழ்ச்சங்கம், உலகத்திருக்குறள் பேரவை, திருவள்ளுவர் மன்றம், திருக்குறள் மன்றம், தொல்காப்பியர் மன்றம், மதுரை வாசகர் வட்டம், நட்புத் தமிழ்வட்டம், காந்தி அருங்காட்சியக நூலக வாசகர் வட்டம் போன்ற அமைப்புகளின் நேரடி நிகழ்வில் பங்கு கொண்டு பார்த்தும் கலந்துரையாடிய நிலையிலும் கலைஞர் நூலகங்களில் உறுப்பினராகச் சேர்ந்து நூல்களை வாசித்த நிலையிலும் இந்நூல் 'பார்த்தேன், கேட்டேன், படித்தேன்' என்ற தலைப்பில் உருவாகக் காரணமாயிற்று.

தமிழால் இணைவோம் உலகத் தமிழ்ப் பேரியக்கத்தில் இணைந்துள்ள தலைவர் உட்பட அனைத்துத் தமிழ் நெஞ்சங்களையும் நன்றியோடு நினைவு கூறுகிறேன்.

இந்நூல் தமிழால் இணைவோம் பதிப்பகத்தின் வாயிலாக வெளியிடப்பட்டது. நிறுவனர் திரு.சத்தியநாராயண ராஜ் பாலகுரு அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி.

தமிழால் இணைவோம் உலகத்தமிழ்ப் பேரியக்கத்தின் தலைமைச் செயலாளராகவும் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளராகவும் ஆலோசகராகவும் இருந்து அணிந்துரை வழங்கிய அண்ணா விருதாளர் அ.சுப்ரமணிய ஐயா அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்நூலின் உருவாகத்தில் எப்பொழுதும்போல் உறுதுணையாக இருந்து ஒத்துழைப்புத்தரும் வாழ்க்கைத் துணையாக இருந்து ஒத்துழைப்புத்தரும் வாழ்க்கைத் துணைநல்லாளான திருமதி. செ.முத்துலெட்சுமிக்கு என் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

பல்வேறு சூழலில் எழுதப்பட்ட 35 கட்டுரைகளைத் தொகுத்துக் கணினித் தட்டச்சு செய்து உதவிவரும் பட்டிமன்ற நடுவர், தமிழாசிரியர் செள.சுகுமாரி அம்மா அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி.

அச்சிட்டு நூலாக்கித் தந்த நியூஸ்மேன் புக் பிரிண்டர்ஸ் உரிமையாளருக்கு நன்றி. கட்டுரைகள் அனைத்தையும் படித்துப்பார்த்து மெய்ப்புத் திருத்தம் செய்த அண்ணா விருதாளர் அ.சுப்ரமணி ஐயாவிற்கும், பேராசிரியர் முனைவர் வீ.கோபால் ஐயா, மன்னர் திருமலைநாயக்கர் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் பரிமளா அம்மாவுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரை **மு.அழகுராஜ்**

30.11.2025

பொருளடக்கம்

1 விடுதலைப் போராட்ட வீரர் மோகன் ராணடே

சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள அறிஞர் அண்ணாவின் நினைவிடத்தில் 1969இல் ஒருவர் கண்ணீர் விட்டவாறு பார்த்துக் கொண்டே இருந்தார். அங்கே இருந்தவர்கள் அவரிடம் கேட்ட போதுதான் அவர் கோவாவின் விடுதலைப் போராட்ட வீரர் மோகன் ராணடே என்பது தெரிந்தது. அவர் ஏன் அண்ணா நினைவிடத்தில் நின்று அழவேண்டும். அது ஒரு வரலாறு. அதைப் பார்ப்போம்.

கோவா, டையூ, டாமன் இந்தப் பகுதிகள் இந்தியாவிற்குள் இருந்தாலும் போர்ச்சுக்கல் அரசின் ஆதிக்கத்தில் இந்தியாவின் காலனிப் பகுதியாக 1510 முதல் 450 ஆண்டுகள் இருந்தது.

போர்ச்சுக்கல் காலனி ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற 1940 முதல் 1961 வரை பல போராட்டங்களை முன்னெடுத்தது கோவா விடுதலை இயக்கம். அந்த விடுதலை இயக்கத்தில் தன்னையும் இணைத்துக் கொண்டு போராடியவர் மோகன் ராணடே. போர்த்துக்கீசிய அரசு கைது செய்து இலிசுபனுக்கு அருகே காக்சியாசு கோட்டையில் தனிமைச் சிறையில் அடைத்தது ஆயுள் தண்டனைக் கைதியாக.

கோவா, டையூ, டாமன் இந்தியாவுடன் 1961இல் இணைக்கப்பட்டது. ஆனால் விடுதலைக்காகப் போராடி ஆயுள் தண்டனை பெற்று வேற்று நாட்டு தனிமைச் சிறையில் வாடிக் கொண்டிருந்த மோகன் ராணடேவை விடுவிக்க இந்தியத் தலைவர்கள் எந்த முயற்சியும் எடுக்காமல் மறந்துவிட்டனர்.

இந்திய விடுதலைக்கு எதிரான கட்சி என்று இன்றுவரை பலரால் பேசப்பட்டுவரும் திராவிட இயக்கத் தலைவர் அண்ணா அவர்கள் தமிழக முதல்வராகி வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டபோது போப்பாண்டவர் பால் அவர்களை 1968 இல் சந்தித்தார்.

அறிஞர் அண்ணா, அவரிடம் ஒரு வேண்டுகோளை வைத்தார். கோவா விடுதலைப் போராட்டத்திற்குப் போராடி போர்ச்சுக்கல் நாட்டின் சிறையில் வாடிக் கொண்டிருக்கும் மோகன் ராணடேவை விடுதலை செய்ய போர்ச்சுக்கல் அரசுடன் பேச வேண்டும். பேசி அவரை விடுதலை செய்ய போப் பால் உதவ வேண்டும் என்று வேண்டுகோள் வைத்தார். நம்பிக்கையுடன் சென்று வாருங்கள் என்று போப் அண்ணாவிடம் கூறினார். அவரின் வேண்டுகோளின்படி மோகன் ராணடே விடுவிக்கப் பட்டார். அவர் விடுதலை பெற்று இந்தியா வருவதற்கு முன்பு அறிஞர் அண்ணா இறந்துவிட்டார். தன் விடுதலைக்குக் காரணமானவர் அண்ணா என்பதை அறிந்து அவரின் நினைவிடம் வந்து அஞ்சலி செலுத்தினார்.

இந்திய தேசத் தலைவர்களே மறந்துவிட்ட ஒரு விடுதலைப் போராட்ட வீரர் மோகன் ராணடேவை நினைவு வைத்து விடுதலைக்கு உதவிய அறிஞர் அண்ணாவை நினைத்து அவரின் செயலைக் கேட்டு படித்து வியப்புற்றேன்

அண்ணா ஓர் அருங்குணப் பெட்டகம் !

2 மரணதண்டனை ஏற்புடையதா?

முதுமுனைவர் ரெ.சந்திரமோகன் ஆலோசகர்,
நாச்சியப்ப சுவாமிகள் கலை அறிவியல் கல்லூரி, கோவிலூர்.
மேனாள் முதல்வர், ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி, தேவகோட்டை

'நேற்றிருந்தவன் இன்றில்லை', 'மாற்றமே நிரந்தரம்" "இன்ப துன்பங்கள் நிரந்தரம் அல்ல", "விடியலுக்கில்லை தூரம்", விடியும் மனதில் இன்னும் ஏன் பாரம்?' என்ற செய்திகளை அவ்வப்போது வகுப்பறைகளில் கலந்துரையாடுவது நம் பழக்கம். ஒருமுறை,

"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனோடு நேர்" - (குறள் 550)

என்று கரும்பலகையில் எழுதி மரண தண்டனை ஏற்புடையதா என்று விவாதித்தோம்.

ஒரு மாணவர் எழுந்தார். யாரும் யாரையும் கொல்வதில்லை. நல்ல பயிர் வளர்க்கக் களைகளை அகற்றுவது விவசாயிகள் தர்மம். கீதையில் அர்ச்சுனனுக்கு உரைத்த செய்தியும் அதுதான். உனது தர்மத்தை நீ செய்கிறாய். போற்றுவார் போற்றலும் தூற்றுவார் தூற்றலும் இறைவனுக்கே என்று பேசினார். ஒரு மாணவர் எழுந்து இடைமறித்தார். 'களை' என்று தீர்மானித்தது யார்? களைகள் உதவக் கூடிய மருந்தாய் இருந்தால் நெல்பயிரைப் பிடுங்கி எறிய மனம் வருமா? என்று வினவினான். ஒரு பயிர். ஒரு உயிர். அதனைப் பறிக்கும் உரிமை யாருக்கும் இல்லை. தூக்குத்தண்டனை கொடுப்பது தவறே. குற்றவாளி மாறுவதற்கு வழிகள் செய்ய வேண்டும் என்று பேசினான், நீ விவசாயியாய் இருந்தால் களை அகற்றுவது அவசியம். அவைகளை மக்கவிட்டு உரமாய்ப் பயிரிட முடிந்தால் நன்றுதான். அதற்குத் தனித்தனிக் களங்கள் ஆக்க வேண்டும். நீ ஆள்வோனாக இருந்தால் தண்டனை தரும்போது குற்றங்களை எடை போட்டு சரியான தண்டனை தர வேண்டும் என்று ஒரு மாணவர் பேசினார். நல்ல கேள்விகளை வள்ளுவர் தந்திருக்கிறார் என்றே தோன்றுகிறது. பெருமையான உலகம் அமைய,

"நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு" (குறள் 336)

என்ற தொடர் கண்சிமிட்டியது.

நானோ நுண்ணோக்கிகள் வந்துவிட்டது.

சென்ற வாரம் கைபேசிக் குறுஞ்செய்திகளை வாசித்துக் கொண்டிருந்தேன். 'நுண்ணியம் என்பார்' குறள் பற்றிய என் பகிர்வைப் படித்துள்ளாராம். என் பார்வைக்காக அச்செய்தியைப் பகிர்ந்தார். ஆம், நானும் என் மாணவனும் உரையாடும்போது மூளையின் நியூரான்களைப் பெரிதுபடுத்திப் பார்க்கும் கருவிகள் இன்னும் வரவில்லை என்று நான் வருத்தமுடன் சொன்னதாகவும், இப்பொழுது அத்தகைய நுண்ணோக்கிகள் வந்துவிட்டன என்றும், அமெரிக்க ஆய்வு மையத்தில் அவருடைய நண்பர் அதில் பயிற்சி எடுத்துக் கொண்டுள்ளார். என்றும் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது, ஒரு முடியில் 5000 நியூரான்கள் அமரலாம். அவைகள் ஒரு முடி அளவில் உள்ள நாளத்தின் வழியாக ஓடி விளையாடும். அப்பொழுது ஒரு நியூரான் இன்னொரு நியூரானுடன் சந்திக்கும்போது முத்தமிட்டுக் கொள்கின்றன. அப்பொழுது ஒருவகையான ஒளி உமிழ்வு (ஸ்பார்க்) நடைபெறுகிறது. அவற்றைப் படம்பிடிக்கும் கருவியும் இணைக்கப்பட்டுள்ளது என்றும் பகிர்ந்திருந்தார். 'மோதலில் காதல் பிறக்குது'என்று நாம் பல கதைகளில் படித்தாலும் 'மோதலில் முத்தமிடுகிறது' நியூரான்கள் என்பதும் 'காதலில் ஒரு மின்னல் மூளைக்குள் தோன்றுவதும்' புதிய கருத்துகள் வரும்போது 'ஒரு ஸ்பார்க் வந்தது' என்று சுஜாதா எழுதியதும் எத்தகைய உண்மை என்று வியந்து போனேன். கூடவே ஒரு செய்தியும் சொல்லியிருந்தார். காதல் தோல்வியை மறப்பதற்கு அவர்/அவள் முன் செய்த சிறு உதவிகளை நினைத்துப் பார்த்தலால்'. செய்ந்நன்றிச் செய்திகளால் நியூரான் தேக்கங்கள் வராமல் பாதுகாக்கலாம் என்பதுவும், காதல் போயின் சாதல் தேவையில்லை. அவர் செய்த ஒன்று நன்று என்ற செய்தி மருந்துதானே.

இனி செய்ந்நன்றி அறிதல் பற்றிய விழிப்புணர்வினை நாம் தொடர வேண்டியதன் அவசியத்தையும் வள்ளுவத்தையும் சேர்த்துப் பகிரலாம் என்ற எண்ணம் எழுந்தது.

3 நுண்ணியம் என்பார் அளக்கும் கோல்

ஒருமுறை குறள் 710 ஐப் பற்றியும் நானோ தொழில்நுட்பத்தில் கண்ணைக் கடந்து உலகம் உள்ளது என்று வள்ளுவர் நுட்பமாக எச்சரிக்கின்றார் என்று கூறிப் பல்துறை ஆய்வு மாணவர்களிடம் பேசிக் கொண்டிருந்தேன்.

"நுண்ணியம் என்பார் அளக்கும்கோல் காணுங்கால்
கண்ணல்லது இல்லை பிற" - குறள்(.710)

அப்போது உயிரியல் மாணவர் ஒருவர் எழுந்து மூளையின் நியூரான்கள் பலவகை வேதியற் பொருள்களைக் கையாள்கிறது என்பதை நியூரோ விஞ்ஞானிகள் கண்டு கொண்டுள்ளார்கள். ஆப்டோ ஜெனிட்டிக்ஸ் என்ற துறையில் இவ்விஞ்ஞானம் வருகிறது: நீங்கள் ஆழமாக யோசிக்கையில் எதைப் பற்றி யோசிக்கின்றீர்களோ, காதலா, துரோகமா, மரணமா, பிரிவா? எதுவானாலும் திண்ணியமாக நீங்கள் யோசித்தால் மூளையில் அசட்டைல் குளோரைடு என்ற திரவம் அதிகமாகச் சுரந்து நினைவுகளைத் தேங்கச் செய்யும். இதனைக் காணும் கருவிகள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று கூறினார். அது கண்ணைக் கடந்த உலகம் இன்றைய நுண்ணோக்கிகள் காண இயலா உலகம் என்று முடித்தோம்.

மூளை நியூரான்கள் "இதனை இதனால் இவன்முடிக்கும் என்று ஆய்ந்து"அதனை முடிக்கத் தேவையான சுரப்பிகளைச் செய்கின்றன என்று கூறினார். நம் முதுகலை அறிவியல் மாணவர்கள் திருக்குறளை எவ்வாறு சிந்தித்துள்ளார்கள் என்று மெய்சிலிர்த்துப் போனேன் அவருக்கு ஒரு திருக்குறள் நூல் பரிசளித்தேன். இன்றும் அந்நினைவு என் நெஞ்சில் உள்ளது.

மாணவர்களோடு நடத்தும் உரையாடல்கள் ஒரு ஆசிரியரை மேன்மையடையச் செய்யும் என்றால் மிகையாகாது. ‘தோல்வியே வெற்றிக்கு வழி’ என்பதைச் சொல்லி குறைவான மதிப்பெண் பெற்ற மாணவனை ஊக்கப்படுத்திக் கொண்டிருந்தேன். படைச்செருக்கு அதிகாரத்தில் 772வது குறளாகிய,

"கான முயலெய்த அம்பினில் யானை

பிழைத்தவேல் ஏந்தல் இனிது"என்ற குறட்பாவை எழுதி அதன் பொருள் தேடலாம் வருக என்று மாணவர்களை அழைத்தேன். ஒரு மாணவன் எப்பொழுதும் ஆங்கில நாவல்களை வாசித்து அதைப் பற்றிப் பேசுவதில் வல்லவன். அவன் எழுந்து "ஐயா, 'பாவ்லக் கோவ்கோ’இதனைக் கையாண்டுள்ளார்’என்று விவரித்தார். ஒரு அம்பு எய்துபவன் அம்புடன் பயணிக்க வேண்டும். முழு உலகையும் அவனுடைய அம்பிலே அவன் காணுவான். அவன் அம்போடு பறந்து தான் தாக்கும் இடம் (முயல்) வந்ததும் அதனுள் பயணிப்பான் என்று குறிப்பிடுகிறார் என்றான். வகுப்பு கரகோஷம் தந்தது. எனவே கடமையைச் செய்பவன் தன் கடமையில் முழுமையாய்ப் பயணித்தால் இலக்கு எவ்வளவு பெரியதாய் இருந்தாலும் எளிதாய் அடைவர் என்றும் முடித்தார். ஒரு மாணவன் எழுந்து. 'தவறிய வேலுக்கு’ என்ன விளக்கம்? என்று கேட்டான். அப்பொழுது ஒரு மாணவி எழுந்து சொன்னார். ’ஒரே வேல்தான் ஒரு யானை வேட்டைக்காரனிடம் இருக்கும். அவன் யானையைக் காயப்படுத்தி அதனை விரட்ட வேண்டும். அந்த யானை வேலைத் தாங்கியபடி ஓடிவிட்டால், அவன் மீது வேறு யானை தாக்கும் வாய்ப்பு உள்ளது. அதனால் அவனது நோக்கம் யானையை விரட்டுவது மட்டுமே. மீண்டும் அவன் கைக்கு வேல் அல்லது ஈட்டி வேண்டும். எனவே அவனது நோக்கமே தவறும் வேலே! யானையைக் கொல்வது அன்று, நல்ல மருத்துவர்கள் நிறைய அரியர்ஸ் வைத்துப் பாஸ் செய்பவர்கள் என்று போட்டாரே ஒரு போடு! வகுப்பு கலகலத்தது.

"அதனால்தான் பின்இருக்கை மாணவர்கள்

நாட்டை ஆளுகிறார்களோ?!"

4 வள்ளுவர் கலங்கியிருப்பார்



மற்றொரு வகுப்பில் நம்பிக்கைச் செய்தி சொல்ல நினைத்தேன். இந்நேரங்களில் கலந்துரையாடலாக மாற்றுவது எனது வகுப்பறை உத்தி. 'தவறும் அம்புகள்' என்று நாம் கலந்துரையாடுவோம் என்று கரும்பலகையில் தலைப்பை எழுதினேன். மீண்டும் அதே "கான முயலெய்த அம்பினில் யானை பிழைத்த வேல் ஏந்தல் இனிது"என்னும் குறட்பாவையும் தான்.

ஒரு மாணவன் சொன்னார். தவறும் அம்புகளுக்குக் காரணம் அம்புகள் அல்ல. அதைச் செலுத்தியவில்தான். 'நாண்' என்று ஒரு மாணவர் திருத்தினார். ஒரு மாணவர். 'நாண்'ஆசிரியர்,

'அம்பு'மாணவர், மாணவர்களின் தோல்விக்கு ஆசிரியர்களே காரணம் என்றான். வகுப்பு கலகலத்தது. ஒரு மாணவன் கூறினான். ஆசிரியர் என்ன செய்வார்?. நாண் எய்துகிறது, நோக்கம் நிறைவேற அம்பு காற்றை எதிர்த்துப் பயணிக்க வேண்டும். மாணவனின் சூழ்நிலை அவனைச் சரியாகப் பயணிக்க விடாமல் தடுக்கிறது. அம்புப் பயிற்சி மையத்தில் ஒரே அளவு காற்று வீசும். நிதானித்து முடிவெடுக்கலாம். ஆனால் மாணாக்கர்கள் வாழும் சூழ்நிலை பலவகை. பட்டிக்காடா? பட்டணமா? தாய்தந்தை உள்ளார்களா?. ஏழையா, பணக்காரரா?, நடுத்தரமா? பெற்றோர்கள் ஒழுக்கமான துறையைத் தேர்ந்தெடுத்து வாழ்கிறார்களா? வந்து போவதே பிரச்சனையா?, பகுதிநேரம் வேலை பார்த்து பள்ளிக்கு வருகிறாரா?. கண் கோளாறா?. காது கேட்கிறதா? என்று எத்தனையோ சவால்கள். என்னை உலுக்கியது அவரது பகிர்வு. வகுப்பறை மௌனம் காத்தது. "தவறும் ஈட்டிகளுக்கு நாணில்லை, சுயமாகப் பயணிக்கின்றது. கைகளே நாண்கள்" என்று முடித்தாரே பார்க்கலாம். அவரை அணைத்து உச்சி முகர்ந்தேன்.

தவறும் அம்புகளுக்குப் பயிற்சி. நீட் தேர்வு என்று வைக்கிறார்களே, தவறும் ஈட்டிகளைக் கண்டுகொள்வதில்லையே இன்றும் சுயம்பாய் உருவான காமராசர், நெல்லைக் கண்ணன் போன்றோர் நினைவுகளில் வராமல் இல்லை.

5 கோழி எறிந்த கொடுங்கால் கனங்குழை

ஒரு வீட்டில் பெண்ணொருத்தி நெற்கதிர்களைக் காய வைத்திருந்தாள். அதை உண்ண வந்த கோழிகளைத் தன் காதில் அணிந்த பொன்னாலான குழை என்ற அணிகலனை எறிந்து துரத்தினாள். அவள் தூக்கியெறிந்த குழை தூரத்தில் விழுந்தது. அப்போது பொன்கழல் அணிந்த சிறுவன் ஒருவன் (அப்பெண்ணின் தம்பி) உருட்டி விளையாடும் பொன்னாலான முக்கால் தேரினை ஓட்டிக் கொண்டு அவ்வழியே வருகிறான். அவன் ஓட்டி வந்த தேர்ச் சக்கரத்தில், அவன் அக்கா தூக்கியெறிந்த குழை சிக்கிக் கொண்டது. அதனால் அந்தத் தேர் நகர முடியாமல் நிலை தடுமாறிக் கவிழ்ந்தது. தேர் முழுவதும் மண்ணானது. அக்கா தூக்கியெறிந்த குழையால்தான் தன்னுடைய தேர் கவிழ்ந்தது என்று தன் தந்தையிடம் சென்று முறையிடுகிறான். "மகனே ! மண்ணில் விழுந்த அந்தத் தேர் இனி உனக்கு வேண்டாம். பொன்னாலான புதிய தேரினை உனக்கு நான் செய்து தருகிறேன். நீ கவலைப்படாதே! "என்று சொல்லித் தன் மகனைத் தேற்றுகிறார் தந்தை.

மகளோ கோழிகளை விரட்டப் பொன்னாலான குழைகளைத் தூக்கி எறிகிறாள். மகனோ மண்ணில் விழுந்ததற்காகப் பொன்னாலான தேரை வேண்டாம் என்கிறான். இதைப் பற்றியெல்லாம் கவலைப்படாத தந்தையோ பொன்னாலான புதிய தேரைச் செய்து தருகிறேன் என்கிறார். பொன்னை ஒரு பொருட்டாகவே மதிக்காத அளவுக்குக் காவிரிப்பூம்பட்டினம் செல்வச் செழிப்பு மிக்கதாக இருந்தது.

"சுடர்நுதல் மடநோக்கின்
நேர்இழை மகளிர் உணங்குஉணாக் கவரும்
கோழி எறிந்த கொடுங்கால் கனங்குழை,
பொற்கால் புதல்வர் புரவிஇன்று உருட்டும்
முக்கால் சிறுதேர் முன்வழி விலக்கும்,
விலங்குபகை அல்லது கலங்குபகை அறியா,
கொழும்பல்குடிச் செழும்பாக்கத்து"

(கடியலூர் உருத்திரங் கண்ணனார்,
பட்டினப்பாலை -அடிகள் 21-27)

"பெரிய வீடுகளின் பெரிய முன் வாசலில் ஒளி பொருந்திய நெற்றியையும் வஞ்சனையற்ற பார்வையையும் உடைய அழகான அணிகலன்களை அணிந்த இளம் பெண்கள் காய்கின்ற உணவுப் பொருள்களைத் தின்னும் கோழிகளை விரட்டுவதற்காக வீசியெறிந்த வளைந்த கால்களையுடைய கனமான காதணிகள், அழகிய கால்களையுடைய சிறுவர்கள் குதிரையில்லாமல் கையினால் உருட்டிச் செல்கின்ற மூன்று சக்கரங்களையுடைய சிறிய தேர்கள் ஓடும் முன் வழியைத் தடுத்து நிறுத்தும். இத்தகைய தடையான பகையைத் தவிர மனம் கலங்குவதற்கான வேறு பகைமையை அறியாத செல்வ வளமிக்க பல குடும்பங்கள் நிறைந்த செழிப்பான பாக்கத்தையுடையது அந்தக் காவிரிப் பூம்பட்டினம் "என்கிறது பட்டினப் பாலை.

6 அறிந்த ஊர் அறியாத செய்திகள்

இந்தியாவில் பழமையான நகரங்களில் தென்பகுதியில் இருக்கும் பெருமைக்குரியது, **"மதுரை"**. உலகளவில், பல ஆயிரம் ஆண்டுகள் தொடர்ந்து, மக்கள் வாழும் பழமையான வைகையாற்றின் கரையில் அமைந்த எழில் நகரம். மதுரையை ஆண்ட பாண்டியர்களைப் பற்றிய குறிப்புகளை, கி.மு.3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அசோகர் கல்வெட்டுகளில் அறிய முடிகிறது. அதே நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்த கிரேக்கத் தூதர் மெகஸ்தனீஸ், மதுரையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

சுமார் 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க இலக்கியங்களில் மதுரையைப் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. எனவே சமீபத்தில் மேம்படுத்தப்பட்ட சென்னை, கோவை நகரங்களைப் போல, மதுரையின் பிறந்த நாளைச் சரியாகச் சொல்ல முடியவில்லை. திருமுருகாற்றுப்படை, மதுரைக் காஞ்சி, நற்றிணை, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு இலக்கியங்களில் 'கூடல்' என்றும், கலித்தொகையில் 'நான்மாடக்கூடல்' என்றும், சிறுபாணாற்றுப்படை, மதுரைக்காஞ்சி, புறநானூற்றில் மதுரை' என்றும் அழைக்கப்படுகிறது. சங்ககாலம் முதல் இக்காலம் வரை தொடர்ச்சியான வரலாற்றைக் கொண்டது. சங்ககாலப் பாண்டியர், சோழர், பிற்காலப் பாண்டியர், இஸ்லாமியர், நாயக்கர் அரசுகளின் தலைநகராக விளங்கியது. 18ம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் வசம் சென்றாலும், மதுரையின் கலைகள் அழியவில்லை. ஒவ்வொரு மன்னர்களின் ஆட்சிக் காலத்திலும் கலை, இலக்கியம், பண்பாடு, கலாச்சாரத்தில் மதுரை சிறந்த வளர்ச்சியைப் பெற்றுள்ளது.

"பதியெழுவறியா பழங்குடி மூதூர்'எனச் சிலப்பதிகாரம் கூறுகிறது. இதன் பொருள் என்ன தெரியுமா? தற்போதைய பழமொழியில் கூறப்படும் "மதுரையைச் சுற்றிய கழுதை... வேறெங்கும் போகாது'என்பது தான்.

பலவிதமான வணிகங்களுக்கு மையமாக விளங்கியது மதுரை. மதுரையைச் சுற்றி அழகர்கோயில், திருப்பரங்குன்றம், யானைமலை, சமணமலை, முத்துப்பட்டி, கொங்கர் புளியங்குளம், அரிட்டாபட்டி, கீழவளவு, செட்டிப்புடவில் சமணர்கள் வாழ்ந்த மலைகள் உள்ளன. மதுரையின் சிறப்புகளை ஒரு பக்கத்தில் அடக்கி விட முடியுமா? மதுரை மீனாட்சியம்மன் கோயிலைச் சுற்றி சதுர வடிவில் மிக மிக நேர்த்தியாக, திட்டமிட்டு அமைக்கப்பட்ட நகரம் என்ற பெருமை பெற்றது, நமது மதுரை. கோயிலைச் சுற்றி சதுர வடிவில் தெருக்களும் அமைக்கப்பட்டுள்ளன. தெருக்களிலும் குறிப்பிட்ட தொழில் செய்வோர், ஒரு சமூகமாகவே வாழ்ந்துள்ளனர், என அக்காலப் பரிபாடல் கூறுகிறது. அது மட்டுமா... மதுரை மக்கள், "அறவோர் ஓதும் மறையொலி கேட்டுத் துயில் எழுவர்,'என இறைமைத் தன்மையின் மேன்மையைப் போற்றுகிறது.

மதுரை நகரைச் சுற்றி வானளாவிய கோட்டைகள் அமைக்கப்பட்டிருந்தன. பகைவர்கள் எளிதில் உள்ளே வராத வகையில், பாண்டிய மன்னனின் கொடிகள் காற்றில் அசைந்து பறந்தன. மதிலின் புறப்பகுதியில் பகைவர்களைச் சூழ்ந்து அழிக்க, வீரர்கள் இருக்கவில்லை. அதற்குப் பதிலாக மதில்களில் இருந்து, பகைவர்களை நேரடியாகத் தாக்கும் வகையில், நெருப்பை, மணலை வீசுவது, வெந்நீர் ஊற்றுவது போலத் தானியங்கி ஏற்பாடுகள் இருந்தன. கோட்டையைச் சுற்றி ஆழமான, நீர் நிறைந்த அகழி இருந்தது. அதில் குவளையும், ஆம்பலும் மலர்ந்து செழிந்திருந்தன. இதனால் பகைவர், அதில் முதலை இருக்கும் என்று பயந்தனராம்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த கோட்டையும், அகழியும் ஆங்கிலேயர் காலத்தில் அகற்றப்பட்டன. 1790ல் மதுரையின் முதல் ஆட்சியராக அலெக்ஸாண்டர் மக்லியோட் நியமிக்கப்பட்டார்.

1840இல் ஆட்சியராக இருந்த பிளாக்பர்ன் என்பவர் தான், பழைய நகரமைப்பை மாற்றாமல், புதிய நகராக்கினார். கோட்டையை இடித்து, அகழிகளை அகற்றி, வெளி வீதிகள் அமைத்து, மதுரை நகரை வெளியுலகுடன் இணைத்தார். நாயக்கர் ஆட்சிக் காலத்தில் இருந்தபடியே, ஆங்கிலேயர் காலத்திலும் குறிப்பிட்ட ஜாதியினர் ஒரே பகுதியில் இருப்பதற்கு அனுமதிக்கப்பட்டனர். மாரட் வீதி, வெளிவீதிகள் எல்லாம் ஆங்கிலேயர் காலத்தில் பெயர் சூட்டப்பட்டன. கடை வீதிகள், “அங்காடி வீதிகள்’ எனப்பட்டன. காலையில் கூடும் வீதிகள் “நாளங்காடி’ எனவும், மாலையில் கூடும் வீதிகள், “அல்லங்காடி’எனப்பட்டன. “மதுரை நகரில் ஆறு கிடந்தாற் போல, அகன்ற நெடிய தெருக்கள் அமைந்திருந்ததாக ‘மதுரைக் காஞ்சி’ கூறுகிறது. இப்போதைய தெருக்களில் நடக்கவே முடியவில்லை. ம்ம்ம்... அது ஒரு கனாக்காலம்.

“நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே”எனச் சிவபெருமானை எதிர்த்துப் போரிட்ட நக்கீரருக்குக் காட்சி தந்தது மதுரை மீனாட்சி அம்மன் கோயில் தான்.

*அவ்வையாரின் அறிவைச் சோதிக்க, “சுட்ட பழம் வேண்டுமா... சுடாத பழம்” வேண்டுமா’என முருகப்பெருமான் கேட்டதும், மதுரையில் தான்.

*முருகன் அருளால் குமரகுருபரர் பேசும் திறன் பெற்று, பிள்ளைத்தமிழ் அரங்கேற்றினார்.

* திருவாதவூரார் மாணிக்கவாசகர் எனப் பெயர் பெற்றதும், இங்கே தான்.

“கணவனைக் கள்வன் என நினைத்துக் கொன்ற”பாண்டிய மன்னனையும், மதுரையையும் பழித்துத் தீக்கிரையாக்கினார், கண்ணகி.

பழமையும், புதுமையும் கலந்த நகரான நம்ம மதுரையில், நாம் அறிந்த, கண்ட எத்தனையோ வரலாற்று அடையாளங்களும், நினைவிடங்களும் இக்கால தலைமுறையினருக்குத் தெரியப்படுத்தப்படாமலேயே புதைந்து கிடக்கின்றன. கண் முன் தெரியும் அடையாளங்களைத் தவிர, பல அடையாளங்கள்

இன்னும் அடையாளப் படுத்தப்படாமலேயே உள்ளன. மாமதுரையைப் போற்றும் இத்தருணத்தில், இந்த "அடடே...' அடையாளங்களையும் போற்றுவோம்.

முதல் விமான நிலையம்

1942இல் "ராயல் ஏர்போர்ஸ்' எனும் பிரிட்டிஷ் விமானப் படையினர், மதுரை அருப்புக்கோட்டை சாலையில் விமான தளத்தை உருவாக்கினர். இந்திய விமான கார்ப்பரேஷன் சட்டம் 1953இல் அமலான போது, மத்திய அரசின் கட்டுப்பாட்டில் வந்தது. இந்தியா சுதந்திரம் பெற்ற பின், 1956இல் முதல் விமான நிலையம் ஆரம்பிக்கப்பட்டது மதுரையில் தான்.

பழமையான அலுவலகம்

மதுரை திருமலை நாயக்கர் மகால் அருகேயுள்ள, பத்திரப்பதிவு அலுவலகம், ஆங்கிலேயர் காலத்திலேயே உருவாக்கப்பட்டது. 1862ல், தென் மாவட்டங்களுக்கென முதல் பத்திரப் பதிவு அலுவலகமாக இது உருவாக்கப்பட்டது. கட்டடத்தின் ஒருபுறம் உரிமையியல் நீதிமன்றமாகவும், மறுபுறம் வட்டாச்சியர் அலுவலகமும் செயல் பட்டது. காலையில் பத்திரப்பதிவு அலுவலகமும், மதியத்திற்கு மேல் நீதிமன்றமாகவும் செயல் பட்டதாகவும் சிலர் கூறுவது உண்டு.

இரயிலைக் காணத் திருவிழாக் கூட்டம்

மதுரையில் முதன் முதலாக திருச்சிக்கு 1875 செப்.,1இல் ரயில் இயக்கப்பட்டது. இந்த ரயில்பெட்டிகளும், நீராவி என்ஜினும் இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்டவை. புகையைக் கக்கிக் கொண்டு, பெரும் குரலெடுத்து ஓடியதைப் பார்க்க மக்கள் திருவிழாக் கூட்டமாகக் கூடினர். சிலர், "பேய் வருகிறது'எனப் பயந்து, வீட்டினுள் பதுங்கினர். இரண்டாவது ரயில், மதுரை - தூத்துக்குடி இடையே 1876 ஜன.,1இல் ஓடியது.

ஆங்கிலேயர் காலத்தில், மதுரையில் துவங்கப்பட்ட முதல் பெண்கள் பள்ளி கீழக்குயில்குடியில் உள்ளது. 1924ல் இப்பள்ளி "பிறந்தது'. இது குறித்த கல்வெட்டை இன்றும் அந்தப் பள்ளி தாங்கிக் கொண்டிருக்கிறது.

ஆலன்துரை கல்லறை

"வரி...வட்டி... கிஸ்தி... உனக்கேன் தரவேண்டும்'என வீரபாண்டிய கட்டபொம்மனை "உணர்ச்சிவயப்படுத்திய" நெல்லை அதிகாரி ஆலன் துரையின் கல்லறை மதுரையில் 240 ஆண்டுகளாக நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருக்கிறது. மேலப்பெருமாள் மேஸ்திரி வீதி - சம்பந்தமூர்த்தி தெரு சந்திக்கும் இடத்தில் உள்ள ஐரோப்பியர்களின் கல்லறைத் தோட்டத்தில் தான் ஆலன்துரை கல்லறை உள்ளது. ஆங்கிலேயர் காலத்தில் பணியாற்றிய உயர் அதிகாரிகளும் இங்குதான் தூங்கிக் கொண்டிருக்கின்றனர்.

இது நம்ம மதுரை

* மதுரையில் ஆங்கிலேயர்களின் கட்டுமானத் திறமைக்கு எடுத்துக்காட்டாக இருப்பது ஏ.வி.பாலம். மதுரையின் தென்கரையையும், வடகரையையும் இணைக்கும் முக்கிய பாலமான இது, 1889 டிச.,6இல் திறக்கப்பட்டது. இதைத் திறக்க வருவதாக இருந்த ஆல்பர்ட் விக்டர், மதுரையில் அப்போது காலரா நோய் இருந்ததால், வரவில்லை. இருப்பினும் அவரது நினைவாகப் பாலத்திற்கு "ஏ.வி.'என்ற பெயர் சூட்டப்பட்டது.

* தமிழகத்தின் முதல் ஊராட்சி ஒன்றியம் மதுரையில்தான் துவக்கப்பட்டது 1957ல் "மதுரை வடக்கு பஞ்., யூனியன்' என்ற பெயரில் துவங்கப்பட்டது.

* மதுரையில் அஞ்சல் பை முறை அறிமுகமான போது, முதன் முதலாக அஞ்சல் பை எண் வாங்கியவர் கருமுத்து தியாகராஜன் செட்டியார். தொலைபேசி பயன்படுத்திய முதல் மதுரைக்காரரும் இவர்தான். அவரது தொலைபேசி எண் ஒன்று.

* தமிழகத்தின் முதல் வேலை வாய்ப்பு நிறுவனம், 1946ல், முன்னாள் ராணுவத்தினருக்கு வேலை வாய்ப்பு வழங்குவதற்காக மதுரையில் ஆங்கிலேயரால் துவங்கப்பட்டது.

* இது தவிர, 1998ல் தமிழகத்தின் முதல் சமத்துவபுரமும், 1999இல் முதல் உழவர் சந்தையும் திறக்கப்பட்டது மதுரையில்தான்.

* திருவிழா நகரம் என்றழைக்கப்படும் மதுரையில், மாதந்தோறும் ஏதாவது ஒரு திருவிழா நடந்து கொண்டிருக்கிறது.

* தமிழ் மாதங்களின் பெயர்களில் வீதிகள் அமைந்துள்ள ஒரே நகரம் நம்ம மதுரைதான்.

* ஆசியாவிலேயே மிகப் பெரிய திரையரங்கு என்ற பெருமை பெற்றது மதுரையில் உள்ள தங்கம் திரையரங்கு. தற்போது செயல் படவில்லை.

முதல் சினிமா திரையரங்கம்!

மதுரையின் முதல் சினிமா திரையரங்கு என்ற பெருமை, தெற்கு மாசி வீதியில் உள்ள சிடி சினிமா. 1921இல் இத் திரையரங்கு கட்டப்பட்டது. திரைக்கு முன் ஒருவர் குச்சியுடன் நின்று கொண்டு, உருவங்களைக் குறிப்பிட்டு திரைக்கதையை விளக்குவார். 1933இல் "டாக்கி'என்ற பேசும் படம் வந்தது. இத் திரையரங்கில் அந்தக் கால சூப்பர் ஸ்டார் தியாகராஜ பாகவதர் நடித்த "ஹரிதாஸ்' படம் ஒன்றரை ஆண்டுகள் ஓடி சாதனை படைத்தது. ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணி என்ற படம் தந்த மிகப் பெரிய வெற்றியால் திக்குமுக்காடிய நிர்வாகி வெங்கட கிருஷ்ணய்யர், கீழவெளி வீதியில் சிந்தாமணி திரையரங்கைக் கட்டினார். "தொலைக்காட்சிகளின் ஆதிக்கத்தில் தாக்குப் பிடிக்க முடியாமல், 1999இல் சிடி சினிமா மூடுவிழா கண்டு, இப்போது "பார்க்கிங்'இடமாகப் பார்க்கப் பரிதாபமாக உள்ளது.

தாகம் தீர்க்கும் கிணறு!

மதுரை யானைக்கல் பாலத்தில், வைகையாற்றைக் கடப்பவர்கள் இடது பக்கம் பார்த்தால், ஆற்றில் ராட்சதக் கிணறு ஒன்று இருக்கும். இதற்கும் ஒரு வரலாறு உண்டு. ஆங்கிலேயர் காலத்தில் 1804இல் இது போன்ற கிணறு அமைக்கப்பட்டது. இதிலிருந்து பீப்பாய்களில் நீரை நிரப்பி, குதிரை, மாட்டு வண்டிகளில் விநியோகித்தனர். அந்த ஆண்டிலேயே, வெள்ளப் பெருக்கால், கிணறு காணாமல் போனது. இதனால் இதன் அருகிலேயே இப்போதுள்ள கிணறு உருவாக்கப்பட்டது. அதே போல், 1888இல் ஆற்றின் கல்மண்டபம் அருகே மூன்றாவது கிணறு அமைக்கப்பட்டது.

கடிகாரத்திற்கு வயது 145

மதுரையில், ஆங்கிலேயர் ஆட்சியின் போது 1873இல் அமைக்கப்பட்டதுதான் திருமலை நாயக்கர் மகாலில் உள்ள கடிகாரம். கடிகார சுழற்சிக்காக இழுவைக் குண்டு 60 கிலோ மணியடிக்க உதவும். அழுத்தக் குண்டு 80 கிலோ மற்றும் உதிரி பாகங்களைச் சேர்த்து மொத்த எடை 200 கிலோ. இக்கடிகாரம் இங்கிலாந்திலிருந்து இங்கு கொண்டு வரப்பட்டு, இன்று பழுதாகி, அதற்கு நேரம் சரியில்லாததால் “நினைவுச் சின்னமாக’இருக்கிறது. இன்று இந்த கடிகாரத்திற்கு வயது 145.

காந்திடிகளை அடையாளப் படுத்திய மதுரை

காந்தியடிகளின் “அடையாளமாக” மாறி விட்ட, அரை நிர்வாண விரதத்திற்கு வித்திட்டது மதுரைதான். அந்தத் தீர்க்க முடிவு எடுத்த இடம் இன்றும் அவரது பெருமையைச் சொல்லிக் கொண்டிருக்கிறது. அந்த இடம் 251ஏ, மேலமாசி வீதியில் உள்ள தற்போதைய கதர் கிராமத் தொழில் அங்காடி. 1921 செப்.,21இல் மதுரைப் பொதுக் கூட்டத்திற்கு வந்த போது, பாமர மக்கள் வறுமையில் வாடுவதை நினைத்து அந்த விரதத்தைக் காந்தியடிகள் மேற்கொண்டார்.

மதுரையைத் தாங்கும் ஆல்பர்ட் விக்டர் மேம்பாலம்

மதுரையை வடக்கு - தெற்கு என வைகை ஆறு இரண்டாகப் பிரிக்கிறது. 18ஆம் நூற்றாண்டில் ஆற்றைக் கடந்து வடக்கு - தெற்கு என இருபுறமும் செல்ல வேண்டும். அந்தக் காலகட்டத்தில் வைகையில் எப்போதுமே தண்ணீர் கரைபுரண்டு ஓடும். தற்போது போல் வறண்டு இருக்காது. சுமையைத் தலையிலும், குழந்தையைக் கக்கத்தில் இடுக்கிக் கொண்டும் இடுப்பளவு தண்ணீரில் ஆற்றைக் கடந்து மக்கள் துன்பம் அடைந்தனர். இதையடுத்து வைகையின் குறுக்கே மேம்பாலம் கட்ட, பொறியாளர்களைத் தேர்வு செய்யும் பணியில் பிரிட்டிஷ் அரசு ஈடுபட்டது. இதற்காக, இங்கிலாந்து பொறியாளர்களுக்கு இடையே போட்டி ஒன்றை நடத்தியது. இதில், பொறியாளர் ஆல்பர்ட் விக்டர் தேர்வானார். பாலம் கட்டுவதற்காக அவரை, மதுரைக்கு வரவழைத்தது பிரிட்டிஷ் அரசு. 70ஆயிரம் ரூபாய் மதிப்பில் 16 தூண்களுடன் மேம்பாலம் கட்டப் பொறியாளர் ஆல்பர்ட் விக்டர் வரைபடம் தயாரித்தார். பின், வைஸ்ராய் டிபெரின் 1886 டிச.,8இல் அடிக்கல் நாட்டினார்.


மேம்பாலம் கட்டுவதற்கு முன், கோச்சடை பகுதியில் தடுப்பணை அமைக்கப்பட்டு கால்வாய் வழியாகத் தண்ணீர் வயல்களுக்குத் திருப்பி விடப்பட்டன. 12 மீட்டர் அகலம், 240 மீட்டர் நீளத்தில் 16 தூண்களுடன் மேம்பாலத்திற்கான கட்டுமானப்பணி 1889இல் துரிதமாகத் துவங்கியது. சுட்ட செங்கல், சுண்ணாம்பு, முட்டை வெள்ளைக்கரு, கருப்பட்டி கலவையில் மிகுந்த துன்பத்தின் பேரிலேயே பாலப்பணிகளை கச்சிதமாக முடித்தார் பொறியாளர் ஆல்பர்ட் விக்டர். பின், போக்குவரத்துக்கு திறந்து விடப்பட்டது.

இப்பாலம் எதிர் பார்த்ததை விடச் சிறப்பாகக் கட்டியதால், இப்பாலத்திற்குப் பொறியாளர் “ஆல்பர்ட் விக்டர் மேம்பாலம்' (ஏ.வி. பாலம்) எனப் பெயரிடப்பட்டது. அக்காலகட்டத்தில் பாலத்தின் நடுவே “பேருந்து நிறுத்தம் 'இருந்தது. காரணம், வைகையில் பெருக்கெடுத்து ஓடும் வெள்ளம் மற்றும் மீனாட்சி அம்மன் கோயில், திருப்பரங்குன்றம், அழகர்கோயில் மலையின்

அழகை ஒரே இடத்தில் இருந்து பார்ப்பதற்கு வசதியாகப் பாலத்தில் பேருந்து நிறுத்தம் அமைக்கப்பட்டது. அக்காலத்தில் மக்களின் முதன்மை வாகனங்களாக மாட்டு வண்டி, குதிரை வண்டி மட்டுமே இருந்தது. பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் மட்டுமே கார்களில் வலம் வந்தனர். பாலத்தில் மோதி வாகனம் விபத்தில் சிக்கியதாகச் சரித்திரம் இல்லை. 124 ஆண்டுகளைக் கடந்து, மதுரை மக்களைத் தாங்கி, கம்பீரமாகக் காட்சியளிக்கிறது ஆல்பர்ட் விக்டர் பாலம்.

விழாக்கள் நிறைந்த விழுமிய நகர் மதுரை

மதுரை கோயில் நகரம் மட்டுமல்ல. திருவிழாக்கள் நிறைந்து இருந்ததால், "விழவுமலி மூதூர்'என்று இலக்கியங்களால் பாராட்டப்பட்ட அற்புத நகரம். ஆண்டின் 365 நாட்களில் 294 நாட்கள் திருவிழாக் கோலம்தான். மதுரை விழாக்கள் குறித்து பேராசிரியர் இரா.மோகன் கூறியதாவது: ஒவ்வொரு திருவிழாவும் தீர்த்தம் எனப்படும், நிறைவு நாளை முடிவு செய்து, உற்சவத்தை துவங்கும். அதன்படி சித்திரை மாதத்தில் நடைபெறும் மீனாட்சி திருக்கல்யாணம், கார்த்திகை நட்சத்திரத்தில் துவங்கி 12 நாட்கள் நடைபெறும். நிறைவு நாளான சித்ரா பவுர்ணமியன்று,



கள்ளழகர், வைகையில் இறங்கும் நிகழ்ச்சி நடைபெறும். பின், வைகைக் கரையில் உள்ள மண்டபங்களில் 5 நாட்கள் தங்குவார். இதில் ஒருநாளில் அவர் பத்து அவதார திருமேனிகளால் அலங்கரிக்கப்படுவது, "தசாவதார விழா'. வைகையின் வடகரையில் வைணவர்களும், தென்கரையில் சைவர்களும் மதுரையில் திரண்டு இருப்பது, சைவமும், வைணவமும் சமயத்தின் இருகரைகள்

என்பது போல விளங்கும். இவ்விழாக்களே “சித்திரைப் பெருவிழா’.

வைகாசி மாதம் திருவாதிரை துவங்கி விசாக நட்சத்திரம் வரை 10 நாட்கள் வசந்த உற்சவம் கொண்டாடப்படுகிறது. மீனாட்சி அம்மன் கோயில், சந்நிதி தெருவில் புதுமண்டபம் எனப்படும் வசந்த மண்டபம், இருபுறமும் நீராழி மண்டபம், கிழக்கே வசந்த விழா நீர்த்தொட்டியை, திருமலை நாயக்கர் அமைத்தார். அன்று முதல் அங்கு வைகாசி விழா நடந்து வருகிறது.

இளவேனில் விழா குறித்து கலித்தொகையில் உள்ளது. சித்திரை, வைகாசி ஆகிய இளவேனிற் பருவத்தில், காதல் தெய்வமான காமவேளுக்கு, “வில்லவன் விழா’ கொண்டாடப் பட்டது.

ஆனி மாதம் மகம் நட்சத்திரம் முதல் மூல நட்சத்திரம் முடிய 10 நாட்கள் ஊஞ்சல் உற்சவ விழா நடைபெறும். சொக்கரும், மீனாட்சியும் ஊஞ்சல் மண்டபத்தில் எழுந்தருள்வர்.

ஆடி மாதத்தில் ஆயில்ய நட்சத்திரம் துவங்கி கேட்டை முடிய 10 நாட்கள், “முளைக்கொட்டுத் திருவிழா” நடைபெறும். அக்காலத்தில் இவ்விழாவுக்குப் பின்பே, விவசாயிகள் பணிகளைத் துவங்குவர்.

ஆவணி மாதம், “ஆவணி மூலத் திருவிழா’எனப்படும், புட்டுத் திருவிழா, கல்யானைக்கு கரும்பு தந்த விழா, வலை வீசும் திருவிழா இப்படி 18 நாட்கள் திருவிழாக்கள் நடக்கிறது. ஒவ்வொரு நாளும், மதுரையில் சொக்கநாதர் நடத்திய திருவிளையாடல்களை வெளிப்படுத்துவதாக இருக்கும்.

புரட்டாசியில் 9 நாட்கள் “நவராத்திரி விழா’. அனைத்துக் கோயில்களிலும் “கொலு’அமைத்துக் கொண்டாடும் இவ்விழா முக்கியமான ஒன்று.

ஐப்பசி மாதம் தீபாவளி பண்டிகை. இம்மாதத்தில், முருகனுக்கு உகந்த “கந்த சஷ்டி” நடைபெறும். மீனாட்சி கோயில் எதிரே புதுமண்டபத்தில், 6 நாட்களும் கன்னிப் பெண்கள் கூடி, “கோலாட்டத் திருவிழாக்” கொண்டாடுவர். இம்மாதத்தில் பவுர்ணமி அன்று முடிவுபெறும் 5 நாட்கள், “பவித்ர உற்ஸவம்” கொண்டாடுவர்.

கார்த்திகையில் "தீபத் திருவிழா"சதய நட்சத்திரத்தில் துவங்கி, திருவாதிரை நட்சத்திரம் வரை 10 நாட்கள் நடைபெறும். வீடுகளில் தீபம், வீதிகளில் "சொக்கர் பனை"ஏற்றி மகிழ்வர். கார்த்திகை விண்மீனை, "அறுமீன்"என நற்றிணையில் "அறுமீன் சேரும் அகலிருள் நடுநாள், மறுகு விளக்குறுத்து மாலை தூக்கி"எனக் கூறப்பட்டுள்ளது.

மார்கழியில் அஷ்டமி நாளில், சொக்கநாதரும், மீனாட்சி அம்மனும், மதுரை வீதிகளில் அனைத்து உயிர்களுக்கும் படியளக்கத் தேரில் உலா வருவர். பெண்கள் பாவை நோன்பு இருப்பர்.

தை மாதத்தில் பொங்கல் விழா, அறுவடை விழாவாகத் துவங்கிப் பின், வளத்தைக் குறித்த விழாவாக மாறியது. திருவாதிரை நட்சத்திரத்தைத் தீர்த்தமாகக் கொண்டு 12 நாட்கள் நடைபெறும் இவ்விழாவின் நிறைவில், தெப்பத்திருவிழா நடைபெறும். அன்று சுவாமி, அம்மன், தெப்பத்தில் சுற்றி மைய மண்டபத்தில் எழுந்தருள்வர்.

மாசி மாதம், கொண்டாடும் 'மகாசிவராத்திரி' முக்கியமானது. பங்குனி மாதம் 'கோடை வசந்த விழா' 10 நாள் நடைபெறும். பாண்டியர் காலத்தில், சுவாமியும், அம்மனும், திருப்புவனத்தில் எழுந்தருள்வர். தற்போது 10ம் நாளில், திருவாப்புடையார் கோயிலில் எழுந்தருள்கின்றனர்.

பண்டைய நாட்களில் பெருவழக்காக இருந்த விழா, "வெறியாட்டு விழா'. முருகனுக்காக எடுக்கப்படும் இவ்விழா குறித்துத் திருமுருகாற்றுப்படை கூறுகிறது. இதுபோல இந்திரனுக்கு எடுக்கப்படும் இந்திர விழா, பூம்புகாரில் நடந்ததாகக் கூறப்பட்டாலும், மதுரையிலும் கொண்டாடியதாகச் சின்னமனூர் செப்பேடு கூறுகிறது. இதுபோல பலவிழாக்கள் மதுரையில் சமயம் சார்ந்ததாகவே நடந்தன. விழாக்களின் போது, பாட்டும், கூத்தும், விருந்துகளும் நிறைந்து மதுரை மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியதையும் அறிய முடிகிறது.

7 இரண்டு மன்னர்களுக்குள் சண்டை

தோற்றவனிடம் வென்றவன் சொன்னான்.

நான் கேட்கும் ஒரு கேள்விக்கு, சரியான பதிலைச் சொன்னால், உன் நாடு உனக்கே”

கேள்வி: ஒரு பெண், தன் ஆழ்மனதில் என்ன நினைக்கிறாள்?

(வென்ற மன்னனின் காதலி, அவனிடம் இக் கேள்வியைக் கேட்டு விட்டு, விடை சரி என்றால் தான் நமக்குத் திருமணம் என்று சொல்லியிருந்தாள்).

தோற்ற மன்னன், பலரிடம் கேட்டான். விடை கிடைக்கவில்லை. கடைசியாகச் சிலர் சொன்னதால், ஒரு சூனியக்காரக் கிழவியிடம் சென்று கேட்டான். அவள் சொன்னாள், விடை சொல்கிறேன். அதனால் அந்த மன்னனுக்குத் திருமணம் ஆகும். உனக்கு உன் நாடு கிடைக்கும். ஆனால் எனக்கு என்ன கிடைக்கும் ?

அவன் சொன்னான், “என்ன கேட்டாலும் தருகிறேன்”



சூனியக்காரக் கிழவி, விடையைச் சொன்னாள். “ஒரு பெண் தன் சம்பந்தப்பட்ட முடிவுகளைத் தானே எடுக்க வேண்டும் என்பதே அவளின் ஆழ்மனது எண்ணம்”

இப்பதிலை அவன் வென்ற மன்னனிடம் சொல்ல, அவன் தன் காதலியிடம் சொல்ல, அவர்கள் திருமணம் நடந்தது. இவனுக்கு நாடும் கிடைத்தது. அவன் சூனியக்காரக் கிழவியிடம் வந்தான். வேண்டியதைக் கேள் என்றான். அவள் கேட்டாள். "நீ என்னைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும்". கொடுத்த வாக்கைக் காப்பாற்ற அவன் ஒப்புக் கொண்டான். உடனே கிழவி ஒரு அழகிய தேவதையாக மாறிக் காட்சி அளித்தாள்.

அவள் சொன்னாள், "நாம் வீட்டில் தனியாக இருக்கும் போது நான் கிழவியாக இருந்தால், உன்னுடன் வெளியே வரும்போது தேவதையாக இருப்பேன். ஆனால் நான் வெளியே உன்னுடன் வரும் போது, கிழவியாக இருந்தால், வீட்டில் உன்னுடன் அழகிய தேவதையாக இருப்பேன். இதில் எது உன் விருப்பம்?" என்றாள். அவன் சற்றும் யோசிக்காமல் சொன்னான். "இது உன் சம்பந்தப்பட்ட செய்தி, முடிவை நீ தான் எடுக்க வேண்டும்"என்று அவன் சொன்னான். "முடிவை என்னிடம் விட்டு விட்டதால், நான் எப்போதும் அழகிய தேவதையாக இருக்கத் தீர்மானித்து விட்டேன்.!" என்றாள் அவள்.

ஆம்! பெண், அவள் சம்பந்தப்பட்ட முடிவுகளை அவளே எடுக்கும் போது, தேவதையாக இருக்கிறாள். முடிவுகள், அவள் மீது திணிக்கப்படும் போது, சூனியக்காரக் கிழவியாகி விடுகிறாள். அனைவரும் புரிந்து செயல்படுங்கள்.

8 தமிழ் வளர்த்த அறிஞர்கள்

தமிழை வளர்க்க அரும் பாடுபட்ட தமிழறிஞர்கள் சிலரை நினைவு கூர்வோம்!

1. கடலூர் பலராம அய்யர்
2. பி.ஸ்ரீ ஆச்சார்யா
3. நரசிம்மலு நாயுடு
4. சொக்கலிங்க அய்யா (1856 - 1931)
5. பா.வே.மாணிக்க நாயகர்
6. சுவாமி ஞானப்பிரகாசர்
7. சி.வை.தாமோதரம் பிள்ளை
8. ஆறு.அழகப்பனார்
9. ச.மெய்யப்பனார்
10. சுப்பிரமணிய முதலியார்
11. பத்மநாபய்யர்
12. க.த.திருநாவுக்கரசு
13. ச.அகத்தியலிங்கனார்
14. ரா.இளங்குமரனார்
15. ச.வே. சுப்பிரமணியனார்
16. தமிழண்ணல்
17. கல்கி
18. வ.அய்.சுப்பிரமணியம்
19. ரா.சாரங்கபாணியார்
20. வ.சுப.மாணிக்கனார்

21. ஞானசம்பந்தனார்
22. ராமநாதன் செட்டியார்
23. சித்பவானந்தர்
24. ஏந்தல் மங்கலங்கிழார்
25. சிவஞான பாலைய அடிகளார்
26. கா.பொ.ரத்தினம்
27. மு.வரதராசனார்
28. சி.இலக்குவனார்
29. அ.சிதம்பரநாதனார்
30. தமிழ்க்கடல் ராய.செசாக்கலிங்கனார்
31. பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார்
32. மகாவித்துவான் மே.வீ.வேணுகோபால் பிள்ளை (1896 - 1985)
33. ரா.பி.சேதுப்பிள்ளை
34. பண்டிதர் அருணகிரிநாதர்
35. ந.சி.கந்தையாபிள்ளை
36. திரிசிரபுரம் ரா.பஞ்சநாதம்பிள்ளை
37. பேராசிரியர் வேங்கடராஜூலு ரெட்டியார்
38. சொ.முருகப்பா
39. பூதலப்பட்டு ஸ்ரீராமுலு ரெட்டி
40. சதாசிவப் பண்டாரத்தார்
41. பேராசிரியர் மயிலை சிவமுத்து
42. சாமி சிதம்பரனார்
43. அவ்வை.சு.துரைசாமிப் பிள்ளை
44. ஞா.தேவநேயப் பாவாணர்
45. கி.ஆ.பெ.விசுவநாதனார்
46. அண்ணாமலைச் செட்டியார்
47. கோவிந்தசாமி

48. தமிழ்ச் செம்மல் கா.நமச்சிவாய முதலியார்
49. பாண்டித்துரைத் தேவர்
50. மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை
51. கா. சுப்பிரமணியபிள்ளை
52. வேங்கடசாமி நாட்டார்
53. உமாமகேசுவரன் பிள்ளை
54. செல்வ கேசவராய முதலியார்
55. தஞ்சை ஆபிரகாம் பண்டிதர்
56. தண்டபாணி தேசிகர்
57. தணிகை மணி
58. பூரணலிங்கம் பிள்ளை
59. சுவாமி ஞானப்பிரகாசர்
60. மயிலை சீனி வேங்கடசாமி*
61. சுத்தானந்த பாரதியார்
62. சாமிநாத சர்மா
63. கந்தையாபிள்ளை
64. ஆர்.கே.சண்முகம் செட்டியார்
65. பெ.நா.அப்புஸ்வாமி
66. பொ.திருகூட சுந்தரம் பிள்ளை
67. பாவேந்தர் பாரதிதாசன்
68. பாபநாசம் சிவன்
69. அறிஞர் வ.ரா.,
70. கோவைக்கிழார் ராமச்சந்திரன் செட்டியார்
71. ராமலிங்கம் பிள்ளை
72. திரு.வி.க.,
73. மகாகவி பாரதியார்
74. வ.வே.சு. ஐயர்


75. நாவலர் சோமசுந்தர பாரதியார்
76. ராஜாஜி
77. சாயுபு மரைக்காயர்
78. மு.ராகவையங்கார்
79. மறைமலை அடிகள்
80. தேசிக விநாயகம் பிள்ளை
81. சதாவதானி செய்குத்தம்பி பாவலர்
82. பம்மல் சம்பந்த முதலியார்
83. வ.உ.சிதம்பரனார்
84. நா.கதிரைவேற்பிள்ளை .
85. பாம்பன் சுவாமிகள்
86. பரிதிமாற் கலைஞர்
87. சங்கரதாஸ் சுவாமிகள்
88. சோழவந்தான் அரசஞ் சண்முகனார் ..
89. உ.வே.சா.,
90. சுவாமி விபுலானந்தர்
91. ஆறுமுக நாவலர்
92. வீரமாமுனிவர்
93. அறிஞர் அண்ணா
94. ம.பொ. சிவஞானம்
95. வெ. அரங்கராசன்
96. க. ராசேந்திரன்
97. பாவலர். செல்லன்
98. இ.கி. ராமசாமி
99. இரா. மோகன்
100. சாலமன் பாப்பையா

9 கடன் கொண்டார் நெஞ்சம்போல

தமிழ் இலக்கியத்தில் பல பாடல்களின் ஆசிரியர் பெயர் அறிய இயலாமல் இருக்கின்றன. அவற்றில் பெரும்பாலான பாடல்கள் “தனிப்பாடல் திரட்டு “என்ற பெயரில் தொகுக்கப்பட்டுள்ளன.

“தனிப்பாடல் திரட்டு”என்பது பல்வேறு புலவர்கள் இயற்றிய தனிப் பாடல்களைத் தொகுத்து உருவாக்கப்பட்ட ஒரு இலக்கியத் தொகுப்பு ஆகும். சில பாடல்கள் அறிமுகம் இல்லாத புலவர் ஒருவரால் எழுதப்பட்டிருக்கும். ஆனால் அப்பாடல்களை எல்லாம் புகழ்பெற்ற புலவர்கள் பாடியதாக மக்கள் நம்பி வருகின்றனர். அவற்றில் ஒரு பாடல்தான் “கடன் கொண்டார் நெஞ்சம் போலும் கலங்கினான் இலங்கை வேந்தன்”என்ற பாடல்.

“கடன் கொண்டார் நெஞ்சம் போலும் கலங்கினான் இலங்கை வேந்தன்”என்ற அடியைக் கம்பன் பாடியதாகக் கூறுவதுண்டு. உண்மையில் கம்பராமாயணத்தில் இப்படியொரு பாடலே இல்லை. இப்பாடலைச் சீர்காழி அருணாசலக் கவிராயர் பாடியதாகச் சிலர் கூறுவர். இது அவருடைய பாடலும் இல்லை. பின்பு யார்தான் இப்பாடலைப் பாடியது? “விநோதரச மஞ்சரி “என்னும் நூலில் “பயனில் உழவு “என்ற தலைப்பில் உள்ள கட்டுரைப் பகுதியில்தான் இப்பாடல் இடம் பெற்றுள்ளது. “விநோதரச மஞ்சரி” என்பது அட்டாவதானம் வீராசாமி அவர்கள் எழுதிய நகைச்சுவைக் கட்டுரைகள் நிறைந்த நூல் ஆகும். இந்நூலில் ‘பயனில் உழவு’, ‘கற்பு நிலைமை’, ‘சிறு கூனன் கதை’ மற்றும் ‘ஔவையார் சரித்திரம்’ உள்ளிட்ட 20 தலைப்புகளில் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார் அவர்களின் முன்னுரையுடன் 1958 ஆம் ஆண்டு இந்நூல் வெளிவந்தது.



"விடங்கொண்ட மீனைப் போலும்
வெந்தழல் மெழுகைப் போலும்
படங்கொண்ட பாந்தள் வாயின்
பற்றிய தேரை போலும்
திடங்கொண்ட இராம பாணம்
செருக்களத் துற்ற போது
கடன்கொண்டார் நெஞ்சம் போலும்
கலங்கினான் இலங்கை வேந்தன்"

(வித்துவான் அட்டாவதானம் வீராசாமி, விநோதரச மஞ்சரி)

இராமனுக்கும், இராவணனுக்கும் கடும்போர் நடைபெற்றது. அப்போது இராமன் விட்ட அம்பு இராவணனின் நெஞ்சைத் தைத்தது. இராமனின் அம்பு இராவணனின் நெஞ்சைத் தைத்ததும் இராவணனின் மனநிலை எப்படி இருந்தது தெரியுமா? நஞ்சு உண்ட மீன் எப்படித் துடிக்குமோ, நெருப்பில் விழுந்த மெழுகு எப்படி உருகுமோ, பாம்பின் வாயில் சிக்கிய தேரை என்ன பாடுபடுமோ, கடன்பட்டவர் எப்படிப் பதைபதைப்பார்களோ, அப்படிப்பட்ட நிலையில்தான் இருந்தது இலங்கை வேந்தன் இராவணனின் மனநிலை.

இப்பாடலில் வரும் ‘கடன்கொண்டார் நெஞ்சம் போலும்’ என்பது வழக்கில் ‘கடன்பட்டார் நெஞ்சம் போல’ என மாறி வழங்குகிறது.

அக்காலத்தில் ஒரு கொடுமையான வழக்கம் இருந்தது. அதாவது வாங்கிய கடனைக் கட்ட முடியாதவர்களைச் சுற்றிக் கடனளித்தவர் பொதுவிடத்தில் ஒரு வட்டம் வரைந்து விட்டுச் சென்று விடுவார். கடனைத் தரும்வரை அவர் அக்கட்டத்தை விட்டு வெளிவர இயலாது. கடனைத் திருப்பிப் பெற எல்லா முயற்சிகளும் தோற்ற பிறகே கடனளித்தவர் செய்யும் செயல் இதுவாகும். இந்நிலைக்கு ஆளாகும் கடன்காரர்கள் இறந்ததற்குச் சமம். கடன்பட்டவர் எதிர் கொள்ளும் இந்நிலையை எதிர்கொண்டு கலங்கி நின்றான் இலங்கை வேந்தன் என்று பாடியுள்ளார் புலவர். இப்புலவர் மட்டும் இப்போது இருந்திருந்தால், இந்தப் பாடலைக் கொஞ்சம் மாற்றிப் பாடியிருப்பார்.

“கடன்கொடுத்தார் நெஞ்சம் போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்”என்று பாடியிருப்பார். ஆம், இக்காலத்தில் கடன் பெற்றவர்கள் எல்லோரும் கவலையின்றி மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். கடன் கொடுத்தவர்கள்தான் கவலையோடும், கண்ணீரோடும் இருக்கிறார்கள். காலம் மாறிப் போச்சு.

10 வள்ளல் அழகப்பரின் பன்முகத்தன்மை

காரைக்குடி என்றாலே கொப்பாத்தா அருளும், அழகப்பன் கொடையும், நகரத்தார் சான்றோர் பெருமக்களும் நினைவு கூறுவதில் வியப்பில்லை. குறிப்பாக "குறியெதிர்ப்பை நீரதுடைத்து" என்று ஈயாமல், ஊருணி நீராய் தன் செல்வம் முழுமையும் கல்விக்காக ஈந்தவர் வள்ளல் அழகப்பர். நம் தமிழ்நாட்டில் கடை ஏழு வள்ளல்கள் பற்றியும் அவர்களின் கொடை மடம் பற்றியும் தமிழ் இலக்கியங்கள் பகர்கின்றன. காரைக்குடி பகுதியில் தொழில் கூடங்கள் ஆகட்டும், வணிக நிலையங்களாகட்டும் அனைத்திலும் அழகப்பர் நிழற்படம் தொங்கும். தங்கள் தாய் தந்தையர் சாமி படங்கள் நடுவே வள்ளலை வைத்துப் போற்றுவது அவர் ஏற்றிய கல்வி விளக்கால் தான். "அறிவுக்கொடை மடம்"என்ற முரண் வள்ளல் அழகப்பரின் செயலே எடுத்துக்காட்டு. தன் வீட்டையும் மகளிர் கல்விக்காக ஈந்தார் அழகப்பர்.

அழகப்பர் கல்விக்கூடங்களை நிறுவும் போது இங்கிலாந்தின் மிகப்பெரிய பல்கலைக்கழகங்களின் அமைப்பை வைத்து நிறுவினாராம். காரைக்குடிக்கு மத்திய சர்க்கார் மின் வேதியியல் நிறுவனம் நிறுவ 600 ஏக்கர் இடமும் 10 லட்சம் நிதியமும் தேவை என்று அறிவித்த முதல் நாளே பிரதமர் நேருவின் வீட்டுக் கதவைத் தட்டி அதுவும் இரவு நேரத்தில் தட்டித் தந்து பாராட்டு பெற்றவர். அவரது கொடைகளைப் பட்டியலிட்டால் புத்தகங்கள் பல வேண்டும்

ஆயினும் அவரது பன்னாட்டு பேச்சுக்கள், மாணவர்களிடம் கலந்துரையாடியது, உலக ஆளுமைகளுடன் பயணித்தது அறிய

அழகப்பா பல்கலைக்கழக அருங்காட்சியகம் செல்ல வேண்டும்.

"எனது மகிழ்வு எம் கல்லூரியில் கல்வி ஒளி பெற்று சிறந்த சான்றோராகும் மாணவர்கள் மகிழ்வில் உள்ளது" என்பது அவரது பேச்சு. பேராசிரியர் வ.சு.ப. மாணிக்கனார் "கொடைவிளக்கு" என்று நூல் இயற்றி வள்ளலுக்கு சிறப்புச் செய்தார்.

"கோடி கொடுத்த கொடைஞன் குடியிருந்த
வீடும் கொடுத்த விழுத்தெய்வம்"

என்று போற்றுவர் காரைக்குடி மக்கள். வ.சு.ப., பேராசிரியர்கள், தேசிகனார், சாரங்கபாணி போன்ற எண்ணற்ற சான்றோர்களைத் தேடித் தேடி ஆசிரியராய் நியமித்தார்கள். அவர்கள் தமிழ்க்கடல் போன்ற சான்றோர்களை "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்ற நிலையில் வரவழைத்தனர்.

அலுவலகங்கள், பொய்கைகள் பழத் தோட்டங்கள் விளையாட்டுத் திடல்கள் என்று ஆயிரக்கணக்கான ஏக்கரில் இன்று பரந்து நிற்கிறது. அழகப்பாக் கல்வி நகர். பல புலவர்கள் வள்ளல் அழகப்பரைப் பாடிப் புகழ் அடைந்தனர். கவியரசர், முடியரசர் பாரி இனி இருவர் என்று பாடுவார்.

"நனிசெல்வம் ஆங்காங்கு கல்விக்காக
நயந்தளித்த பேருள்ளம் கண்ட நாட்டார்
நுனிமூக்கிற் சுண்டுவிரற் சேர்த்து முன்னை
நூல் இன்றி யாங்கணும் கண்டதில்லை
இனி நமக்கு பாரியென இருவர் கண்டோம்
என வியந்தார் அச்செம்மல் விழைவே போல
இனி தெனப்பல் கலைக்கழகம் ஆதல் வேண்டும்.
இரு நிலத்தில் அவர் புகழும் ஓங்க வேண்டும்"

என்று பாடினார். அவரது பாடல் இன்று மெய்யானது.

வள்ளல் அழகப்பர் தந்தையைத் தொழும் தனையர். இறைநிறை மாந்தர், செய்ந்நன்றி அறிபவர். அவரது சமையல்காரர்,

ஊழியர்களின் பெயர்களில் கட்டிடங்கள் அமைத்தார். விடுதிகள் அமைத்தார். பல்துறைச் சான்றோர் வியக்கும் வண்ணம் அவரது துறைசார் நிகழ்வுப் பகிர்வுகள் இருக்கும். அரசியலிலும், ஆன்றோர் மதிக்கும் நல்நட்புகளைப் பேணியவர். வாடிய பயிர் கண்டபோது வாடினார் வள்ளலார். வளர்ந்த செடி வீழாமல் காத்தான் வள்ளல் பாரி. மயிலுக்கு போர்வை தந்தான் பேகன். ஆனால் பூங்கொடிகள் பயில்வதற்கு இல்லம் தந்தான் அழகப்ப வள்ளல்.

தமிழுக்குத் தனி இருக்கை. அவர் கல்விக் கூடத்தில் கல்லூரியில் பதிப்பகம் கண்டு, அதில் 'கம்பனில் சிவன்', 'வில்லியில் சிவன்' என்ற ஆய்வு நூல்கள் வெளிவர வகை செய்தார்.

"அழகப்ப நகர்"என்ற பகுதி அவரது பெருமை பேசச் சான்றாய் உள்ளது அந்தச் சாலையில் நடைப் பயிற்சி செய்பவர்கள் மனதில்

"அள்ளி அள்ளி வழங்குதற்கு கையை ஈந்தான்
அழகாகப் பேசுவதற்கு வாயை ஈந்தான்
உள்ளம் எனும் ஒரு பொருளை உரத்துக்கீந்தான்
வெள்ளமென வருநிதியம் வாழும் வீடு
வினை முயற்சி அத்தனையும் கல்விக்கீந்தான்
உள்ளதென ஒன்று இல்லை அந்த போதும்
உயிருளதே கொள்கவெனச் சாவுக்கீந்தான்"

என்ற முடியரசனாரின் பாடலும்

"அன்பினால் அழகப்பரின் அரும்பணி
போற்றி செய்வோம்"

என்றதேசிகனார் வரிகளும் வருவது தவிர்க்க இயலாது. வள்ளலுக்குப் பாடல் தந்த தமிழ் வள்ளல்களான வ.சு.ப.மாணிக்கனாரையும், முடியரசனாரையும் நினைக்கும் வண்ணம், கலையரங்கங்களும் பல்கலைகழகத்தில் அமைந்துள்ளது சிறப்பாகும். அழகன், அழகப்பன் அருட்பணிகளை அடுத்த தலைமுறைக்கும் கடத்து வோம். வாழ்க அவர் புகழ்! வளர்க அவரது கொடைச் சிறப்பு!.

11 கவலை தீர்க்கும் மருந்து, குழந்தை

குழந்தை கவலையைத் தீர்க்கும் மருந்தாகவும் அமைகின்றது.

செறிதொடி செய்திறந்த கள்ளம் உறுதுயர்
தீர்க்கும் மருந்(து)ஒன்[று] உடைத்து [குறள்.1275]

பொருள் உரை விரிவாக்கம்

நிறைவாக இரு கைகளிலும் வளையல்களை அணிந்த என் துணைவி நான் - மட்டும் உணரும்படி கள்ளத்தனம் மிக்க ஒரு குறிப்பினைச் செய்து காட்டிவிட்டு நகர்ந்து சென்றுவிட்டாள். அவள் செய்துகாட்டிய அந்தக் கள்ளத்தனமான குறிப்பினில் எனது மிகுதியான துன்பத்தைத் தீர்க்கும் மருந்து ஒன்று உண்டு என்பதைத் தெரிவித்திருக்கிறாள்.

நுண்விளக்க உரை

இந்தக் குறளில் வரும் அவனது துணைவி தாய்மைப் பேறு அடைந்திருக்கிறாள் என்பதையும் அண்மையில் அவளுக்கு வளைகாப்பு என்னும் தாய்மைப் பேறு அடைந்தவரை மகிழ்ச்சிப்படுத்தும் ஒரு நற்பயன் சடங்கு நிகழ்ந்திருக்கிறது என்பதையும், வளைகாப்பு நிகழ்வின் போது இரு கைகளிலும் அணிவிக்கப்பட்ட நிறைந்த வளையல்களுடன் இருந்த தலைவி என்னும் பொருளில் அமைந்த செறிதொடி என்னும் சீர்வழியாகத் திருவள்ளுவர் மிகவும் நுட்பமாகத் தெரிவிக்கின்றார்.

தனது துணைவியின் வயிற்றில் வளரும் குழந்தை தனது மிகுந்த துயரத்தைத் தீர்க்கும் மருந்து என்று துணைவன் நுட்பமாகக் குறிப்பிடுகின்றான்.

ஒரு குழந்தை துணைவன் துணைவி ஆகிய இருவரது மிகு கவலைகளைத் தீர்க்கும் மருந்தாக அமைகின்றது; பெற்றோர்க்கு மகிழ்ச்சியைத் தருகின்றது என்ற உலகியல் உளவியல் உண்மை யினை இந்தக் குறளில் பதிவு செய்துள்ளார்.

இந்தக் கருத்தாக்கம் உலகம் முழுவதும் உள்ள பெற்றோர்க்கும் குழந்தைகளுக்கும் மிகச் சரியாகப் பொருந்தும் தன்மையது. உலகம் முழுமைக்கும் பொருந்தும் தன்மை உடைய கருத்தாக்கங்களை உரைக்கும் உயர்வால் திருக்குறள் உலக நூல் என்பது இந்தக் குறளின்வழியும் நிலைநாட்டப்படுகின்றது.

பழி பிறங்காப் பண்புடை மக்களால் வரும் பயன் அறம் உணர்த்தும் அகச்சான்று

"எழுபிறப்பும் தீயவை தீண்டா, பழிபிறங்காப்
பண்புடை மக்கள் பெறின்" (குறள்.62]

பொருள் உரை விரிவாக்கம்

பழியான வழிகளில் செல்லாத பண்புமிகு மக்களை ஒருவன் பெற்றால், ஏழு பிறப்புக்களிலும் அவனைத் தீயன தொடமாட்டா.

பண்பு உடைய மக்களைப் பெற்றவனை ஏழு பிறப்புக்களிலும் தீயவை தொடமாட்டா என்னும் பயன் விளைகிறது என்பது இந்தக் குறள்வழிக் கண்டறிய முடிகின்றது. ஓர் எளிய பொருளும் மிக உயர்ந்த பொருளாகும். குழந்தைகளால் ஓர் எளிய பொருளும் மிக உயர்ந்த பொருளாக மடைமற்றம் பெறும். அஃதாவது, கூழும் குழந்தைகளால் அமிழ்து ஆகும்

அறம் உணர்த்தும் அகச்சான்று

"அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்" (குறள் - 64)

பொருள் உரை விரிவாக்கம்

தமது குழந்தைகளுடைய பிஞ்சுச் சிறுகைகளால் அளாவப்பட்ட கூழும் இனிய சுவை மிக்க அமிழ்தை விட மிகவும் இனியதே. காரணம் பெற்றோர் தமது குழந்தைகளைத்

தமது உயிர்களினும் மேலாகக் கருதிக் குழந்தைகளிடம் அன்பு செலுத்துவதால் மழலைக் குழந்தைகள் எதைச் செய்தாலும் அது பெற்றோர்களுக்கு மிகவும் பிடிக்கும்; அது அவர்களுக்குப் பெரும் மகிழ்ச்சியைக் கொடுக்கும். குழந்தைகளின் மழலைச் சொற்கள் தவழ்ந்து வரும் அழகு நடையழகு கள்ளம் கபடமற்ற சிரிப்பு, புன்னகைக் குறும்புகள், சிறு சேட்டைகள் போன்ற ஒவ்வொன்றையும் பெற்றோர்கள் கண்டு மகிழ்வார்கள் பெருமைப்படுவார்கள். பெருமிதம் கொள்வார்கள். அவற்றை எல்லாம் நண்பர்களிடமும், உறவினர்களிடமும், மகிழ்ச்சியோடு சொல்லிச் சொல்லி மகிழ்வார்கள். மனம் நெகிழ்வார்கள்.

குழந்தைகள் மீது இத்துணை அன்பையும் பற்றையும் கொள்வதால்தான் குழந்தைகளின் பிஞ்சுச் சிறு கைகள் அளவளாவிய எளிய கூழும் கூட மிக உயர்ந்த அமிழ்து போன்று மடைமாற்றம் பெறுகிறது எனத் திருவள்ளுவர் பகர்வதைப் பார்க்கின்றோம்."

இந்த ஆய்வுக் கட்டுரை வழியான கண்டுபிடிப்புக்கள்

1.குழந்தை செல்வம் எனப் போற்றப்படுதல்

2.ஆண் குழந்தைகளும் பெண் குழந்தைகளும் சமம்

3.குழந்தையால் ஓர் எளிய பொருள் உயர்ந்த பொருள் ஆதல்.

4.குழந்தையின் மழலைச் சொல், குழல் இசையை விடவும் யாழ் இசையை விடவும் இனிது ஆதல்.

5.குழந்தை தானே ஓடி வந்து பெற்றோரது மெய் தீண்டின், பெற்றோர் உடல்கட்குப் பேரின்பம் பயத்தல்

6.குழந்தைகள் பெற்றோரது மிகுந்த துயரங்களைத் தீர்க்கும் மருந்து ஆதல்,

7.மக்கள் பேறு மனைக்கு இன்றியமையாதது ஆதல்

8.ஆண் குழந்தைக்கும் பெண் குழந்தைக்கும் கல்வி கற்கச் சம உரிமை அளித்திருந்தமை

9.பெற்றோர்கள் வறுமையில் வாடினும் குழந்தைகள், அவர்களுக்குச் செல்வங்கள் ஆதல்

10.குழந்தைகளால் பெற்றோர்க்கு இனிமை, இன்பம், மகிழ்ச்சி கிடைத்தல்

11.குழந்தைகள் தங்களது பெற்றோருக்குச் சமுதாய மதிப்பைப் பெற்றுத் தருதல்.

திருக்குறள் உலக நூல்

☞குழந்தைகளை இவர்களால்தான் சிறப்புறவும் பண்பு நலன் மிக்கவர்களாகவும் வளர்க்க முடியும் என்ற குறிப்பு ஏதும். திருக்குறளில் இல்லை.

☞இன்னின்ன குழந்தைகள்தான் சிறப்பாகவும் பண்பு நலன் மிக்கவராகவும் வளர முடியும் என்ற வரையறையும் திருக்குறளாம் உலகப் பொதுமறையில் இல்லை.

☞இன்னின்ன குழந்தைகள்தான் சிறப்பாகவும் பண்பு நலன்கள் மிக்கவர்களாகவும் வளர்வார்கள் என்ற குறிப்பும் திருக்குறளில் எங்கும் இல்லை.

☞திருவள்ளுவர் வரையறுத்த குழந்தை வளர்ப்புச் சிந்தனைகள் என்னும் இந்த ஆய்வுக் கட்டுரைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட குறட்தரவுகளில் உள்ள திருவள்ளுவரின் குழந்தை வளர்ப்புச் சிந்தனைகள் என்பன,

☞சாதி, மதம், இனம், மொழி, நிறம், உருவம், ஊர், கட்சி. நாடுகள், ஆண், பெண், இளையோர், முதியோர். மூன்றாம் பாலினத்தர் மாற்றுத் திறனாளர்கள் போன்ற அனைத்து இயற்கை செயற்கை எல்லைகளை எல்லாம் கடந்து நிற்கின்றன.

☞அவை உலகப் பொதுமையியல் சார்ந்து நிற்கின்றன. உலகம் முழுமைக்கும் பொருந்தும் பொருத்தப்பாடு உடையன.

☞எனவே, திருவள்ளுவர் வரையறுத்துத் தந்த உயர்ந்த இச்சிந்தனைகள் எல்லாம் திருக்குறள் உலக நூல் என்பதை நல்லபடி மெய்ப்பித்துக் காட்டுகின்றன.

குழந்தைகள் பற்றிய பழமொழிகளும் விழுமிய பொன்மொழிகளும்

- குழந்தைகள் நிறைந்த வீட்டைச் சயித்தான் ஆள்வது இல்லை.
  - குர்திசுத்தானம்

- வீடு என்று இருந்தால் மூன்று குழந்தைகளாவது இருத்தல் வேண்டும். - அங்கேரி

- இளமையிலே குழந்தைகள் நம் கைகளுக்கு வலி அளிக்கும்; முதுமையிலே மனதிற்கு வேதனையளிக்கும்.
  - ஐரோப்பிய நாடோடிகள்

- தம்மோடு விளையாடிய பிறகுதான் பெற்றோர்கள் குழந்தையைத் தங்கள் குழந்தையாகக் கணக்கிட வேண்டும். -ஆப்கானிசுத்தானம்

- நன்றி அற்ற மகன் தந்தையின் முகத்திலுள்ள பரு. அதை அப்படியே விட்டிருந்தால் அழகில்லை; கிள்ளி எறிந்தால் வலி.
  -செருமன்

- குழந்தைகள் இல்லாமல் வாழ்பவன் தொல்லைகளை அறியான். குழந்தைகள் இல்லாமல் மரிப்பவன் மகிழ்ச்சியை அறியான். தாய் தனது குழந்தையைத் தழுவினால், அனாதைக் குழந்தையை ஆண்டவர் தழுவிக் கொள்கிறார். - போலந்து

- குடியானவனுடைய குழந்தைகள் அவனது செல்வங்கள்: களவாணியின் குழந்தைகள் அவனது கடன்கள்: பிரபுவின் குழந்தைகள் திருடர்கள் (முற்காலத்தில் பிரபுக்கள் குடியானவர்களைத் துன்புறுத்தி, நில புலன்களைத் தாங்களே கைப்பற்றி வந்ததால், இந்தப் பழ மொழி அவர்களுக்கு எதிராக எழுந்த எதிர்ப்பைக் காட்டுகிறது)

- அதிகக் குழந்தைகள் இருந்தால், வீட்டுக் கூரை பிய்ந்து போய்விடாது - பெல்ஜியம்

♧ ஒரு குழந்தையுடன் நீ நடக்கலாம்: இரு குழந்தைகளுடன் சவாரி செய்யலாம்; மூன்றாகி விட்டால். நீ வீட்டோடு இருக்க வேண்டியதுதான். - இங்கிலாந்து

♧ வளர்ப்பதற்குச் சொந்தக் குழந்தை இல்லாதவன், நல் வாய்ப்பு இல்லாதவன் - அயர்லந்து

♧ குழந்தை இல்லாதவன் சும்மா அமர்ந்து இருப்பது வீண். - அயர்லந்து

♧ கிழவர்களும் குழந்தைகளும் இல்லாத வீட்டில் வேடிக்கையும் கலகலப்பும் இருக்கமாட்டா. குழந்தை தன்னைத் தூக்கிவைத்துக் கொஞ்சுகிறவரை அறியும்: தன்னிடம் உண்மையான அன்பு செலுத்துவோரை அறியாது. - வேல்சு

♧ குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில். - தமிழ்நாடு

♧ உன் குழந்தைகள் தீயோராயிருந்தால், நீ அவர்களுக்குச் சொத்து வைக்க வேண்டாம்; அவர்கள் நல்லோராய் இருந்தால் உனது சொத்து அவர்களுக்குத் தேவையில்லை. - பல்கேரியா

♧ குழந்தையின் வயிற்றுக்குக் கண் இல்லை - டென்மார்க்

♧ அருமையான குழந்தைக்குப் பிரம்பு தேவை. - எசுடோனியா

♧ அச்சம் இல்லாமல் வளரும் குழந்தை, பெருமை இல்லாமல் மரிக்கும். - தாய்லாந்து

♧ வசந்த காலம் வந்து குழந்தையை முத்தமிடுகிறது; மாரிக்காலம் வந்து அதை வதைக்கிறது. - செக்

♧ முதல் குழந்தையின் அருமை அடுத்த குழந்தை வரும் வரை. - கொரியா

♧ குழந்தையின் ரொட்டியில் மணல் கலந்திருக்கும். - ஆலந்து

♧ பெண் குழந்தை வீட்டிலிருப்பதைக் கொண்டு செல்லும், ஆண் குழந்தை (வெளியிலிருந்து) கொண்டு வரும். - இந்தியா

❧ மகள் உனது முட்டளவு வளர்ந்து விட்டால், அவளுடைய சீர்வரிசைப் பெட்டி அவள் மார்பளவு உயரம் இருக்க வேண்டும். - ஆத்திரேலியா

❧ பெண் குழந்தைகள் வீட்டுக்கு அழகு அவர்கள் விற்பனைக்கு உரிய பொருள்கள் - எசுடோனியா

❧ குழந்தையும் உதவிதான் செய்கிறது. - பின்லந்து

❧ மூடன் தனது குதிரையைப் புகழ்வான். பயித்தியக்காரன் தனது மருமகளைப் புகழ்வான் அறியாதவன் தன் மகளைப் புகழ்வான்: அறிவாளன் தன் குழந்தையைப் புகழ்வான்.

ஒற்றைக் குழந்தை கடவுளின் தண்டனை - ஆத்திரேலியா அங்கேரி

❧ காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு. - தமிழ்நாடு

❧ தூங்கும் பொழுது சிரிக்கும் குழந்தை தேவர்களுடன் விளையாடுகின்றது. - இத்தாலி

❧ குழந்தைகள் இல்லாதவனுக்கு அன்பு புரியாது. - ருமேனியா

நல்வாய்ப்பு உள்ளவர்கள் மணமாகி மூன்றாம் திங்களில் குழந்தையை அடைகிறார்கள். - இலத்தின்

❧ நல்வாய்ப்பு உள்ளவனுக்கு முதல் குழந்தை பெண் குழந்தையாக இருக்கும். - போர்ச்சுக்கல்

❧ மகளின் குழந்தைகள் தனது குழந்தைகளைவிட அருமையானவை - உருசியா

❧ நீ தகப்பனாகாமலே வாழ்ந்தால், நீ மனிதனாக இல்லாமலே மரிப்பாய் - பிரான்சு

❧ பெண் பிள்ளை திருமணப் பருவமடையும் பொழுது தான் பிறந்தவளாகிறாள் - மாலத் தீவு

❧ குழந்தைகளை இதயத்தால் விரும்பவும். ஆனால் கைகளினால் பயிற்சி அளிக்கவும். - உருசியா

- குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று. - வாலி

- குழந்தையினது கையும் பன்றித் தொட்டியும் நிறைந்தே இருக்க வேண்டும் - சுவிட்சர்லாந்து

- உலகிலே ஒரு குழந்தையை விட்டுச் செல்பவன் நிரந்தரமாக வாழ்கிறான் - ஆப்பிரிகா

- முதல் குழந்தை தந்தைக்குத் தோழன். - பின்லாந்து

- குழந்தைகள் தெய்வத்தோடு பேசுகின்றன. - பல்கேரியா

- கேள்விகள் கேட்கும் குழந்தை மூடக் குழந்தை அன்று. பெரிய நகருக்குச் சென்றிராத குழந்தை தன் தாயைத் தான் தலைசிறந்த சமையற்காரி எனச் சொல்லும் - பூடான்

- முதலாவது செல்வம் குழந்தைகள். இரண்டாவது தான் பொருட் செல்வம். - செருமன்

- குழந்தையின் கழுத்து ஒட்டகக் கழுத்து: அஃது எங்கு வேண்டுமானாலும் நுழையும். - அரேபியா

- குழந்தைகள் இல்லாத எலி ஆற்றோரம் வீடு கட்டிக் கொள்ளும். - நார்வே

- மனிதக் குஞ்சுகள் பறக்க நாளாகும். - இலங்கை

- குழந்தைகளே ஏழைகளின் செல்வங்கள் - இங்கிலாந்து

- குழந்தைகளுக்குச் செவிகள் அகலமானவை: நாவுகள் நீளமானவை. - சூடான்

- புறாக்கள் கடலைகளைக் கொத்துவது போல், குழந்தைகள் சொற்களைக் கொத்தியெடுத்துக் கொள்ளும். - சீனா

- குழந்தைகள் இளமையில் தாயிடம் பால் குடிக்கின்றன. முதுமையில் தந்தையிடம் அறிவுப் பால் குடிக்கின்றன. - இங்கிலாந்து

❧ குழந்தை இல்லாதவனுக்கு அன்பு என்றால் என்ன என்று தெரியாது. - கசகசத்தான்

❧ குழந்தையைக் கொண்டாடினால், தாயின் அன்பைப் பெற்று விடலாம். இரண்டு தொட்டில்களை ஆட்டுவதைவிட ஒரு கலப்பை யால் உழுவது மேல் - செருமன்

❧ குழந்தைக்கு முதல் பாடம் பணிவு. - சப்பான்

❧ தீப்பட்ட குழந்தை நெருப்புக்கு அஞ்சும் - இங்கிலாந்து

❧ குழந்தையின் முதல் பள்ளிக்கூடம் தாயின் மடி - செக்

❧ நாவை அடக்கப் பழகிய குழந்தை விரைவிலே பேசக் கற்றுக்கொள்ளும். - பல்கேரிய்யா

❧ குழந்தை பேசுவதெல்லாம் அடுப்படியில் கற்றவை. - மலேசியா

❧ தந்தை அழுவதைவிடக் குழந்தை அழுவது மேல். குழந்தைகளும் கோழிக் குஞ்சுகளும் எப்பொழுதும் தின்றுகொண்டேயிருக்க வேண்டும். - ஆப்பிரிக்கா

❧ பகுத்தறிவு உறங்கும் காலம் குழந்தைப் பருவம் - ரூஸோ

❧ செல்லக் குழந்தைக்குப் பல நல்ல பெயர்கள் இருக்கும் - டென்மார்க்

❧ குழந்தைகளும் குடிகாரர்களும் உண்மையே பேசுவர். - ருமேனியா

❧ அடுத்த வீட்டுக்காரர் குழந்தைகளே எப்பொழும் மோசமான குழந்தைகள் - செருமனி

❧ பெற்றோர்கள் நூற்பதைக் குழந்தைகள் கழியில் சுற்ற வேண்டும் - இந்தியா

❧ குழந்தைகளோடு சேர்ந்து விளையாடின் அவர்களை எப்படியும் திருத்தலாம் - செருமன்

குழந்தை அழாவிட்டால், தாய்க்கு ஒன்றும் புரிவதில்லை

- உருசியா

குழந்தையை அடித்து வளர்க்காதவன், பின்னால் தனது மார்பிலே அடித்துக்கொள்ள நேரும் - துருக்கி.

எந்தக் குழந்தையாக இருந்தாலும் எவருடைய குழந்தையாக இருந்தாலும் அந்தக் குழந்தையைப் பார்த்துச் சிரிக்கவில்லை என்றால், அவரது உள்ளத்திற்கு உள்ளே ஏதோ ஒரு இன்பம் உறைந்து கிடக்கின்றது என்று பொருள்

- பேராசிரியர் வெ.அரங்கராசன்

குழந்தைக்குத் தெரியாது கள்ளமும் கபடமும். - கொரியா

எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே -பின் நல்லவர் ஆவதும் தீயவர் ஆவதும் அன்னை வளர்ப்பினிலே. - கவிஞர் புலமைப்பித்தன்

குழந்தை நடக்கப் பழகும்போது கீழே விழும்: ஆனால், அப்படியே விழுந்து கிடப்பதில்லை; யாருடைய உதவியையும் எதிர்பார்க்காமல் உடனே எழுந்து நின்று நடக்கத் தொடங்கும். இது குழந்தை மனிதனுக்குக் கற்றுக்கொடுக்கும் வாழ்வியல் பாடம். வாழ்க்கையில் மனிதனுக்கு வீழ்ச்சி ஏற்பட்டால், தானே முயன்று வீழ்ச்சியிலிருந்து உடனே எழுந்து நிற்க வேண்டும். வெற்றி காணல் வேண்டும்.

குழந்தைகள்தான் என்றும் ஏழைகளின் செல்வங்கள்.

- தாமஸ் புல்லர்

எந்த மனிதனுடைய வீட்டிலும் குழந்தை ஒரு வரம்

- ஜேம்ஸ் எம்.பேர்ரி

வானத்தில் அழகு வெண்ணிலா வீட்டில் அழகு குழந்தை

- செல்சீ



☙ குழந்தையே மானிட வாழ்க்கையின் மனிதச் சங்கிலி.
- லாங் பெல்லோ

☙ குழந்தையைத் தூக்கி வைத்துக்கொள்ளக் கை நோகிறது; அதைக் கீழே இறக்கிவிட்டால் மனம் நோகின்றது. - சி.பி.மிக்லிவர்

☙ குழந்தைகள் இல்லையென்றால், உலகம் துன்பம் நிறைந்ததாக இருக்கும். - சார்லசு டிக்கன்க

☙ புண்பட்ட உள்ளம். குழந்தைகளின் பேச்சால் குணம் அடைந்து, குளிர்ச்சியடைந்து, மனஅமைதி பெறும். - ஆல்கார் ஒயில்டு

☙ குழந்தை இருக்கும் இடத்திலே குறைவில்லா இன்பமும் மகிழ்ச்சியும் குடிகொண்டிருக்கும். - வில்லியம் ஜேம்ஸ்

☙ கள்ளம், கபடமற்ற முகத்தை நமக்குக் காட்டும் தெய்வமே குழந்தை. - துருக்கி

☙ குழந்தை நோய்க்கு மருந்து. - சுவிசர்லாந்து

☙ குழந்தைகள் அன்றலர்ந்த அழகு மலர்கள் போன்று புத்துணர்ச்சி மிக்கவர்கள். - தாய்லாந்து

☙ குழந்தையைக் கொஞ்சாதவர்கள் வன்மனம் படைத்தவர்களாக த்தான் இருப்பார்கள். - அமெரிக்கா

- கல்வியின் குறிக்கோள் அறிவின் அளவை அதிகரிப்பது அன்று ஆனால், ஒரு குழந்தை ஒவ்வொன்றையும் தானே கண்டுபிடிப்பதற்கான நிகழ்தன்மைக் கூறுகளை உருவாக்குவதாகும்.
- குழந்தைகள் தாங்களே கண்டுபிடித்ததைப் பற்றி மட்டுமே அவர்களுக்கு உண்மையான புரிதல் உள்ளது.
- ஒவ்வொரு குழந்தையும் தானே கற்றுக்கொள்ளக் கூடியதை நாம் கற்றுக்கொடுக்கும் போது. அதனுடைய உண்மையான புரிந்துகொள்ளும் அறிவுக்கு நாம் தடையாக உள்ளோம்.
- சமமானவர்களுக்கு இடையிலான ஒத்துழைப்பு. குழந்தையின் நடைமுறை அணுகுமுறையில் படிப்படியான மாற்றத்தைக் கொண்டுவருவது மட்டுமல்லாமல், அஃது அதிகாரத்தின் மீதான மாய உணர்வையும் நீக்குகின்றது.
- குழந்தைகளுக்கு நீண்ட தடையற்ற விளையாட்டு மற்றும் ஆய்வுகள் தேவை.
- சிந்தனையின் ஒவ்வொரு களத்திலும் குழந்தை ஓர் இயல்பு உடையது ஆகும்.
- குழந்தை எந்தக் கேள்வியைக் கேட்டாலும் அது பொருளற்ற தாக இருந்தாலும் சினவாமல், அதற்குப் பொறுமையாகப் பதில் சொல்லல் வேண்டும். அந்த நேரத்தில் பொறுமையை இழந்து சினந்தால் குழந்தையின் அறிவு வளர்ச்சிக்கு நாமே தடையாக அமைந்து விடுவோம்.
- ஏழு எட்டு அகவைகட்கு உட்பட்ட குழந்தையைப் பற்றி ஒருவர் கண்டுபிடிப்பதில் மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்று என்னவென்றால், அக்குழந்தைகளுக்கு அனைத்துப் பாடங்களிலும் ஆர்வம் உள்ளது என்பதைப் புரிந்துகொள்வது என்பதே கண்டு பிடிப்பதாகும்.
- குழந்தைகளின் விளையாட்டுகள் மிகவும் போற்றத்தக்க சமூக நிறுவனங்களாக அமைகின்றன.
- நீங்கள் குழந்தையைப் பின்தொடர்ந்தால் நீங்கள் புதிதாக ஒன்றைக் கண்டுபிடிக்கலாம்.

- பதினொன்று, பள்ளிரண்டு அகவைகளில் குழந்தைகள் தங்களைக் குழுக்களாக உருவாக்க ஓர் உந்துதலைக் கொண்டிருப்பார்கள்.
- 'புதியது எப்படி உருவாகிறது?'என்ற கேள்விக்கான பதில் நாடகம் விளையாட்டு என்பன குழந்தைப் பருவத்தின் வேலையாகும்.
- அளவையியல் அறிவு, கணித அறிவு, உடல் அறிவு மற்றும் பலவற்றின் வளர்ச்சியைப் படிப்பதற்கான சிறந்த வாய்ப்புக்கள் குழந்தைகளிடம் உள்ளன.
- குழந்தைகளைக் கொஞ்சும் போதும் குழந்தைகளோடு விளையாடும்போதும் நாமும் குழந்தைகளாகவே மாறிவிடல் வேண்டும்.
- குழந்தைகளுக்குப் பொய் பேசத் தெரியாது.
- குழந்தை போல இருக்கலாம்; குழந்தையாக இருக்கக் கூடாது.
- பிஞ்சுக் குழந்தையினது சிரிப்புக்குப் பெரும் புவியும் இணையாகாது.
- வீடாளும் வித்தையைத் தாயிடமிருந்தும் நாடாளும் வித்தையைத் தந்தையிடமிருந்தும் கற்றுக்கொள்கின்றன குழந்தைகள்.
- அதட்டி வளர்க்கப்படும் குழந்தைகள் பின் பொய்கள் சொல்பவர்களாக உருவெடுப்பார்கள்.
- குழந்தைகள் பிற்காலத்தில் நல்லவர்களாக விளங்க வேண்டும் என்றால், தாயும் தந்தையும் நல்லவர்களாக வாழ்ந்து காட்டல் வேண்டும்.
- குழந்தைகளுக்கு முன்னர்ப் பெற்றோர்கள் ஒரு போதும் சண்டையிடல் கூடாது. தீய சொற்களைப் பயன்படுத்தக் கூடாது. அவை தீய விளைவுகளைத் தோற்றுவிக்கும்.

12 தங்கக் காசில் இடம் பெற்ற திருவள்ளுவர்

வணிகம் செய்யவும், சமயம் பரப்பவும் வந்த அயல்நாட்டினரில் சிலர், தமிழின் அருமை பெருமைகளை அறிந்து தமிழைப் போற்றி வளர்த்தனர். அவர்களில் ஒருவர்தான் எல்லீசு. அவர் கி.பி.1796ஆம் ஆண்டு கிழக்கிந்தியக் கம்பெனியில் எழுத்தராகச் சேர்ந்து, படிப்படியாக உயர்ந்து1810இல் சென்னையின் ஆட்சியர் ஆனார். தமிழை நன்கு கற்றுச் செய்யுள் எழுதும் அளவுக்குத் தனது மொழி ஆற்றலை வளர்த்துக் கொண்டதுடன், தமிழ்மீது கொண்ட காதலால் தனது பெயரை எல்லீசன் எனத் தமிழ்ப்படுத்திக் கொண்டார். இவர் தமிழ் கற்ற காலத்தில் திருக்குறளைக் கற்றறியும் வாய்ப்புக் கிடைத்தது.

திருக்குறளைக் கற்றநாள் முதல் திருவள்ளுவரின் தொண்டராகிவிட்டார் எல்லீசு. இரண்டே இரண்டு அடிகளில் இந்த மனிதர் எவ்வளவு அரிய பெரிய கருத்துகளை எல்லாம் சொல்லிவிட்டார் என்று வியந்தார். இதை ஆங்கிலேயர்களும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கில் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். 1812இல் ஆங்கில மொழிபெயர்ப்பில் அவர் வெளியிட்ட அறத்துப்பால் தான், திருக்குறளின் முதல் ஆங்கில மொழிபெயர்ப்பு ஆகும். திருக்குறளுக்கு ஓர் எளிமையான விளக்கவுரையையும் எழுதினார்.

சென்னை மாவட்ட ஆட்சியராக இருந்த போது நாணயச் சாலையின் தலைவராகவும் இருந்ததால், திருவள்ளுவருக்கு முதன்முதலாக உருவம் கொடுத்து அவர் உருவம் பொறித்த தங்கக்காசுகளை வெளியிட்டார். இங்கிலாந்து மகாராணிகளான விக்டோரியா; எலிசபெத் ஆகியோர் உருவங்கள் மட்டுமே பதித்து

வரும் அந்தக் காலக்கட்டத்தில் திருவள்ளுவர் உருவம் பதித்த தங்கக்காசுகளை வெளியிட்டு பெரும்புரட்சி செய்து இருக்கிறார். இவர் மட்டும் இந்தியாவின் ஆளுநராக இருந்திருந்தால் இந்தியா முழுவதும் வெளியிடப்படும் காசுகளில் எல்லாம் திருவள்ளுவர் உருவத்தையே பொறித்திருப்பார். இந்தத் தங்கக்காசின் ஒருபுறம் திருவள்ளுவரின் உருவமும், மற்றொரு புறம் விண்மீனும் பொறிக்கப்பட்டுள்ளது. தங்கக்காசின் முன்புறத்தில் ஒரு பீடத்தின் மீது தியான நிலையில் திருவள்ளுவர் அமர்ந்திருக்கிறார். வலக்கை தொடை மீதும், இடக்கை ஒரு சுவடியை ஏந்தியும் உள்ளது. இடையில் தட்டுச் சுற்றாக வேட்டியும், இடப்பக்கத் தோளில் மடித்துப் போட்ட துண்டும் அணிந்துள்ளார். மழித்த தலை; தலைக்கு மேலே ஒருகுடை, பீடத்துக்கு முன் ஒரு தீர்த்தப் பாத்திரம் காணப்படுகிறது. மொத்தத்தில் முனிவர் தோற்றத்தில் வள்ளுவரை வடிவமைத்திருந்தார் எல்லீசன்.

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, குடகு, மால்டோ ஆகிய 7 மொழிகளும் ஒரே மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்றும், அம்மொழிக் குடும்பத்துக்குத்" தென்னிந்திய மொழிக்குடும்பம்" எனவும் பெயரிட்டார். தமிழில் இருந்துதான் இம்மொழிக் குடும்பம் தோன்றியது என்றார். வடமொழிச் சேர்க்கையால் தமிழ்மொழி தோன்றவில்லை என முதன் முதலில் கூறியவரும் இவரே.

எல்லீசுக்குப் பிறகே அயர்லாந்து சமயத் துறவியான கால்டுவெல் தனது" திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்(1856) "என்ற நூலில் தென்னிந்திய மொழிக் குடும்பத்துக்கு" திராவிட மொழிக் குடும்பம்" எனப் பெயரிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இம் மொழிகளுக்குத் தமிழ்தான் மூலம் என்பதால் இம்மொழிக் குடும்பத்தை தமிழ் மொழிக் குடும்பம் எனக் கொள்வதே பொருத்தமானதாகும் என்றார் எல்லீசன். "திராவிட மொழிக் குடும்பம்" என்று பெயரிட்ட கால்டுவெல் போற்றப்பட்டார்.

"தமிழ் மொழிக் குடும்பம்" என்னும் கருத்தாக்கத்தை முதன் முதலில் வெளிப்படுத்திய எல்லீசன் புறக்கணிக்கப்பட்டார். இது ஒரு வகையான அரசியல் ஆகும்.

"தண்டாமரையின் உடன்பிறந்தும்
தண்தேன் நுகரா மண்டுகம்
வண்டோ கானத்திடை யிருந்தும்
வந்து கமலமது உண்ணும்
பண்டே பழகி இருந்தாலும்
அறியார் புல்லர் நல்லோரைக்
கண்டே களித்தங்கு உறவாடித்
தம்மின் கலப்பர் கற்றோரே! "(விவேகசிந்தாமணி- 08)

குளிர்ச்சியான தாமரை மலரோடு(ஒரே நீர்நிலையில்) பிறந்திருந்த போதிலும் தவளைகள் அம்மலரிலுள்ள குளிர்த் தேனைப் பருகா. வண்டுகளோ காட்டுக்கு நடுவே வசித்திருந்த போதிலும் தேடிவந்து அந்தத் தாமரைப் பூவிலுள்ள தேனைப் பருகும். அவ்வாறே கீழோராகிய மடையர்கள், முன்னமேயே பழக்கங் கொண்டிருந்த போதிலும் நல்லோரின் சிறப்பை அறியமாட்டார்கள். ஆனால் மேலோராகிய கற்றவர்களோ முன்னமேயே பழக்கம் இல்லாவிட்டாலும் கூட நல்லோரை இனங்கண்டு அப்போதே அவரோடு நட்புகொண்டு மகிழ்வர் . அவர்களோடு என்றும் இணைந்திருப்பர்.

இந்தப் பாடலுக்கு எடுத்துக்காட்டாக இருப்பவர்தான் தமிழறிஞர் எல்லீசன் அவர்கள். எங்கோ பிறந்திருந்தாலும் தமிழ்நாட்டுக்கு வந்து தமிழ் கற்று திருக்குறளின் பால் ஆர்வமுற்று தன் இறுதிக்காலம் வரை தமிழுக்காகவும், திருக்குறளுக்காகவும் வாழ்ந்தார். தன் சொத்துகளை விற்று அந்தப் பணத்தில் தமிழ்ச்சங்கம் ஒன்றை நிறுவித் தமக்குக் கிடைத்த சுவடிகளை எல்லாம் அச்சிட்டு வெளியிட்டார்.

சென்னையிலும் மதுரையிலும் அவர் சேகரித்து வைத்த ஓலைச் சுவடிகள் அனைத்தும் பெரிய பெரிய அறைகளில் மலைபோல் குவிந்து கிடந்தன. அவர் இறப்புக்குப் பின் அவற்றை ஆங்கிலேய அரசு ஏலம் விடுவதற்கு முடிவு செய்தது. அந்த ஓலைச் சுவடிகளின் அருமையைத் தமிழர்கள் யாரும் அறியவில்லை போலும். எவரும் விலை கொடுத்து வாங்க முன்வரவில்லை. அந்த ஓலைச் சுவடிகள் சும்மா கிடந்தன.

அதனால் சில திங்கள்களில் செல்லரித்து விட்டன. தமிழர்களின் அறியாமையால் தமிழ் அழியும் போதெல்லாம் எல்லீசன் போன்ற நல்லோர்கள்தான் தமிழ் மொழியைக் காப்பாற்றுகிறார்கள்.

தமிழ் வளர்த்த எல்லீசன் எனும் ஓர் ஆங்கிலேயரின் கனவு அந்தச் சுவடிகளோடு ஒரு சுவடியாய் எரிந்து சாம்பலாகி விட்டது. இருந்தாலும் தமிழக மக்கள் அவரை மறக்கவில்லை. அவரின் நினைவாக அண்ணாசாலைக்கு அருகில் எல்லீசுநகர் என்று ஒரு குடியிருப்புப் பகுதிக்கு பெயர் வைத்து இருக்கிறார்கள். இவரின் தமிழ் ஆய்வுப் பணிகளுக்காகச் சென்னையில் ஒரு சாலைக்கு அவரின்(எல்லீசு சாலை) பெயர் வைக்கப்பட்டது. ஒரு தமிழ் முன்னோடியைப் பெருமைப்படுத்தும் வகையில் அடையாளமாக அந்தச் சாலை உள்ளது. அண்ணாசாலைக்கு அருகில்தான் அந்தச்சாலை உள்ளது. மதுரை பெரியார் பேருந்து நிலையத்தின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு எல்லீசு நகர் என்று அழைக்கப்படுகின்றது. தமிழ்க் குறளை மேம்படுத்திய தகைசால் மனிதருக்குத் தமிழகம் காட்டும் நன்றிக் கடன் இதுவே.

இந்திய பணத்தாளில் மகாத்மா காந்தியின் புகைப்படம் அச்சிடும்போது காந்தி உயிரோடு இல்லை. காந்தி மட்டும் அப்போது உயிரோடு இருந்திருந்தால் “என் புகைப்படத்தைப் போடாதீர்கள். திருவள்ளுவரின் புகைப்படத்தைப் போடுங்கள். அவர்தான் இந்தியாவின் உண்மையான அடையாளம்” என்றுதான் கூறியிருப்பார். காரணம் திருக்குறள் மீதும், திருவள்ளுவர் மீதும் அளவற்ற பற்றுக்கொண்டவர் தான் மகாத்மா காந்தி. எல்லீசன் போல, காந்தியைப் போல எண்ணற்ற அறிஞர்கள் எங்கெங்கோ பிறந்திருந்தாலும் தாமரையைத் தேடிவரும் வண்டைப் போல தமிழகத்தைத் தேடி வருகிறார்கள். தமிழுக்குத் தொண்டு செய்கிறார்கள். ஆனால், தமிழர்களோ தமிழ்நாட்டிலே பிறந்து, தமிழோடு வாழ்ந்து தமிழின் அருமை அறியாத கிணற்றுத் தவளைகளாய் இருக்கிறார்கள். என்றாவது ஒருநாள் அறிவார்ந்த சமூகமாகத் தமிழ்ச் சமூகம் மாறும். அன்று இந்திய பணத்தாளில் திருவள்ளுவர் இடம் பெறுவார். இது நடக்கும். நடந்தே தீரும்.

13 புறநானூற்றுத் தாயின் வழியில் ஓர் இராணுவ வீரரின் தந்தை

ஹெலிகாப்டர் தொடுவானத்தில் தோன்றியது. திரு. லக்ஷ்மண் சிங் ராதோட் அவர்களை அழைத்துச் செல்ல வந்தோம். தன்னுடைய மகன் flying officer விக்ரம் சிங்கின் ஈமக் கிரியைகளைச் செய்ய அவர் வந்திருந்தார். முந்தைய நாள்தான்' வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். உங்கள் மகன் ஒரு விபத்தில் மரணமடைந்தார் என்பதை'என்று தெரிவித்திருந்தோம்.

எனக்கு இது தான் முதல் முறை. தன், உறவை இழந்தவரை சந்திப்பது என்பது. இயல்பாக இறந்தவரின் உறவினர் தன் உறவின் முகத்தை ஒரு முறையேனும் பார்க்க வேண்டும் என்று நிர்ப்பந்திப்பார்கள். ஆனால் விக்ரமின் உடலைச் சுரண்டி எடுத்து சவப்பெட்டியில் வைத்து, கனத்திற்காக மரமும், மணலும் நிரப்பித் தந்தோம். மெல்லிய உடல்வாகு கொண்ட லக்ஷ்மண் சிங் ராதோட் ஹெலிகாப்டரில் இருந்து இறங்கினார்.

அவரை நெருங்கினேன் அவர் என்னிடம், "நீங்கள் தான் வெங்கியா?" என்றார். "ஆம், விக்ரம் உங்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். தங்களிடம் பேசலாமா?" என்றேன்.

தனியாக வந்து, "நான் என்மகனையும், நீங்கள் உங்கள் நண்பரையும் இழந்துள்ளோம். ஈமக் கிரியைக்கு எல்லா ஏற்பாடுகளும் செய்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். எங்கே? எப்போது? வரவேண்டும் என்று சொல்லுங்கள்"

பின்னர், அவனது நண்பர்கள், அறை, பொருட்கள், முடிந்தால் அவன் வேலை செய்த இடம் இவற்றைப் பார்க்க விரும்புகிறேன் பின் நாளை மாலை வீடு திரும்ப திட்டம்" என்றார். ஒரு வார்த்தை பதில் பேச முடியவில்லை. தெளிவான கட்டளை.

இராணுவ மரியாதையுடன் தகனம் முடிந்தது. அவர்

என்னென்ன கேட்டாரோ, அனைத்தும் ஏற்பாடு செய்யப்பட்டன. புறப்பட்டார். அவரது கார் மறைந்தது. என் அதிகாரியிடம் சொன்னேன், “என்ன ஒரு தைரியம் சார், ஒரு General போல் மிகச் சரியாகக் கட்டளை போலப் பேசினார். இத்தனை தெளிவான நிதானமான ஒரு மனிதரை நான் கண்டதில்லை,”என்றேன்.

என் அதிகாரி, “அவரும் ஒரு வகையில் வீரர் தான். தன்னுடைய மூன்று மகன்களையும் இராணுவத்திற்காக அர்ப்பணித்தவர்.

முதல் மகன், கேப்டன் கன்ஷ்யாம் சிங், கூர்கா ரைபிள் பிரிவு, 1962இல் லடாக்கில் இறந்தார்.

இரண்டாவது மகன்1965ஆம் ஆண்டில் இக்கொசில் கொனாலில் ஒரு கொரில்லா தாக்குதலில் இறந்தார். இன்று அவரது கடைசி மகன் விமானப்படை விபத்தில் இறந்திருக்கிறார். நாம் அனைவரும் சேர்ந்து இழந்ததை விட அவர் அதிகம் இழந்திருக்கிறார்,” என்றார். ஆம், இவரும் ஒரு மாவீரன் தான்.

சொல்லப் போனால் நாம் பார்த்த பலரை விட இவர் உயர்ந்தவர். இந்த தியாகத்தை ஈடு செய்யவே முடியாது. ஆனால் இவரை யாரென்றே தெரியாது நமக்கு.

பணத்துக்காக கிரிக்கெட் விளையாடுபவர்களை வீரர்கள் என்கிறோம். சினிமா நடிகர்களை ஹீரோக்கள் என்கிறோம். இவர்களுக்கு பாரதரத்னா, பத்மபூஷண், பத்மஸ்ரீ என்று பட்டங்கள் வேறு. இழந்தவர்கள்? அவர்களுக்கு என்ன தந்தோம்? நினைவு கூர்ந்தோமா? நமக்காக, நாட்டிற்காகப் போரில் இறந்த ஒரு பத்துப் பேரின் பெயராவது தெரியுமா? யோசிப்போம்!

முதல்நாள் போரில் அவளது தந்தை யானையை எதிர்த்துப் போரிட்டு இறந்தார்.இரண்டாம் நாள் போரில் அவளது கணவன் ,பகைவர் கவர்ந்து சென்ற ஆநிரைகளை மீட்பதில் இறந்தார் .இத்தனை இழப்பிற்குப் பின்பும் மூன்றாம் நாள் போருக்குத் தன் ஒரே மகனை,சின்னஞ்சிறு பாலகனை , எண்ணெய் தேய்த்துத் தலைவாரிக் குடுமி போட்டுக் கையில் வேல் கொடுத்து, சென்று வா மகனே! வென்றுவா! என வாழ்த்தி அனுப்பிய வீரத் தமிழச்சியின் வீரம் குறித்து ஒக்கூர் மாசாத்தியாரின்,"கெடுகசிந்தை கடிது இவள் துணிவே"என்ற புறநாற்றுப் பாடல்தான் என் நினைவிற்கு வந்தது.

14 நடமாடக்கோவில்

ஓர் ஊரில் அண்ணன் தம்பி இருவர் இருந்தனர். இருவரும் ஊரில் மிகப் பெரிய செல்வாக்கும், செல்வ வளமும் மிக்கவர்கள். இருவருமே கொடை வள்ளல்கள். ஆதரவற்ற மக்களுக்குத் தன் செல்வங்களை அள்ளிக் கொடுப்பதும், அவர்களின் பசியைப் போக்குவதும் அண்ணனின் வழக்கம். இறைத் தொண்டுக்குத் தன் செல்வங்களை வாரிக் கொடுப்பதும், வழிபாட்டுக் கோவில்கள் கட்டுவதற்குக் கொடையளிப்பதும் தம்பியின் வழக்கம். இருவரில் யார் சிறந்த கொடையாளி? என்ற எண்ணம் இருவருக்கும் ஏற்பட்டது. அப்போது அந்த ஊருக்குத் துறவி ஒருவர் வந்திருந்தார். அவரிடம் சென்று தங்கள் ஐயத்தை இருவரும் கேட்டனர். அதற்கு அந்தத் துறவி, "ஆதரவற்ற மக்களுக்கு அள்ளிக் கொடுக்கும் அண்ணனே சிறந்த கொடையாளி" என்றார்.

"ஆண்டவனுக்குத் தொண்டு செய்யும் நான் அல்லவா சிறந்த கொடையாளி? "என்று கேட்டான் தம்பி. அதற்கு அந்தத் துறவி, "நீ இப்போது உயிரோடு இருக்கும் போது உன் பசிக்குக் கூழோ, கஞ்சியோ கொடுக்கிறார்கள். அதுவே நீ இறந்த பின்பு உன் புகைப்படத்தை வைத்து அதன் முன்னே வடை, பாயாசத்துடன் அறுசுவை விருந்து படைக்கிறார்கள். இவற்றில் எது உனக்கு ஏற்புடையது?"என்று கேட்டார். "உயிரோடு இல்லாத ஒருவனின் புகைப்படத்திற்குப் படையல் போடுவதை விட, ஒருவன் பசிக்குச் சோறு போடுவதே சிறந்த தொண்டு" என்றான். "உயிரோடு இல்லாதவன் புகைப்படத்தை வைத்துப் படையல் போடுவதும், உலகில் இல்லாத கடவுளுக்குப் படையல் போடுவதும் ஒன்று தான். நம் கண் முன்னே பசித்திருக்கும் ஏழைக்கு உணவளிப்பதே

உயர்ந்த தொண்டு. 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்', என்பது பேரறிஞர் அண்ணாவின் வாக்கு. ஏழையின் பசியைப் போக்கினால், நீங்களும் இறைவன் ஆகலாம் என்பது பேரறிவு உடைய அறிஞர்களின் வாக்கு. கடவுளுக்குச் சிலை வைத்து வழிபாடு செய்வதை விட, கடும்பசியில் இருப்பவருக்கு இலை வைத்துச் சோறு போடுங்கள். அதைவிடச் சிறந்த தொண்டு இந்த உலகில் வேறு எதுவுமில்லை"என்றார் அந்தத் துறவி.

"படமாடக் கோயில் பகவற்கு ஒன்று ஈயின்
நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்குஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடக் கோயில் பகவற்கு அதுஆமே"


(திருமூலர், திருமந்திரம்- 1857)

உலகில் இரு கோவில்கள் உண்டென்கிறார் திருமூலர். அவை,

1. படமாடக் கோவில் அதாவது சிலை வழிபாடு செய்யப்படும் இடம். கடவுளைப் படமாக வரைந்து வைத்து வழிபட்டமையால் இறைவழிபாடு செய்யும் இடங்களைப் படமாடக் கோவில் என்றார் திருமூலர்.

2. நடமாடக் கோவில் அதாவது, நடமாடும் உயிர்களையே நடமாடக் கோவில் என்கிறார்.

"தன்னையொத்த மனிதன் பசித்திருக்கையில் கடவுளுக்கு ஒரு பொருளைக் கொடையாக அளித்தால் அது நடமாடும் கோவிலான உயிர்களுக்குச் சென்று பயன்தராது. ஆனால் நடமாடக் கோவிலான பசித்த உயிர்களுக்கு ஒன்று ஈந்தால் அது இறைவனுக்குச் சென்று சேரும்"என்று கூறுகிறார் திருமூலர். இறை வழிபாட்டுக்குப் பொருள் அளிப்பதை விட, உண்ண உணவில்லாமல் பசியோடு இருக்கும் உயிர்களுக்கு உதவி செய்வதே உண்மையான தொண்டு ஆகும்.

"சோறு கண்ட இடமே சொர்க்கம்"என்று ஒரு பழமொழி உண்டு. அது பொதுவாக, எந்த வேலையும் செய்யாமல் தண்டச்சோறு உண்டு வெட்டியாகக் காலம் கழிப்பவரைக் குறித்துச் சொல்லப்படுவதாக இருக்கிறது. ஆனால் உண்மையான பொருள் அதுவல்ல. பசியில் வாடுபவன் சோறாகிய அன்னத்தைக் காணும் இடமே அவனுக்குச் சொர்க்கம் என்பதே காலப்போக்கில் இவ்வாறு மாறிவிட்டது. ஐப்பசி திங்கள் முழுநிலவு(இன்று) அன்று கோவில்களில் அன்னத்தை இறைவடிவாகக் காண்பிப்பார்கள். அதைக் காண்பவர்களுக்குச் சொர்க்கம் உறுதி என்பார்கள். அதைக் காண்பதால் சொர்க்கம் கிட்டாது. அந்த அன்னத்தைப் பசித்தவர்களுக்குக் கொடுப்பவர்களுக்கே சொர்க்கம் கிட்டும். அதாவது, அவர்கள் வாழும் வாழ்க்கையே சொர்க்கமாக அமையும். இதை உணர்த்தவே "அன்ன வழிபாட்டு முறையை" உண்டாக்கினார்கள்.

"பசியோடு இருப்பவன் கண்களுக்கு
உணவைக் காணும் இடமே சொர்க்கம்!
உணவு கொடுப்பவனே கடவுள்!".

15 பழவினை

ஓர் ஊரில் சித்த மருத்துவரும் அவருடைய மனைவியும் காட்டில் நீண்ட நாள்களாக எதையோ தேடிக் கொண்டிருந்தனர். கணவர் என்ன தேடுகிறார் என்று மனைவிக்குத் தெரியாது மருத்துவரும் சொன்னதில்லை. மனைவியின் வேலை அலைந்து திரிந்து வரும் கணவருக்கு உணவு சமைத்து வைப்பது, பரிமாறுவது போன்ற பணிவிடைகள் தான். இப்படியே பல ஆண்டுகள் கழிந்து இருவருமே முதுமைப் பருவம் அடைந்து விட்டனர். ஆனாலும் தேடுவதை நிறுத்தவில்லை.

ஒருநாள் மருத்துவர் வழக்கம் போல காட்டுக்குள் அலைந்து திரிந்து விட்டு வரும்போது அங்கே மனைவியைக் காணவில்லை. மாறாக இளம்பெண் ஒருத்தி நின்று கொண்டிருந்தாள்.

மருத்துவரைப் பார்த்ததும் நெடுஞ்சாண் கிடையாகக் காலில் விழுந்து வணங்கினாள். மருத்துவருக்கு ஒன்றும் புரியவில்லை. "யாரம்மாநீ?" என்று கேட்டார். அதற்கு அந்த இளம்பெண் நான்தான் உங்கள் மனைவி என்றாள். மருத்துவருக்கு மிகவும் குழப்பம். என்ன நடந்தது என்று கேட்க மனைவி நடந்ததைச் சொல்லத் தொடங்கினாள்.

"உங்களுக்காகக் கூழ் காய்ச்சிக் கொண்டிருந்தேன். காய்ச்சிய கூழைக் கலக்கும் கரண்டி உடைந்து விட்டது. அதனால் அங்கே கிடந்த ஒரு குச்சியை எடுத்துக் கலக்கினேன். கூழ் மொத்தமும் கருப்பாகி விட்டது. அந்தக் கூழை இறக்கி வைத்து விட்டு வேறு கூழ் காய்ச்சினேன். நீங்கள் வரக் கால தாமதம் ஆனதும் கருகிக் கிடந்த கூழை நான் குடித்து விட்டேன். குடித்த அரை நாழிகையில் எனது முதுமை போய் இப்படி இளம்பெண்

ஆகி விட்டேன்"என்றாள். இதைக் கேட்டதும் மருத்துவர் பதறி அடித்துக் கொண்டு"எங்கே அந்தக் குச்சி? இதைத் தானே நான் இத்தனை ஆண்டுகளாகத் தேடிக் கொண்டிருந்தேன்"என்று கேட்க, அதற்கு அவர் மனைவி, "அதைத் தான் நான் அடுத்த கூழ் காய்ச்சும் போது அடுப்பில் வைத்து எரித்து விட்டேனே?" "என்றாள். மருத்துவர் நெஞ்சடைத்து மயங்கிச் சாய்ந்தார். இருவரும் இத்தனை ஆண்டுகளாக ஒன்றாக, ஓரிடத்தில் வாழ்ந்தாலும் இளமைப் பேறு மனைவிக்குக் கிடைத்தது. ஆனால் கணவனுக்குக் கிடைக்க வில்லை. காரணம் என்ன? எல்லாம் அவரவர் செய்த(ஊழ்) வினையின் பயன். நாம் செய்யும் வினை நல்வினையோ, தீவினையோ அது நிழலைப் போல நம்மைத் தொடர்ந்து வந்து அதற்கான பயனைக் கொடுத்தே தீரும்.

"பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று
வல்லதாம் தாய்நாடிக் கோடலைத்-- தொல்லைப்
பழவினையும் அன்னதகைத்தே தன்செய்த
கிழவனைநாடிக் கொளற்கு, " (நாலடியார்- 101)

பல பசுக்கள் கூட்டமாக இருந்தாலும், கன்றுக்குட்டி தனது தாயைத் தேடிக் கண்டு பிடிக்கும். அதுபோல, ஒருவர் எந்த இடத்தில் இருந்தாலும், அவர் செய்த பழைய வினைகள் அவரைத் தேடிவரும். ஒருவர் தான் செய்த நற்செயல்களின் பலனையும், தீச்செயல்களின் விளைவுகளையும் அனுபவித்தே தீரவேண்டும். ஓடவும் முடியாது, ஒளியவும் முடியாது என்பதையே இந்தப் பாடல் நமக்கு உணர்த்துகிறது.

16 ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காண்!

"பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்" என்ற மகாகவியின் கனவுகளை நனவாக்கியதோடு மட்டுமல்லாமல்.. 'சாதமும் படைப்பதோடு. சாதனைகள் பலவும் படைப்போம்'என்று உலகிற்கு உரத்த குரலில் சொல்லியிருக்கிறார்கள் நமது இந்திய கிரிக்கெட் வீராங்கனைகள்.

அவர்களை வான் அதிரக் கைத்தட்டிப் பாராட்டுவோம்!

1983இல் கபில்தேவ், 2011இல் எம்.எஸ்.தோனிக்குப் பிறகு2025இல் ஹர்மன் பிரீத் கவுர் தலைமையிலான இந்திய பெண்கள் அணி ஒருநாள் உலகக் கோப்பையைக் கைப்பற்றியிருக்கிறது.

பல வருட போராட்டங்கள், கேலிப்பேச்சுகள் அவமானங்களை எல்லாம் துடைத்துத் தூர எறிந்திருக்கிறது இந்த வெற்றி.

இரண்டு முறை இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றும் கோப்பையை வெல்ல முடியாமல் போன வரலாற்றை மாற்றி "எங்களுக்குத் தான் இந்த வருடக் கோப்பை" என்று போட்டியின் தொடக்கத்தில் உறுதியுடன் சொன்ன கேப்டன் ஹர்மன் பிரித் கவுரின் நம்பிக்கையை அவரது படையினர் நனவாக்கிய அந்த நொடி இந்திய கிரிக்கெட் ரசிகர்களின் வாழ்வில் மறக்க முடியாத ஆனந்த நொடி.

மும்பை மைதானம் ஆனந்தக் கண்ணீரால் நிரம்பிய தருணம் எத்தனை அற்புதமானது?

ஆரம்பத்தில் இரண்டு தொடர் வெற்றிகளோடு தொடங்கிய இந்திய அணி, அடுத்துத் தொடர்ந்து மூன்று தோல்விகளை அதுவும் நூலிழையில் தழுவிய போது அரையிறுதிக்கே இவர்கள் தேறுவார்களா என்ற ஐயம் அவநம்பிக்கை ஏற்பட்டது உண்மைதான்.

ஆனால்.. ஃபீனிக்ஸ் பறவை போல் துள்ளி எழுந்து.. ஸ்ருதி மந்தானா, பிரித்திகா ராவல் ஆகியோரின் அதிரடித் துவக்கத்தால் 330 ரன்கள் குவித்து நியூசிலாந்தை வென்று அரை இறுதிக்குச் சென்ற மகிழ்ச்சிக்கு அப்போதே பேரிடி. ஆம்!

அதிரடி தொடக்க வீரர் பிரத்திகா ராவலுக்கு அடிவலிமையான ஆஸ்திரேலியாவிற்கு எதிராக அதிலும் 338 ரன்களை விரட்டி வெல்வது சாத்தியமில்லை என்று நினைத்தபோது. ஜெமிமா ரோட்ரிக்ஸ், கேப்டன் கவுர், தீப்தி சர்மா.. கூட்டணி வெல்லவே முடியாத கங்காருவை வென்று கிரிக்கெட் உலகத்தையே திரும்பிப் பார்க்க வைத்தனர்.

'பெண்ணை நம்பு அதிலும் என்னை நம்பு' என்று சொல்லி அடித்த ஷாபாலி சர்மாவும், மட்டையையும் சுழற்றி பந்தையும் சுழற்றி தென் அமெரிக்காவைத் தடுமாற வைத்த தீப்தி சர்மாவும்.. உலகக் கோப்பையை வென்றதோடு இந்திய மக்களின் மனத்தினையும் வென்றிருக்கிறார்கள்.


சரியான புரிதலும், வெற்றியை நோக்கிய இலக்கும், இணைந்து செய்தால் இயலாதது இல்லை என்ற விவேகமும் இருந்தால் வெற்றி நிச்சயம் என்பதற்கு இதைவிட என்ன எடுத்துக்காட்டு இருக்க முடியும்? 'வாய்ப்புக் கிடைத்தால் வானையும் எட்டுவாள் பெண்' என்ற வார்த்தைகள் உண்மையாகியிருக்கிறது.

"ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காண்!" என்ற பாரதியின் நம்பிக்கையை நனவாக்கிய இளம் நம்பிக்கை நட்சத்திரங்களை இதயம் திறந்து வாழ்த்துவோம்.

17 தன்மையால் ஆளப்படும்

இளைஞன் ஒருவன் துறவியிடம் சென்று, "ஐயா! எனக்கு நீண்ட நாள்களாக ஓர் ஐயம். துளசி செடியையும் இயற்கைதான் படைத்திருக்கிறது. கஞ்சாச் செடியையும் இயற்கைதான் படைத்திருக்கிறது. இயற்கை கொடுத்த இந்த இரண்டையுமே மனிதர்கள் உண்ணலாம் அல்லவா? ஆனால், துளசியை மட்டும் உண்ணச் சொல்கிறார்கள். கஞ்சாவை மட்டும் தொடவே கூடாது என்கிறார்களே இது முறையா?" என்று கேட்டான். துறவி ஆழ்ந்து சிந்தித்தார்.

"இளைஞனே! உனக்குக் குடிக்க ஏதாவது கொண்டு வரவா?" என்று கேட்டார் துறவி. "குடிக்க என்ன இருக்கிறது" என்று கேட்டான் இளைஞன். "பால் இருக்கிறது. கோமியம் இருக்கிறது. இரண்டையும் கொண்டு வருகிறேன். இரண்டையும் குடிக்கிறாயா?" என்று கேட்டார் துறவி. அதற்கு அந்த இளைஞன், "எனக்குப் பால் மட்டும் கொடுத்தால் போதும். கோமியம் வேண்டாம்" என்றான். "ஏன் கோமியத்தைக் குடிக்க மாட்டாயா?" என்று கேட்டார் துறவி. "பால் குடிப்பதற்கான பொருள். கோமியம் குடிக்கக் கூடாத பொருள். அதனால் தான் கோமியம் வேண்டாம் என்றேன்"என்றான் இளைஞன். "அது எப்படி? பாலையும் பசுதான் தருகிறது. கோமியத்தையும் பசுதான் தருகிறது. இவ்விரண்டையும் பசு கொடுக்கின்ற போது நாம் குடிக்கத்தானே வேண்டும்" என்று கேட்டார் துறவி. "பால் உடலுக்கு நன்மையைத் தரும். கோமியமோ உடலுக்குத் தீமையைத் தான் தரும். ஆகையால், கோமியத்தைக் குடிக்கக் கூடாது"என்றான் அந்த இளைஞன். "சரியாகச் சொன்னாய்.



கோமியத்தைப் போலவே தான் கஞ்சாவும் தீமையைத் தரும் பொருளாகும். பசுவைப் போலவே இயற்கை துளசியும் தருகிறது. கஞ்சாவையும் தருகிறது. நம் உடலுக்கு எது நன்மையோ அதைத்தான் நாம் உண்ண வேண்டும். தீமை தருவதை நாம் புறக்கணிக்க வேண்டும். இந்த புரிதல் கூட இல்லையெனில் இப்புவியில் நாம் வாழ்ந்து என்ன பயன்? "என்று கேட்டார் துறவி.

'நன்மையும் தீமையும் நாடி நலம் புரிந்த
தன்மையான் ஆளப் படும்."(குறள்- 511)



நன்மையும் தீமையுமாகிய இரண்டையும் ஆராய்ந்து நன்மை தருகின்றவற்றையே விரும்புகின்ற இயல்புடையவனே செயலுக்கு உரியவனாக ஆளப்படுவான். எவன் ஒருவன் நன்மையை மட்டும் விரும்புகின்றானோ, அவனே ஒரு செயலைச் செய்வதற்கு மட்டுமல்ல இந்த உலகில் வாழ்வதற்கும் தகுதியுடையவன் ஆவான்.

18 நினைவு நாடாக்கள்

வாலியின் அனுபவங்கள்



கவிஞர் வாலியின் பிறந்த தினத்தில் மூன்று முக்கியமான பெயர்களைச் சொல்ல வேண்டியது இருக்கிறது.

சுல்தான்

சுனைதாபேகம்

இப்ராஹிம்

இந்த மூவரும் இல்லை என்றால் கவிஞர் வாலி இல்லை.

இதோ, வாலியின் வார்த்தைகளில்: “சென்னைக்கு வந்தேன், சினிமா வாய்ப்புகள் தேடி. அவ்வப்போது கடனுக்கு

சார்மினார் சிகரெட்டும், வெற்றிலை பாக்குப் புகையிலையும் தந்து, 'வாலி! நீ பெரிய ஆளானப்புறம் இதுக்கான காசை உங்கிட்ட வசூல் பண்ணிக்கிறேன்!' என்று சளைக்காமல் கடன் தந்து, என்னை ஆதரித்தது- 'வெற்றிலை பாக்குக்கடை 'திரு. சுல்தான் அவர்கள்!

பன்னிரண்டு ஆண்டு காலம் - நான் நுங்கம்பாக்கம் மகாலிங்கபுரத்தில் குடியிருந்தேன் மனைவி, மகனோடு. சினிமா வருமானம் தானே! முன்பின் வரும்; இருப்பினும், வாடகையை நான் கொடுக்கும் போது வாங்கிக் கொண்டு உதவியவர் அந்த வீட்டின் உரிமையாளர் திருமதி.ஸுனைதாபேகம் அவர்கள்.

அதையெல்லாம் விடுங்கள்! என்னை ஈன்றெடுத்த ஓரிரு வாரங்களிலேயே என் அன்னைக்கு 'ஜன்னி' கண்டு விட்டது; உடல் சீதளத்தின் உச்சத்தை எட்டி, உறுப்புகள் விறைத்துப் போய் நினைவழிக்கும் கொடிய நோய் அது! இந்த நிலையில் பச்சை மண்ணாகக் கிடந்த எனக்குப் பாலூட்டுதல் எங்ஙனம்? அந்தக் காலத்தில் புட்டிப் பாலெல்லாம், புழக்கத்திற்கு வரவில்லை.

இந்த நிலையில் என் தந்தையுடன் பணிபுரிந்த இப்ராஹிம் என்பவரின் இல்லத்தரசி அதேநேரத்தில் ஓர் அழகிய குழந்தையை ஈன்றெடுத்து இருந்தார். அந்த இஸ்லாமிய மாது தான் ஓரிரு மாதங்கள் எனக்குத் தாய்ப்பால் ஊட்டி இன்றளவும் நான் பிழைத்திருக்கக் காரணமானவர்கள்.

இன்று நான் முத்தமிழ்ப் பாலருந்த மூல காரணம் முஸ்லீம் பால் தான்! இப்படி என் வாழ்வு வடிவு பெற உளியாயிருந்து செதுக்கிய உள்ளங்கள் எல்லாம் முகமதியர் குலத்தில் முளைத்தவை தான்!"

19 தமிழ்நாடு அதைநாடு

கவிஞர் இரா. இரவி

இந்தியாவிலேயே அரசுக்கு வருவாய் தருவதில் முதலிடம்!
இந்தியர்கள் மனதினில் தமிழகம் பெறுகின்றது முதலிடம்!
கலைஅம்சம் மிக்க கோவில்கள் நிறைந்த தமிழகம்
கண்கவர் சிலைகள் எங்கும் நிறைந்த தமிழகம்!
வருடம் முழுவதும் திருவிழாக்கள் நடக்கும் தமிழகம்!
வந்தாரை எல்லாம் வளமாக வாழ்விக்கும் தமிழகம்!
உலகப்புகழ் சல்லிக்கட்டு நடக்கும் நல்ல தமிழகம்
உலகம் முழுவதிலிருந்தும் பயணிகள் வரும் தமிழகம்!
கைத்தறி ஆடைகளில் முத்திரை பதிக்கும் தமிழகம்
கைவினைப் பொருட்களில் சாதனை படைக்கும் தமிழகம்!
உழவுத்தொழிலை உயிரென மதித்து நடக்கும் தமிழகம்
உழவுக்கும் உழவு மாட்டிற்கும் திருவிழா நடத்தும் தமிழகம்!
உலகின் முதல்மொழி தமிழ்மொழி ஒலிக்கும் தமிழகம்
உலகின் முதல் மனிதன் பிறந்து சிறந்த தமிழகம்!
ஊட்டி கொடைக்கானல் குளிர் நல்கும் தமிழகம்
ஒப்பற்ற அருவிகள் குற்றாலம் உள்ள தமிழகம்!
பல்லாயிரம் ஆண்டுகளாக உயிர்ப்புடன் உள்ள தமிழகம்

பண்பாட்டை உலகிற்கே கற்பித்து வரும் தமிழகம்!
காகித உற்பத்தியில் சாதித்து வரும் தமிழகம்
கப்பல் போக்குவரத்தும் சிறப்பாக நடக்கும் தமிழகம்!
பாரம்பரிய உணவுகளை இன்றும் படைக்கும் தமிழகம்
பார்த்தால் பசிதீரும் இயற்கைகள் உள்ள தமிழகம்!
கரகம் காவடி என கிராமியக்கலைகள் செழித்த தமிழகம்
கர்னாடக இசை மட்டுமன்றி தமிழிசையிலும் சிறந்த தமிழகம்!
பாரத நாட்டியத்திற்கு பாரதத்தின் முன்னோடி நம் தமிழகம்
பரதக்கலை மிக்க சிலைகளின் சிறப்பிடம் தமிழகம்!
விளையாட்டுத் துறையிலும் சாதனைகள் நிகழ்த்திடும் தமிழகம்
விதியை நம்பாமல் முயற்சியை நம்பிடும் தமிழகம்!
தரணி முழுவதும் தேடினாலும் ஈடில்லாத தமிழகம்
தரணிக்கே முன்மாதிரியாக விளங்கிடும் தமிழகம்!



20 மணமகன் வீட்டாரின் மனதிற்கியைந்த செயல்கள்

மும்பையின் முலுண்ட் பகுதியைச் சேர்ந்த ஒரு குடும்பம், திருமணத்திற்கு முன் மாப்பிள்ளை வைத்த அசாதாரணமான நிபந்தனைகள் கேட்டு திகைத்துப் போனது.

ஆனால், இவை எதுவும் வரதட்சணை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் அல்ல. மாறாக, திருமண சம்பிரதாயங்களில் கௌரவம், எளிமை மற்றும் மரியாதை ஆகியவற்றை மீட்டுக்கொண்டு வருவது பற்றியது!

நகரம் முழுவதும் இப்போது அதிகம் பேசப்படும் அந்த மாப்பிள்ளையின் நிபந்தனைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

1. திருமணத்திற்கு முன் 'ப்ரீ-வெட்டிங் ஷூட்'எடுக்கக்கூடாது.

2. மணமகள் லெஹங்காவுக்கு பதிலாக, சேலை அணிந்து வரவேண்டும்.

3. சத்தமான, ஆபாசமான இசைக்கு பதிலாக, திருமணத்தின் போது மென்மையான இசைக்கருவிகளின் இசை மட்டுமே ஒலிக்க வேண்டும்.

4. மாலை மாற்றும் (வர்மாலா) சடங்கின் போது மணமகன் மற்றும் மணமகள் மட்டுமே மேடையில் இருக்க வேண்டும்.

5. மாலை மாற்றும் சடங்கின் போது மணமகனையோ அல்லது மணமகளையோ தூக்க முயற்சிப்பவர்கள் விழாவிலிருந்து வெளியேறச் சொல்லப்படுவார்கள்.



6. அர்ச்சகர் திருமணச் சடங்குகளைத் தொடங்கியவுடன், யாரும் அவரைத் தடுக்கவோ, குறுக்கிடவோ கூடாது.

7. புகைப்படக்கலைஞர் / வீடியோகிராஃபர் படங்களுக்காக சடங்குகளில் குறுக்கிடவோ அல்லது நிறுத்தவோ கூடாது-புகைப்படங்கள் அமைதியாக, தூரத்திலிருந்து எடுக்கப்பட வேண்டும். “இது இருமனங்கள் இணையும் புனிதமான திருமணம், படப்பிடிப்புஅல்ல.”

8. புகைப்படக் கலைஞர்களின் அறிவுறுத்தலின் பேரில் மணமகன் மற்றும் மணமகள் கேமராவுக்கு இயற்கைக்கு மாறாக போஸ் கொடுக்கக்கூடாது.

9. திருமணச் சடங்கு பகலில் நடைபெற வேண்டும், மற்றும் விடைபெறும் சடங்கு(பிடாய்) மாலைக்குள் முடிவடைய வேண்டும். இது, விருந்தினர்களுக்கு இரவு தாமதமான உணவால்(இது பெரும்பாலும் தூக்கமின்மை, அமிலத்தன்மை அல்லது அஜீரணத்தை ஏற்படுத்தும்) சிரமம் ஏற்படாமலும், அவர்கள் சரியான நேரத்தில் சௌகரியமாக வீடு திரும்பவும் உதவுகிறது.

10. புதிதாகத் திருமணமானவர்களைப் பொதுவெளியில் கட்டிப்பிடிக்கவோ அல்லது முத்தமிடவோ சொல்லிக் கேட்பவர் யாராக இருந்தாலும், அவர் உடனடியாக அந்த இடத்திலிருந்து வெளியேற்றப்படுவார்.

மணமகளின் குடும்பம் இந்த நிபந்தனைகள் அனைத்தையும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது!

21 என்ஆசைக்கடற்கரையே

தென்தமிழகக் கடற்கரை நகரான கீழக்கரையில் ஏறத்தாழ 370 ஆண்டுகளுக்கு முன் பிறந்து, தன் ஈகைக் குணத்தாலும், கடல் வாணிபச் செல்வாக்காலும், பரங்கியர்களை எதிர்த்து நின்ற தீரத்தாலும், தாய்த் தமிழைப் போற்றிய புலவர்களை ஆதரித்ததாலும், சமய நல்லிணக்கத்தைக் காத்ததாலும் வான்புகழ் பெற்றவர்தான் சீதக்காதி என்ற செய்கு அப்துல் காதிர் மரைக்காயர் அவர்கள். பெரும் செல்வமிக்க வணிகக் குடும்பத்தில் தோன்றியவர். இவரே கப்பல் வணிகம் செய்து பெரும் பொருளீட்டினார். அக்காலத்தில் 1675ஆம் ஆண்டு முதல் 1682ஆம் ஆண்டு வரை ஏழு ஆண்டுகளாகத் தொடர்ந்து சேதுநாட்டில் ஏற்பட்ட கடும் வறட்சியால் மக்கள் பசியால் வாடினர். அப்போது தனது தானியக் களஞ்சியத்தில் சேமிக்கப்பட்டிருந்த நெல் மூட்டைகளை எல்லாம் எடுத்து மக்களுக்கு அளித்தார். கடல் வாணிபத்தில் தாம் ஈட்டிய செல்வத்தையும் மக்களுக்கு அளித்தார்.

தன்னுடைய மாளிகைக்கு வரும் தமிழ்ப் புலவர்களை வரவேற்று, அவர்களுக்கு அளவற்ற பரிசில்கள் அளித்து, தமது கொடைத் தன்மையில் புலவர்களை நெகிழ வைத்தார் வள்ளல் சீதக்காதி. "செத்தும் கொடுத்தான் சீதக்காதி" என்ற முதுமொழி இன்றும் தமிழ்நாட்டில் அவர் புகழைச் சொல்லிக் கொண்டுதான் இருக்கிறது.

இப்படி ஊர் போற்ற உலகம் போற்ற அவர் புகழோடு வாழ்ந்தாலும் அவரைத் தூற்றவும் ஒருவர் இருந்தார். அதுவும் அவர் உடன் இருந்தே தூற்றினார். அவர் வேறு யாருமல்ல அவருடைய தலைவி (இல்லத்தரசி) தான். உலக மக்களின்

தேவையறிந்து ஓடிச்சென்று தீர்த்து வைப்பார். தன்னுடனே வாழும் தன் தலைவியின் தேவைகளை மட்டும் தீர்த்து வைக்க மாட்டார். வள்ளல் சீதக்காதியின் மேல் தீராக்காதல் கொண்ட அவர் தலைவி, ஆற்றாமையால் பாடிய பாடலொன்றை இங்குக் காண்போம்.

"தரைகண்ட மட்டும் படர்ந்து அண்ட கோளமும் தாவியெங்கும்
உரைகண்ட கீர்த்தி பெறும் சீதக்காதி உலகினில் வெண்
திரைகண் டெழுங்கடல் மீதேதன் வங்கத்தைச் செல்ல விட்டுக்
கரைகண்ட வனினம் காணான் என்ஆசைக் கடற்கரையே. "


(படிக்காசுத் தம்பிரான் பாடல்கள்- 10)

"இவ்வுலகம் எங்கும் போய் அண்டத்தின் உச்சிக்கு அப்பாலும் சென்று, எவ்விடத்தும் புகழ்ந்து பேசக்கூடிய புகழையுடையவன் வள்ளல் சீதக்காதி. இவ்வுலகத்தில் வெண்மையான அலைகள் தோன்றும் கடலின்மேல், தன் கலத்தைச் செலுத்தி அதைக் கரை கண்டவனாக இருந்தும், என் காதல் கடற்கரையை அறியாதவனாக உள்ளான்"என்கிறாள் தலைவி.

22 குழந்தைச்செல்வம்

தன் மகளின் கையில் இருந்த நான்கு கொய்யாப் பழங்களைக் கண்டதாய், “இந்தக் கொய்யாப் பழங்கள் யார் வாங்கிக் கொடுத்தது? “என்று கேட்டாள். “அப்பா வாங்கிக் கொடுத்தார்” என்றாள் மகள். “அதில் எனக்கு ஒன்று கொடு”என்று கேட்டாள் தாய். ஒவ்வொரு கொய்யாப்பழமாக எடுத்து ஒருகடி கடித்து அந்தப் பழத்தைச் சுவைத்துப் பார்த்தாள் மகள். “நான் ஒரு கொய்யாப்பழம் கேட்டால், நீ எல்லாக் கொய்யாப் பழத்தையும் கடித்து எச்சில் ஆக்கி விட்டாயே? எனக்குக் கொய்யாப்பழமே வேண்டாம்” என்று சினத்துடன் சீறினாள் தாய்.”

இந்த நான்கு பழங்களில் எது நல்ல பழம் என்பதை அறிந்து கொள்ளவே நான் கடித்துச் சுவைத்துப் பார்த்தேன். இந்த நான்கு பழங்களில் இந்தப் பழம்தான் சுவையாக உள்ளது, இதைச்



சாப்பிடுங்கள்” என்றாள் மகள். தன் மகள் தன்மீது காட்டிய அன்பின் ஆழத்தை உணர்ந்து கொண்டதாய், தன் மகளை ஆனந்தக் கண்ணீரோடு வாரி அணைத்தாள். குழந்தைகள் காட்டும் அன்புக்கு இந்தக் குவலயத்தையே கொடுத்தாலும் அதற்கு ஈடாகாது.

“படைப்புப்பல படைத்துப் பலரோடு உண்ணும்
உடைப்பெருச் செல்வர் ஆயினும், இடைப்படக்
குறுகுறு நடந்து, சிறுகை நீட்டி,
இட்டும், தொட்டும், கவ்வியும், துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்,
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத்தாம் வாழும் நாளே”

(புறநானூறு- 188)

ஒருவன் தன் வாழ்நாளில் எல்லாப் பேறுகளையும் பெற்று, அவற்றைப் பலரோடு கூடி உண்ணும் பெருஞ்செல்வர் ஆயினும், அவனுக்குக் குழந்தைப் பேறு இல்லையென்றால் அவன் பெற்ற செல்வங்களால் ஒரு பயனும் இல்லை. பலரோடு கூடி உண்ணும் போது சின்னச்சின்ன அடிவைத்து, நடந்து வந்து,கையை நீட்டித்தான் உண்ணும் உணவில் கையை வைத்து அதே கையால் தன்னையும், தன் தாய்தந்தையரையும் தொட்டு, வாயால் சோற்றைக் கவ்வி, சோற்றில் கையை விட்டுத் துழாவி, நெய்மணக்கும் சோற்றைத் தன் மேனியில் உதிர்த்துக் கொண்டு எல்லோரையும் மயக்கும் குழந்தைகள் இல்லாதோர்க்குத் தாங்கள் வாழும் நாள்களால் எந்தப்பயனும் இல்லை.

23 மக்கட் பேறே மகத்தான பேறு

ஒரு வீட்டின் திண்ணையில் பாட்டியும் அவரது பெயர்த்தியும் அமர்ந்திருந்தனர். அந்தப் பாட்டியின் மகனும், மருமகளும் அலுவலகத்தில் பணியாற்றுகின்றனர். அவர்கள் காலையில் சென்றால் மாலையில் தான் வீடு திரும்புவார்கள். அதுவரை தன் பெயர்த்தியைப் பாதுகாப்பது அந்தப் பாட்டியின் வேலையாகும். ஒருநாள் அவர்கள் இருக்கும் தெருவழியே ஒருவர் கூடையில் கொய்யாப்பழம் விற்றுக்கொண்டு செல்வதைப் பார்த்தாள் அந்தச் சிறுமி. உடனே தன் பாட்டியிடம் ஓடிச்சென்று, "எனக்குக் கொய்யாப்பழம் வாங்கிக் கொடுங்கள்"என்று கேட்டாள். அதற்கு அவள் பாட்டி, "என்னிடம் காசு இல்லை" என்றார். இன்னொரு நாள் தெருவில் குச்சிமிட்டாய் விற்பதைப் பார்த்து, "எனக்குக் குச்சிமிட்டாய் வேண்டும்" என்று பாட்டியிடம் கேட்டாள் அந்தச் சிறுமி. "என்னிடம் காசு இல்லை"என்றார் பாட்டி. மாலையில் தன் தாய்தந்தை வீட்டுக்கு வந்ததும் அம்மாவிடம் சென்று, "அம்மா நீங்களும் அப்பாவும் வேலைக்குச் சென்ற பின்பு தெருவில் அவ்வப்போது தின்பண்டங்கள் விற்பதைப் பார்க்கிறேன். அதை வாங்கித் தரும்படி பாட்டியிடம் கேட்டால் காசு இல்லை என்று கூறுகிறார். ஆகையால் இனி நீங்கள் அலுவலகம் செல்லும் முன்பு பாட்டியிடம் பணப்பையைக் கொடுத்து விட்டுச் செல்லுங்கள். எனக்குத் தின்பண்டம் தேவைப்படும் போதெல்லாம் பணப்பையில் உள்ள பணத்தைக் கொண்டு வாங்கிக் கொள்கிறேன்" என்றாள் அச்சிறுமி.

"அதெல்லாம் முடியாது. உன் பாட்டி பொறுப்பில்லாதவர். பணப்பையை எங்கேயாவது வைத்துவிட்டு மறந்துவிடுவார். பிறகு யார் அதைத் தேடிக்கண்டுபிடிப்பது?" என்றாள் அந்தச் சிறுமியின் தாய். அப்படியென்றால் நிலைப் பேழையின் திறவுகோலையாவது பாட்டியிடம் கொடுத்து விட்டுச் செல்லுங்கள். தேவைப்படும் போது திறந்து பணம் எடுத்துக் கொள்கிறேன்" என்றாள் அச்சிறுமி. "முடியவே முடியாது. நிலைப் பேழையில் தான் சொத்துபத்திரங்கள், தங்க நகைகள் கட்டுக்கட்டாக ரூபாய் நோட்டுகள் உள்ளன. உன் பாட்டியை நம்பியெல்லாம் நிலைப்பேழையின் திறவுகோலைக் கொடுக்க முடியாது."என்றாள் அந்தச் சிறுமியின் தாய்.

"பாட்டியிடம் பணப்பையை ஒப்படைக்க மறுக்கிறீர்கள். நிலைப் பேழையின் திறவுகோலை ஒப்படைக்க மறுக்கிறீர்கள். ஆனால் என்னை மட்டும் எந்த நம்பிக்கையில் ஒப்படைத்து விட்டுச் செல்கிறீர்கள். உங்களுக்குப் பணப்பைத் தேவைப்படுகிறது. நிலைப்பேழையின் திறவுகோல் தேவைப்படுகிறது. நான் மட்டும் தேவைப்பட வில்லையா? என்னை மட்டும் ஏன் பாட்டியிடம் ஒப்படைத்து விட்டுச் சொல்கிறீர்கள்?"என்று கேட்டாள் அந்தச்சிறுமி. மகளின் வினாவுக்கு விடையளிக்க முடியாமல் உறைந்து போய் நின்றாள் அந்தத்தாய். ஆம், இந்தச் சமூகத்தில் பொன்னுக்கும், பொருளுக்கும் உள்ள மதிப்பு குழந்தைகளுக்கு இல்லை. ஓடிஓடி பணம் சேர்ப்பதெல்லாம் எங்கள் குழந்தைகளுக்காகத் தான் என்கிறார்கள் இக்காலப் பெற்றோர்கள். கண்களைத் தொலைத்து விட்டுத் தூக்கத்தை வாங்கி என்ன பயன்?

பொருள் ஈட்டுவதில் செலவிடும் நேரத்தில் கொஞ்சமாவது குழந்தைகளைக் கவனிப்பதில் செலவிடுங்கள். அவர்களின் தேவையறிந்து அதை உடனுக்குடன் நிறைவேற்றுங்கள். பொருட்செல்வம் போனால் எப்போது வேண்டுமானாலும் சம்பாதித்துக் கொள்ளலாம். குழந்தைச் செல்வம் போனால் ஒரு போதும் சம்பாதிக்க முடியாது. ஆகையால்,

குழந்தைகளின் நலனில் அக்கறை காட்டுங்கள். அவர்களுக்குப் பொருட்செல்வத்தைச் சேர்க்காதீர்கள். கல்விச் செல்வத்தைச் சேர்த்து வையுங்கள். நற்பண்புகளைக் கற்றுக் கொடுங்கள். அவர்கள் நல்லவர்களாகவாழ அவர்களுக்கு நல்வழி காட்டுங்கள்.

"ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்

மக்கட் பேற்றின் பெரும்பேறு இல்லை"

(மதுரைக்கூடலூர்கிழார், முதுமொழிக்காஞ்சி- 51)

குழந்தை என்பது ஒரு குடும்பத்திற்கு மட்டும் சொந்தமன்று. மனிதச் சமூகப் பெருக்கத்திற்கும், வளர்ச்சிக்கும் குழந்தையே அடிப்படையானது. அதனால் கடலால் சூழப்பட்ட இவ்வுலகத்தில் உள்ள மக்கள் அனைவருக்கும் மக்கள் பேற்றினை விட வேறு பெரும்பேறில்லை என்கிறது முதுமொழிக்காஞ்சி.

இன்று குழந்தைகள் நாள் விழா. அவர்களை ஆண்டுக்கொரு முறை கொண்டாடாதீர்கள். ஆண்டு முழுவதும் கொண்டாடுங்கள்.

24 கற்பித்தல் பணி

மரியாதைக்குரிய ஒரு பள்ளி ஆசிரியர் சமீபத்தில் ஓய்வு பெற்றிருந்தார். அவரும் அவரது மனைவியும் போபாலில் உள்ள ஒரு ஃப்ளாட்டில் வசித்து வந்தனர்.

தசரா பண்டிகைக்கு, அவர்கள் தங்கள் சொந்த ஊருக்குச் செல்ல முடிவு செய்தனர். செல்வதற்கு முன், ஆசிரியர் தனக்குள் நினைத்துக் கொண்டார்.

"நாம் இல்லாத போது, ஒரு திருடன் உள்ளே நுழைந்தால் என்ன செய்வது? வீட்டில் பணம் இல்லாவிட்டாலும், அலமாரிகளை உடைத்து எல்லா இடங்களிலும் குழப்பம்விளைவிக்கலாம்!

எனவே, தனது வீடு சேதமடையாமல் இருக்க, அவர் மேசையில்1000-மும் மற்றும் ஒரு கடிதமும் வைத்தார்.

"அன்புள்ள தெரியாத திருடனே! என் வீட்டிற்குள் நுழைய நீங்கள் எடுத்த முயற்சிக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள்! ஆனால் துரதிர்ஷ்டவசமாக, நான் ஒரு நடுத்தரவர்க்க மனிதன், என் ஓய்வூதியத்தில் மட்டுமே வாழ்கிறேன். எனவே இங்கே மதிப்பு மிக்க எதுவும் இல்லை. உங்கள் கடின உழைப்பும் விலை மதிப்பற்ற நேரமும் வீணாகிவிடும் என்று நான் வருத்தப்படுகிறேன். எனவே, உங்கள் முயற்சிக்கு மரியாதை செலுத்தும் அடையாளமாக, இந்தச் சிறிய தொகையை ஏற்றுக் கொள்ளுங்கள்.

மேலும், உங்கள் தொழிலில்(திருட்டு) நீங்கள் மேலும் வெற்றி பெற உதவ, கீழே சில குறிப்புகளை நான் உங்களுக்குத் தருகிறேன்.

மாஸ்டரின்* அறிவுரை* பின்வருமாறு வாசிக்கப்படுகிறது.

8வது மாடியில் - ஒரு ஊழல் மந்திரி வசிக்கிறார்.

7வது மாடியில் - ஒரு விளைந்த சொத்து வியாபாரி.

6வது மாடி - ஒரு கூட்டுறவு வங்கித் தலைவர்.

5வது மாடியில் - ஒரு செல்வம் கொழிக்கும் தொழிலதிபர்,
கறார் பேர்வழி.

4வது மாடியில் - ஒரு பிரபல கைதேர்ந்த வழக்கறிஞர்.

3வது மாடியில் - ஒரு ஊழல் அரசியல்வாதி
அவர்களிடம் மலையளவு தங்கமும் பணமும் உள்ளன.
உங்கள் 'வணிக வெற்றி' அவர்களை சிறிதும் தொந்தரவு செய்யாது!
ஏனென்றால் அவர்கள் போலீசில் புகார்கூட செய்யமாட்டார்கள்!"
தசராவுக்குப் பிறகு, மாஸ்டர் வீடு திரும்பியபோது, மேசையில் ஒரு பெரிய பையைக் கண்டார். உள்ளே10 லட்சம் ரொக்கம் இருந்தது! மற்றும் ஒரு கடிதம்.

— *"மதிப்பிற்குரிய குருஜி"உங்கள் வழிகாட்டுதலுக்கும் போதனைக்கும் மனமார்ந்த நன்றி!* நான் உங்கள் ஆலோசனையைப் பின்பற்றினேன், என் பணி வெற்றி பெற்றது! இந்தச் சிறிய தொகையை நன்றியுணர்வின் அடையாளமாக விட்டுச் செல்கிறேன்.

எதிர்காலத்திலும் உங்கள் ஆசீர்வாதங்களையும் ஞானத்தையும் நான் தொடர்ந்து பெறட்டும்...

உங்கள் சீடர்- திருடன்

மாஸ்டர் அதைப் படித்துச் சிரித்தார், *"ஐயோ! நான் ஓய்வு பெற்றேன் என்று நினைத்தேன், ஆனால் என் கற்பித்தல் பணி இன்னும் தொடர்கிறது போலிருக்கிறது"*

25 நீ... நான் வெத்த வைரம்டா..!

சென்னை.... யில் ஓர் ஏரியா....!

ராமநாதன் செட்டியார்.... சிகப்பி ஆச்சி அவர்கள் மகன் சிங்காரம் மருமகள் கண்ணாத்தாள் தம்பதியர்கள் அமர்ந்திருந்த மிக விலை உயர்ந்த வெளிநாட்டுக் கார்... ஊருக்கு வெளியே சுற்றுச்சாலையில் யவ்வனமாகச் சென்று கொண்டிருந்தது......

அந்தச் சாலையில் சென்று கொண்டிருந்த அந்தக் காரை ரோட்ல போய்க் கொண்டு இருந்தவங்க எல்லாம்... ஆச்சரியமா பாத்தாங்க..!

என்னத்தா.... மவுனமாவே வர்ற... சந்தோசமா வாத்தா... நீங்க நல்லது தானே செய்யப் போறீங்க... கலங்காதே ஆத்தா..! ஒன் வயித்தில புள்ளையா பொறந்ததே என் பாக்யம் ஆத்தா.... ஒன் ஆசை அப்பச்சி ஆசை என்னவோ அதைத் தான் ஆத்தா நான் நிறைவேத்துவேன்...!

மகன் சிங்காரம் பெற்றோர்களுக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டே காரை ஓட்டினான்.....

ஏப்பா... சிங்காரம்! எங்களை எங்கேப்பா... கூட்டிக்கிட்டுப் போறே...? அப்பா ராமநாதன் செட்டியார்... வலது புருவம் உயர... வினவினார்..!

மாமா...! இன்னும் கொஞ்ச நேரம் பொறுமையா வாங்க.... நாங்க என்ன செய்யப் போறோம்னு உங்களுக்கும்.. அத்தைக்கும் தெரிஞ்சா அம்புட்டு... சந்தோசப் படுவீங்க....! மருமகள் கண்ணாத்தாள்... சூசகமாகப் பேசினாள்...!

என்னமோ... போங்க.. நீங்க கூப்புட்டீங்கனு வந்தா.. எல்லாமே சஸ்பென்ஸா பேசுறிங்க..... சிகப்பி ஆச்சி செல்லமாக.. சலித்துக் கொண்டார்..!

கிழக்குகடற்கரை... மகாபலிபுரம் சாலையில் ஒருமணி நேரம் பயணம் செய்த காரை.. சாலை ஓரமாக நிறுத்திய... சிங்காரம் கீழே இறங்கிப் போய் யாரிடமோ... பேசினான்.... பேசிவிட்டு மறுபடி வந்து காரை ஓட்டினான்.....

ஒரு பத்து கிலோ மீட்டர் சென்றதும்.. வலதுபுறம் சாலையில் செலுத்தியவன் சற்று தூரத்தில் உள்ள அன்னை முத்துலட்சுமி பெண்கள் காப்பகத்தின்.. முன் நிறுத்தினான்.. வாசலில் இருந்த செக்யூரிட்டி.... இவர்களுக்காகவே காத்திருந்தைப் போல பரபரப்பாய் ஓடி வந்து கதவைத் திறந்தார்..... அங்கே அந்த காப்பகத்தில் உள்ள அனைவருமே... வந்து இவர்களை வரவேற்க காத்திருந்தார்கள்....!

ராமநாதன் செட்டியாருக்கும்.... சிகப்பி ஆச்சிக்கும் அங்கே வருவோம் என்று கொஞ்சம் கூட எதிர்பார்க்காத.... அதிர்ச்சி.. ஆனந்தமும் அவர்கள் முகத்தில் மின்னலாக... அடித்தது...!

ஆம்..... முப்பது ஆண்டுகளுக்கு முன் காரைக்குடிப் பகுதியில் உள்ள சிவற்பட்டியில் தாய்தகப்பனை இழந்து ஏழையாக இருந்ததால்.. ராமநாதனை ஆதரிக்கவோ அவருக்கு கல்யாணம் செய்து வைக்கவோ பெண் கொடுக்கவோ அவர் சமுதாயத்தைச் சார்ந்த யாருமே... முன் வராததால் அந்த வேதனையில் ஊரைக் காலி செய்துவிட்டு சென்னை வந்து விட்டார்... உழைத்து இன்று சென்னையில் பெயர்சொல்லும் அளவில் பெரியாளாக ஆகிவிட்டார்..!

அப்பச்சி.... வாங்க... ஆத்தா வாங்க... எல்லாம் எனக்குத் தெரியும்... போன மாசம் கண்ணாத்தாள் பிறந்தநாள்ல இங்கே உள்ள அத்துணை பெண் குழந்தைகளுக்கும், இளம் பெண்களுக்கும், பெரிவங்களுக்கும் துணிமணி அன்பளிப்பு செய்து நல்ல சாப்பாடும் போட்டோம். அப்பதான் விடுதி காப்பாளர் எழுபது வயது முத்துச்செட்டியார்... எங்களைப் பற்றிய

விபரத்தை அறிந்து... நாங்களே வியப்படைந்த அந்தச் செய்தியைச் சொன்னாரு.... கதறி அழுது விட்டோம்பா... ஆமாம்பா....என்னைப் பெத்த சிகப்பி ஆத்தா... வை..., கண்கலங்கி.... மேலும் சொல்ல முடியாமல்... சிங்காரம் தேம்பி அழுதான்..

மருமகள் கண்ணாத்தாளும் தன் அத்தையைக் கட்டிப்பிடித்து... அழுது... ஒரு குழந்தைக்கு முத்தம் கொடுப்பதைப் போல மாறிமாறி முத்தமிட்டாள்....

இப்போது ராமநாதன் பேசினார்..... ஆமாம்பா... ஒன் சிகப்பி ஆத்தாவை....இங்கு தான் வாழ்க்கை துணையா தேர்ந்தெடுத்தேன்...! அவராலேயும் மேலே சொல்ல முடியாத அளவுக்கு உணர்வுகள்.....!!!!!

அப்பச்சி... எங்க ஆத்தாவின் தாய்வீடான இந்தக் காப்பகத்தில் இருப்பவங்க எல்லாமே.. நம்ம சொந்தங்க அப்பச்சி.... அடுத்த மார்ச்14 ஆம் தேதி வர்ற ஒங்க எழுபத்திரண்டாம் வயது பொறந்தநாளில் இங்கே கல்யாண... வயது வந்த அத்துணை உறவுகளுக்கும் பொம்பள புள்ளைகளுக்கும் நிறையச் சீர்வரிசை வச்சு ஒரு அண்ணனா... சிகப்பி ஆத்தா.. ராமநாதன் செட்டியார் மகனா ஊரறிய பெரிய கல்யாண...விழாவா.. நடத்தப் போறேன் அப்பச்சி.... ஒங்க ரெண்டு பேரின்... அனுமதி வேண்டுமென்று... கண்ணீர் மல்க பெத்தவக காலில் விழுந்தான்.....!

அன்னை முத்துலட்சுமி பெண்கள் காப்பகம் ஆனந்தத்தில் ஒளிர்ந்தது..! இப்ப சிகப்பி ஆச்சியின் வாய் முனுமுனுத்தது......

நீ நான் பெத்த வைரம்டா..!

26 வாட்டலத்துள்ளே இருந்ததெல்லாம் புத்தகமே

ஒருநாள் எட்டயபுரத்து மன்னரைச் சந்திப்பதற்காகப் பாரதியார் செல்கிறார். மன்னரும், பாரதியாரும் சேர்ந்து பல ஊர்களுக்குப் பயணம் போகிறார்கள். அலைந்து திரிந்து விட்டு நீண்ட இடைவெளிக்குப் பிறகு ஊருக்குத் திரும்புகிறார்கள். பாரதியாரும் வண்டியில் வீட்டுக்கு வருகிறார். வண்டி நிறைய ஏராளமான மூட்டைகள் காணப்படுகின்றன. தொலைவிலிருந்து அவற்றைப் பார்க்கிறார் பாரதியாரின் மனைவி செல்லம்மாள்.

அவையனைத்தும் நெல், கம்பு, கேழ்வரகு எனப்பல வகையான தானிய வகைகளும், வண்ணவண்ண பட்டுப் புடவைகளும், பாத்திரங்களும் வருவதாக நினைத்து மகிழ்கிறார். தெருவில் உள்ள பெண்கள் எல்லோரும் செல்லம்மாளைப் பார்த்து பொறாமை கொள்கிறார்கள். “செல்லம்மா! உன் கணவன் உனக்கு வேண்டியதெல்லாம் வண்டி நிறைய வாங்கிக் கொண்டு வந்திருக்கிறான். உண்மையிலேயே நீ மிகவும் கொடுத்து வைத்தவள்”என்று கூறுகிறார்கள்.

தம் துன்ப காலம் தீரப்போகிறது என நினைத்து இன்பக் கனவில் மூழ்கி விடுகிறார். வண்டி வாசலுக்கு அருகே வந்து நிற்கிறது. செல்லம்மாள் பாரதியாருக்கு ஆரத்தி எடுத்து வரவேற்கிறார். வண்டியோடு வந்தவர்கள் மூட்டைகளை இறக்கி வீட்டுக்குள் கொண்டு வந்து வைக்கிறார்கள். செல்லம்மாள் மூட்டைகளுக்கு அருகில் சென்று தொட்டுத் தொட்டுப் பார்த்து மகிழ்கிறார்.

பிறகு ஒரு மூட்டையை ஆவலோடு பிரிக்கிறார். அதில் வெறும் புத்தகங்கள் மட்டுமே இருந்தன. பிறகு எல்லா மூட்டைகளையும் ஒவ்வொன்றாகப் பிரித்துப் பார்க்கிறார். எல்லாவற்றிலுமே புத்தகங்களே இருந்தன. அதைப் பார்த்ததும் அவர் அதிர்ச்சியில் உறைந்து விடுகிறார்.

அவர் நினைத்தது எதுவும் ஒரு மூட்டையில் கூட இல்லை. "பட்டுப்புடவையும் அங்கில்லை. பாத்திர பண்டமும் அங்கில்லை பொட்டலத்துள்ளே இருந்ததெல்லாம் புத்தகம் புத்தகம் புத்தகமே" என்று புலம்பி தன் வருத்தத்தைப் புலப்படுத்துகிறாள் செல்லம்மாள். மன்னர் கொடுத்த பணத்தில் ஒரு காசு கூட மிச்சம் வைக்காமல் பாரதியார் புத்தகங்களை மட்டுமே வாங்கி மூட்டை கட்டி எடுத்து வந்திருக்கிறார்.

ஏமாற்றத்தில் செல்லம்மாள் வெடித்து அழுகிறார். அப்போது அவரை ஆறுதல் சொல்லித் தேற்றுகிறார் பாரதியார். மன்னர் கொடுத்த பணம் அழிகின்ற செல்வம். நான் வாங்கி வந்துள்ள புத்தகங்களோ அழிவில்லாத செல்வம். அழியும் செல்வத்தைக் கொடுத்து நான் அழியாச் செல்வத்தை வாங்கி வந்தேன் என்று சொல்லிவிட்டுச் சிரிக்கிறார் பாரதியார். இந்தச் சமூகத்தில் பாரதியாரைப் போல யாரும் அழியாச் செல்வத்தைத் தேடுவதில்லை.

27 இல்லற வாழ்க்கையின் நிறை

இல்லற வாழ்க்கையின் நிறை எனப்படுவது மறைபிற அறியாமை'

மகாகவி பாரதியாரின் புதுச்சேரி வாழ்க்கையில் துன்பமும், துயரமும், வறுமையும் சேர்ந்தே இருந்தன. எனினும், அதை வெளிக்காட்டாமல் வாழ்ந்தனர் பாரதியாரும் செல்லம்மாவும், அடுத்த வேளைச் சாப்பாட்டிற்கு 'அரிசி இல்லை' என்று மனைவி செல்லம்மா கூறிய பொழுது, 'செல்லம்மா, உன்வாயால் இல்லை என்று சொல்லக்கூடாது. நீ குலமகள்,. அகரம் இகரம் என்று சொல், நான் புரிந்து கொள்வேன்'என்றாராம். இது தான் மறை பிறர் அறியாமை'ஆகும்.

'நான்கு சுவர்களுக்குள் எது நடந்தாலும் நமக்குள் இருக்கட்டும் நல்லம்மா'என்று கவிஞர் கண்ணதாசன் பாடிய பாடலும் இதை உணர்த்தும்.

'முறையெனப் படுவது கண்ணோடாது உயிர் வெளவல்"என்பதற்கு மனுநீதிச் சோழன், தன் மகன் வீதி விடங்கன் செய்த குற்றத்திற்காக, அவனையே தேர்க்காலில் இட்டுக் கொல்ல முயன்றதே சான்று ஆகும்.

செறிவு எனப்படுவது கூறியது மறாஅமை 'சிவடினயார்கள்' தன்னிடம் இருக்கும் எதைக் கேட்டாலும் மறுக்காமல் தரும் நெறியில் வாழ்ந்தவர் இயற்பகை நாயனார். அவருடைய கொள்கையை சோதித்து அறிவதற்கு, இறைவனே சிவனடியார் வடிவில் வந்து நின்று, 'உன் மனைவியைத் தானமாகக் கொடுக்க' எனக் கேட்ட போது தான் கொடுத்த வாக்கை மறுக்காமல் மனைவியை சிவனடியார்க்குக் கொடுத்தார் என்பது திருத்தொண்டர் புராணம் காட்டும் உண்மை.

28 பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்

பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல் என்கிறது பாடல்.

ஏகநாதர் மகாராஷ்டிரத்தில் வாழ்ந்த மகான். அவர் தினந்தோறும் கோதாவரியில் நீராடி வருவார். ஒருநாள் அப்படி அவர் திரும்பி வரும் வழியில் நாத்திகன் ஒருவன் தன் வீட்டு மாடியிலிருந்து ஏகநாதரின் தலையில் வெற்றிலை எச்சிலைத் துப்பினான். யார்? என்ன? என்று கூடப் பார்க்காமல் ஏகநாதர் அமைதியாகத் திரும்பிச் சென்று ஸ்நானம் செய்தார்.

திரும்பவும் அவர் நாத்திகனது வீட்டைத் தாண்டிய போது அவன் எச்சிலைத் துப்பினான். மறுபடி ஸ்நானம் செய்தார் ஏகநாதர். 108முறை இவ்வாறு நடந்தது. அதன் பின்பு தான் நாத்திகன், ஏகநாதரது பெருமையை உணர்ந்தான். அவரது பாதங்களில் வீழ்ந்து வணங்கினான். அவரிடம் மன்னிப்புக் கோரினான்.

அவன் கூறியதைக் கேட்ட ஏகநாதர், 'அப்பா, உண்மையில் வணங்கத் தகுந்தவன் நீ தான். உன்னால் தான் இன்று எனக்கு கோதாவரியில்108 முறை ஸ்நானம் செய்த புண்ணியம் கிடைத்தது!'என்றார்.

இத்தகைய மாபெரும் மகான்கள், சான்றோர்கள், மனிதர்கள் போற்றிய நீதி நெறி முறைகளை உணர்த்தும் இப்பாடல், என்றென்றும் நிலைத்து நிற்கும்பேறு உடையதல்லவா!

29 கடல் காத்த கார்த்திகேயன் ஐ.ஏ.எஸ்

தங்களது செயல்பாடுகள் மூலம் அண்டை மாநிலத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்களாகக், காவல் துறை செயலாளர்களாகத் தமிழகத்தைச் சார்ந்த இவர்கள் செய்து வரும் பல, நேர்மையான அப்பழுக்கற்ற அர்ப்பணிப்பான மக்கள் சேவையால், தமிழகத்தைச் சேர்ந்த பல ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ் அதிகாரிகளுக்கு அங்கு எப்போதும் தனி மரியாதை உள்ளது.

கேரளாவில் சாதித்துக் கொண்டிருக்கின்றனர். அந்த வரிசையில் மலையாள மக்கள் மனம் கவர்ந்த தமிழர் எஸ்.கார்த்திகேயன் ஐ.ஏ.எஸ். தற்போது மாநில முதல்வரின் சிறப்புச் செயலாளராகவும், செய்தி, மக்கள் தொடர்புத்துறை செயலாளராகவும் பணியாற்றி வருகிறார். கேரளாவில் 2014ல் பெரும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்ட போது. கொல்லம் ஆட்சியராக இருந்த இவர் இரவோடு இரவாக திறமையாக நுட்பமாகச் செயல்பட்டு, அங்குள்ள மீனவர்களின் உதவியை நாடி, படகுகளோடு வெள்ளம் பாதித்த அண்டை மாவட்டங்களுக்கு அவர்களை அனுப்பி வைத்து நீரில் மூழ்கப் போன பல உயிர்களைக் காப்பாற்றியதில் பெரும்பங்கு வகித்தார். இவரது பேரிடர் மீட்பு நுட்பமிக்க நிர்வாகத் திறமையைப் பாராட்டி கேரளா முதல்வர் பினராய் விஜயன் தனது அலுவலகத்தில் சிறப்புப் பணி அதிகாரியாக்கினார்.

ஐ.ஏ.எஸ்.. வென்றதும், மக்களிடம் சென்றதும் எப்படி. அவரிடம் கேட்டோம்....

சொந்த ஊர் ஈரோடு. எனது அப்பா இன்ஜினியர், அம்மா பி.எட்., படித்த குடும்பத் தலைவி. சென்னை மருத்துவக் கல்லூரியில் படிக்கும் போது மாணவர் செயலாளராக இருந்தேன்.



சமூக சேவைகளில் ஈடுபடும் வாய்ப்பு வந்தது. நிறைய ஏழைகள் சிகிச்சைக்கு வருவதைப் பார்த்தேன். இவர்களின் சமூக மேம்பாட்டிற்கு நாம் எதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கியது. கூடவே படித்த வாசுகியும் நானும் நண்பர்களானோம். அவரும் சமூகசேவையில் அக்கறையுள்ளவர்.

'டாக்டர் பணிக்கு செல்லாமல் இருவரும் இணைத்து ஐ.ஏ.எஸ்., படிப்போம்: நாட்டிற்கு எதாவது செய்வோம்' என்று முடிவு செய்தோம்: வீட்டில் ஏற்கனவே இரண்டு அக்காக்கள் டாக்டராக இருந்ததால். பெற்றோரும் எனது புதிய லட்சியத்திற்கு சம்மதம் தெரிவித்தனர். தற்போது தமிழக முதல்வரின் செயலாளராக உள்ள உமாநாத் ஐ.ஏ.எஸ்., மருத்துவக் கல்லூரியில் எங்கள் சீனியர், அவர் படித்து முடித்தது எங்களுக்குத் தூண்டுதலாக அமைந்தது. மதுரையில் பணிபுரிந்து கொண்டிருந்த இறையன்பு ஐ.ஏ.எஸ்.,சை சந்தித்த போது அவர் வழி காட்டினார். கடும் முயற்சியோடு தேர்வு எழுதினோம்.

எனக்கு ஐ.எப்.எஸ்.. (பாரின் சர்வீஸ்), வாசுகிக்கு ஐ.ஏ.எஸ்., கிடைத்தது. நாட்டிற்குச் சேவை செய்யலாம் என நினைத்திருந்த நான் வெளிநாட்டிற்குப் போக விருப்பமில்லாமல், அந்த வேலையை ராஜினாமா செய்தேன். மீண்டும் ஐ.ஏ.எஸ்., எழுதினேன். ஆனால்

ஐ.ஆர்.எஸ்., தான் கிடைத்தது. நண்பர்களாக இருந்த வாசுகியும் நானும் திருமணம் செய்தோம். நான் ஐ.ஆர்.எஸ்., வேலையை ராஜினாமா செய்துவிட்டு மீண்டும் எழுதினேன். இந்த முறை ஐ.ஏ.எஸ்., கிடைத்து கேரளாவில் பணியில் சேர்ந்தேன். வாசுகியும் கேரள அதிகாரியானார்.

படகு அனுப்பி பல உயிர்களைக் காத்தேன்

கேரளாவில் 2018ல் தொடர் மழையால் கடும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. நான் கொல்லம் கலெக்டராக இருந்தேன். பக்கத்து மாவட்டங்கள் பத்தனம் திட்டாவும், ஆலப்புழாவிலும் கிராமங்கள் நீரில் மூழ்கின. பத்தனம் திட்டா கலெக்டர் நள்ளிரவில் பேசினார். நீரில் மூழ்கும் வீடுகளில் இருந்து மக்களை மீட்கவேண்டும், அதற்கு தீயணைப்புத் துறையின் கூடுதல் படகுகள் வேண்டும் என்றார்.

நான் மீன்வளத் துறை இயக்குனராக இரண்டு ஆண்டுகள் இருந்ததால், அதிகாரி என்பதைத் தாண்டி எனக்கு மீனவ தொழிலாளர்கள் எல்லாம் தனிப்பட்ட முறையில் பழக்கம். எனவே நள்ளிரவில் மீன்பிடி துறைமுகத்திற்குச் சென்று மீனவர்களின் உதவியை நாடினேன். அவர்களால் தைரியமாக தண்ணீருக்குள் சென்று மீட்க முடியும். உயிர்பயம் இல்லை; ஆனால் படகு சேதமாகும் என்று நினைத்தனர். படகுசேதமானால் அதற்கு நான் பொறுப்பெடுத்துக் கொள்கிறேன் என்றேன்.

நள்ளிரவில் 5 படகுகள் அனுப்பி கொஞ்சம் பேரை மீட்டோம். மறுநாள் காலையில் 60 படகுகள் அனுப்ப ஏற்பாடு செய்தேன். அதில் சென்ற மீனவர்கள் ஆயிரக் கணக்கானோரை மீட்டனர். முதல்வர் அலுவலகம் இதனைப் பாராட்டி, பிற மாவட்டங்களிலும் இந்த முறையைப் பின்பற்றியது. '2018' என்ற மலையாள திரைப்படத்தில் கூட இப்படி மீட்பு நடந்ததைக் காட்டியிருப்பார்கள்.

ஐ.ஏ.எஸ். ஆவது எப்படி

முயற்சியும், அர்ப்பணிப்பு உணர்வும் இருந்தால் யாரும் ஐ.ஏ.எஸ் தேர்வு எழுதலாம். ஏதாவது ஒரு டிகிரி போதும். பெரிய அறிவாளியாக, 100க்கு நூறு மதிப்பெண் எடுப்பவராக இருந்தால் தான் எழுத முடியும் என்பதில்லை. பொது அறிவு. மக்களோடு பழகும் தன்மை. எந்தப் பிரச்னையையும் எதிர்கொண்டு சமாளிக்கும் திறன் இருக்கிறதா என்று தான் பரிசோதிக்கிறார்கள்.

பள்ளிப் படிப்பின் போதே ஐ.ஏ.எஸ்.,சிற்கு திட்டமிட வேண்டும் என்பதில்லை. ஏனெனில் இந்தப் பணியில் உள்ள சவால்களைப் புரிந்து கொள்ளும் 'மெச்சூரிட்டி' பள்ளிப் பருவத்தில் இருக்காது. பள்ளிக் காலங்களில் பொதுஅறிவுத் திறனை வளர்க்கலாம்; நாளிதழ்கள் படிக்கலாம். டிகிரி இரண்டாமாண்டு வாக்கில், ஐ.ஏ.எஸ்., எழுதவேண்டும் என்று திட்டமிட்டுப் படிக்கத் துவங்கினால் போதும்.

வெளியில் இருந்து பார்த்தால் ஐ.ஏ.எஸ்., அதிகாரி என்ற பிரமிப்பு இருக்கும். ஆனால் நிறைய அர்ப்பணிப்பு இந்தப் பணிக்குத் தேவை. இது எனக்கு ஏற்ற பணி: என்னால் 100 சதவீத உழைப்பைத் தர முடியும் என்று நினைப்பவர்கள் துணிச்சலோடு சிவில் சர்வீஸ் எழுதலாம். தேர்வு கடினம் தான் என்றாலும் முயற்சித்தால் முடியாதது அல்ல. தமிழகத்தில் இருந்து நிறைய இளைஞர்கள் இன்னும் சிவில் சர்வீசிற்கு வர வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார்.

30 இரமண மாமுனிவரின் சிறப்புகள்

பாரத மணித்திருநாட்டிற்குத் தமிழ் மண்ணிற்குப் பேரும் பெருமையும் அழியாப் புகழும் தேடித்தந்த அருளாளர்களில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர் ரமண முனிவர். தமிழ்நாட்டில் விருதுநகருக்குப் பக்கத்தில் உள்ள திருச்சுழி என்னும் சிற்றூரில் பிறந்து அருணாச்சலப் பெருமான் வீற்றிருக்கும் திருவண்ணாமலையில் முக்தி அடைந்த ஆன்மிகப் பேரொளி அவர் (1879–1950) நவம்பர் 14. அவரது நினைவு நாள்.

பகவான் ஸ்ரீரமணர் எங்கும் இருப்பவர். எப்போதும் இருப்பவர். அழிவே இல்லாதவர். அவர் நிரந்தர சூரியன், பாரத தேசத்தின் மிகப்பெரிய பொக்கிஷம் பகவான் ஸ்ரீரமணர். அந்த ஒளியை நமக்குள் ஏற்றிக்கொள்ள நாம்தான் முயற்சிக்க வேண்டும்"– இவ்விதம் குறிப்பிடுவார் எழுத்தாளர் பாலகுமாரன்.

மாறு பட்ட சிந்தனை

ஷிக்கெரா என்ற மேனாட்டறிஞர் "வெற்றியாளர்கள் வித்தியாசமான செயல்களைச் செய்பவர்கள் அல்ல, வித்தியாசமான முறையில் செயல்களைச் செய்பவர்கள்" என்று குறிப்பிடுவார். அதுபோல் மாறுபட்டுச் சிந்திப்பவர் ரமண முனிவர். ஒருமுறை அவரது ஆசிரமத்தில் நடந்த நிகழ்ச்சி இதனைப் பறைசாற்றுகிறது. ஆசிரமத்தில் பக்தர்கள் அழகான தோட்டம் ஒன்றைப் போட்டுப் பாதுகாத்து வந்தார்கள், மிகவும் அருமையான செடிகளையும் அரிய மூலிகைகளையும் கொண்டு வந்து நட்டு வளர்த்து வந்தார்கள். ஒருநாள் ஆசிரமத்து கோசாலையில் இருந்த சில பசுமாடுகள் தோட்டத்திற்குள் நுழைந்து சில செடிகளைத் தின்றுவிட்டன. இதைக்கண்ட பக்தர்களுக்கு வருத்தம் உண்டாயிற்று. அம்மாடுகளின்மீது கோபமும் ஏற்பட்டது. 'மாடுகள் செடிகளை

அழித்துவிட்டன' என்று திரும்பத் திரும்பச் சொல்லியவாறு மாடுகளின் மீதே குற்றம் சாட்டிக் கொண்டிருந்தனர்.

இந்நிலையில் அவர்களுடைய சிந்தனையை வேறுதிசையில் திருப்பினார் ரமண முனிவர்.

தோட்டத்திற்குள் பசுமாடு வரக்கூடாது என்பது நமக்குத்தானே தெரியும், பசுமாட்டுக்குத் தெரியாது, தெரியும்படி செய்யவும் முடியாது. இந்த நிலையில் தோட்டத்துக்கு நன்றாக வேலிபோட்டுக் காப்பாற்றி இருந்தால் மாடுகள் நுழைந்திருக்குமா? நாம் எதைச் செய்யவில்லையோ அதை நினைக்காமல் பசுமாடு தெரியாமல் இயல்பாகச் செய்வதை நினைத்துக் கோபப்படலாமா? செய்ய வேண்டியதைச் செய்யாமல் இருந்தது நம் குற்றம் அல்லவா? என்று சிரித்துக் கொண்டே பக்தர்களிடம் மாறுபட்ட ஒரு வினாவை முன்வைத்தார் ரமண முனிவர்.

மௌன உபதேசம்

ஒருவர் ரமண மகரிஷியை "ஏன் தாங்கள் ஊர் ஊராகச் சென்று மக்களுக்கு உபதேசம் செய்வதில்லை?" என்று கேட்டார். அதற்கு ரமணர் கூறிய பதில் வருமாறு.

"நான் அதைச் செய்யவில்லை என்று உனக்கு எப்படித் தெரியும்? மேடைமீது ஏறி மக்களுக்குச் சொற்பொழிவு செய்வதுதான் உபதேசமா? உபதேசம் என்பது அறிவைப் புகட்டுவது. மௌனம் ஒன்றினால்தான் உண்மையான உபதேசத்தைச் செய்ய முடியும். ஒரு மணி நேரம் ஆரவாரமான பேச்சை ஒருவன் கேட்கிறான். கேட்கும்போது உற்சாகமாக இருக்கிறான். பிறகு அந்தப் பேச்சிலே கேட்டபடி தன் வாழ்வைத் திருத்திக் கொள்ள அவன் முயற்சி செய்வதில்லை. பேச்சு நன்றாக இருந்தது என்று சொல்கிறான். அது போதுமா? இன்னும் ஒருவன் பரிசுத்தமான ஒரு சந்நிதியில் அமர்ந்து சிறிது நேரத்தில் தன் வாழ்க்கை நோக்கம் முழுவதும் மாறி விடுகிறான். இந்த இரண்டு உதாரணங்களில் எது சிறந்தது? பயனின்றி உரக்கப் பேசுவது நல்லதா? மௌனமாக அமர்ந்து ஆன்ம சக்தியை எங்கும் பரப்புவது நல்லதா? அருளின் மிக உயர்ந்த வடிவம் மௌனம் அதுவே உயர்ந்த உபதேசமும் ஆகும்

என்னும் ரமணரின் மணிமொழி இங்கே கருத்தில் கொள்ளத் தக்கதாகும்.

நிகழ்காலத்தில் வாழுங்கள்

நிறைமொழி மாந்தரான பகவான் ரமணரின் அமுதமொழிகள் அருமையும் எளிமையும், அழகும் ஆற்றலும் ததும்பி நிற்பவை. மந்திரம்போல் வாழ்வில் என்றென்றும் பின்பற்றத் தக்கவை. ஓர் எடுத்துக்காட்டு...

'மரணத்திற்குப் பிறகு என்ன ஆகும்?" என்று கேட்கிறீர்கள். நிகழ்காலத்தில் வாழுங்கள். எதிர்காலம் தானே தன்னைப் பார்த்துக் கொள்ளும், எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். இறந்தகாலமும் இல்லை, எதிர்காலமும் இல்லை. நிகழ்காலம் மட்டுமே உண்டு. அனுபவித்த போது நேற்று என்பது நிகழ்காலம் அனுபவிக்கப்படும் போது எதிர்காலமும் நிகழ்வே. எனவே அனுபவம் என்பது நிகழ்காலத்தில் மட்டுமே உண்டு.

நிகழ்காலத்தில் வாழ்வாங்கு நல்ல எண்ணம் வாழ்தல் வேண்டும். இதுவே பகவான் ரமணர் வலியுறுத்தும் வாழ்க்கை நெறி.

ரமண மந்திரம்

'நான் யார்' எனப் பார்; அன்னியத்தை விடு; தானாகத் துயர் போகும். ஈசன் மேலே எல்லாப் பாரமும் போட்டுக் கவலையற்று இரு; அவன் எப்பாவத்தையும் தாங்க வல்லவன். ஒன்றும் நினையாது இருந்து உள்ளத்தை உன்னுள் இருத்து. ஆத்ம ஸ்வரூபம் அடையுமட்டும் ஆத்ம விசாரத்தை விடாதே. 'நான் ஆர்?' என்னும் விசாரத்தாலே ஊனோடு உற்ற உறவு ஒழியும்; அலையும் மனதை இறைவனுக்கு அளி; அதுவே பக்தி; உன்னுள் உள்ள ஈசனை விடாதே; எழும்பும் நினைவுகளை எல்லாம் நசுக்கு: பெண்–ஆண் பேதம் போக்கு, அந்த பேதம் போக்கவே மன்றல் வழியாக ஏற்பட்டது. பிறருக்கு ஈவது தனக்கே ஈவதாகும்; தாழ்ந்து நடக்க நடக்க நல்லது கீழோர் பாலும் வெறுப்பைக் கெடு, சொன்னசொல் தவறாதே; அன்னியர் காரியத்தில் பிரவேசிக்காதே, ஈசன் ஆள் என்று எவையும் இயற்று; ஆன்மாவில் மனதைப்

பதி, அதுவே குருவின் சொற்படி நிற்றல் ஆகும். எமக்கு எதுவும் கொடுக்க வேண்டாம். பேதம் நீங்கின்போதும்" இதுவே ரமண மந்திரம் ஆகும்.

"அவரவர் பிராப்தப் பிரகாரம் அதற்கானவன் ஆங்காங்கிருந்து ஆட்டுவிப்பான் என்றும் நடவாதது என் முயற்சிக்கினும் நடவாது நடப்பது என்தடை செய்யினும் நில்லாது இதுவே நிண்ண ஆதலின் மௌனமா யிருக்கை நன்று-

என்பதே பகவான் ரமணரின் 71 ஆண்டுகால நிறைவாழ்வு உணர்த்தும் தலையாய செய்தியாகும்.

'பண்பு' எனப்படுவது 'பாடு அறிந்து ஒழுகுதல்' அதாவது உலக வழக்கம் அறிந்து ஒழுகுதல். மகா ரமண முனிவரின் வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்ச்சி

ஒருநாள் ரமண முனிவரைப் பார்க்கச் சில ஐரோப்பியர்கள் வந்திருந்தார்கள். அவர்களில் இரண்டு பேர் பெண்மணிகள். பகவான் கட்டிலின் மேல் அமர்ந்திருந்தார் சிறிது நேரத்தில் பெண்கள் இருந்த இடத்தில் சுவரின் மேல் சாய்ந்த படி அந்த இரண்டு மேல்நாட்டுப் பெண்களும் உட்கார்ந்தார்கள். நம்மைப் போலத் தரையில் உட்கார்ந்து பழக்கமில்லாமையின் அவர்களில் ஒருவர் தம் காலை நீட்டிக் கொண்டார். ரமண முனிவருக்கு அருகில் நின்று அவருக்கு வேண்டியவற்றைக் கவனித்துக் கொண்டிருந்தவர்களில் ஒருவர் இதைப் பார்த்தார். காலை மடக்கிக் கொள்ளும்படி சாடை காட்டினார். அந்தப் பெண்மணி உடனே காலை மடக்கிக் கொண்டார்.

அப்பெண் வேண்டுமென்று காலை நீட்டவில்லை. பழக்கம் இல்லாமையாலும் சம்பிரதாயம் தெரியாமையாலும் நீட்டினார். பிறகு மடக்கிக் கொண்டார். ஆனால் அவர் மனத்தில் ஒரு விதமான கவலை பாய்ந்தது. 'நாம் பெரிய அபசாரத்தைப் பண்ணி விட்டோமே' என்ற எண்ணம் உண்டாயிற்று' அவர் கண்ணில் நீர் ததும்பியது.

இதை ரமண முனிவர் கவனித்தார். காலை மடக்கச் சொன்ன அன்பரைக் கடிந்து கொண்டார். அவரவர்கள் இயற்கையின் படி இருப்பதையே பகவான் விரும்புவார். ஆகையால் அந்தப் பெண்மணியைப் பார்த்து, ‘உங்கள் சௌகரியப் படியே காலை நீட்டிக் கொள்ளலாம். பழக்கமில்லாத உங்களுக்குக் காலை மடக்கிக் கொண்டு உட்காருவது கஷ்டமாக இருக்குமே!’ என்றார். அந்த அம்மையார் அப்படிச் செய்ய மனம் கொள்ளவில்லை. தெரியாமல் தப்பு செய்து விட்டோமே என்ற வருத்தத்துடன் இருந்த அவர் மறுபடியும் காலை நீட்டத் துணிவாரா?

ஆனால் முனிவர் பிரானுக்கு மாத்திரம் சமாதானம் உண்டாக வில்லை. அவர் காலை நீட்டியே உட்கார்ந்திருந்தார். அப்போது உடம்பெல்லாம் வாயுப்பிடிப்பு ஏற்பட்டிருந்தது அவருக்கு. ஆனாலும் அந்த அம்மையார் படும் துன்பத்தைத் தாமும் படத் துணிந்தார். பத்மாசனத்தில் அமர்ந்து கொண்டார். அருகில் உள்ளவர் எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை.

‘விதி என்றால் எல்லாருக்கும் ஒரே விதிதான். நான் மாத்திரம் அதற்கு விதி விலக்கா?’ இங்கே யாரும் காலை நீட்டக் கூடாது என்று சொல்லி அன்று முழுவதும் அப்படியே உட்கார்ந்திருந்தார்

இது தான் சிறந்த பண்பு எனப்படுவது. இத்தகைய சான்றோர்கள், மகான்கள், புலவர்கள், தலைவர்கள் நிறைந்ததுதான் நம்நாடு. இதனாலேயே இந்த உலகம் இன்றும் நிலை பெற்று விளங்குகிறது.


31 காந்தியடிகள் வாழ்வில் சுவையான நிகழ்வுகள்

ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல் அதாவது வறியவர்க்கு உதவுதல் என்கிறது இப்பாடல்

வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை மற்றெல்லாம்
குறியெதிர்ப்பை, நீரது உடைத்து (குறள்.221)

என்பது வள்ளுவம்.

காந்தியடிகளின் வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்ச்சி. ஒருநாள் நள்ளிரவு. ஆசிரமத்தின் சமையலறையில் ஒரு திருடன் நுழைந்து விட்டான். அவன் பசியுடனிருந்தானோ அல்லது அவனுக்கு வேறு நோக்கம் இருந்ததோ ஒருவரும் அறியார். ஆனால் சிலர் அவனைப் பிடித்து ஓர் அறையில் தள்ளிப் பூட்டி விட்டனர்.



பொழுது விடிந்தது. காலைக் கடன்களை முடித்துவிட்டு காந்தியடிகள் காலை உணவு அருந்த உட்கார்ந்த பொழுது, அத்திருடனை அவர் முன் கொண்டு வந்து நிறுத்தினர். யார் அவனைப் பிடித்தார்கள்? எவ்விதம் பிடித்தனர் என்பதையெல்லாம்

கேட்டுக் கொண்ட பின், 'இவனுக்குக் காலை உணவு அளித்தீர்களா, இல்லையா?' என்று கேட்டார். ஆசிரமவாசி ஒருவன். 'இல்லை, பாபு'எனப் பகர்ந்தான். அப்படியானால்' முதலில் இவனுக்குச் சிற்றுண்டி கொடுத்து விட்டுப் பின் என்னிடம் கொண்டு வா' எனக் காந்தியடிகள் சொன்னார்.

'கள்வனுக்கு உணவு அளிப்பதா?' என்று ஆசிரமவாசி ஆச்சரியத்துடன் கேட்டான். 'ஆம்'என்று காந்தியடிகள் பதில் கூறினார். காந்தியடிகளின் கட்டளையால் அவனுக்கு உணவளிக்க நேர்ந்தது. ஆனால் கள்வனும் மனிதனே. அவனுக்கும் பசி உண்டாகும் என்பதோ நம் கட்டுப்பாட்டில் இருக்கும் மனிதனுக்கு உணவு அளிப்பது நமது பொறுப்பு என்பதோ, படவில்லை. ஆனால், காந்தியடிகளா இதை மறப்பார்? அவ்வாசிரமவாசியின் மனதில் பின்பு அத்திருடன் அவர் முன் வந்த பொழுது, அவனை அன்புடன் நோக்கி அறிவுரை கூறிக்கொண்டே, 'தம்பி. நீ திருடக் கூடாது. திருடுவது பாவம். ஏழ்மையின் காரணமாக நீ திருட நேர்ந்திருந்தால் என்னிடம் நான் உனக்காக ஆசிரமத்தில் வேலைக்கு ஏற்பாடு செய்து கொடுக்கிறேன்' என்று சொன்னார். **(காந்திஜி வாழ்வில் சுவையான நிகழ்ச்சிகள், பக். 550-551)** இத்தகைய சிறந்த மனிதர்கள் நிறைந்தது தான் நம்நாடு.

32 வாசிப்பு தந்த வரம்

இந்தியாவில் குழந்தைகள் தினம், ஒவ்வொரு ஆண்டும் நவ., 14ல் நம் முதல் பிரதமர் ஜவகர்லால் நேருவின் பிறந்த தினத்தில் கொண்டாடப்படுகிறது. குழந்தைகள் மீது மிகுந்த அன்பும். மதிப்பும் கொண்டிருந்தார் நேரு. ரோஜாவின் ராஜா என அன்புடன் அழைக்கப்பட்டவர்.

பள்ளியில் படித்த காலத்திலேயே கடும் உழைப்புடன் திகழ்ந்தார். பிற்காலத்தில் அரிய சாதனைகள் புரிய அவரது அயராத உழைப்பே அடிப்படையாக அமைந்தது.

நற்சிந்தனையை ஏற்படுத்திய அவரது பள்ளி வாழ்க்கை, அங்கு படித்த புத்தகம் குறித்துப் பார்ப்போம்....

ஐரோப்பிய நாடான இங்கிலாந்து தலைநகர் லண்டனில் அமைந்துள்ளது ஹாரோ பள்ளி. ஏற்றத்தாழ்வைப் போக்கும் சீருடை, எழிலான சுற்றுப்புறம் உடையது. இது, ஜான்லையன் என்பவரால், கி.பி., 1572ல் உருவாக்கப்பட்டது. பள்ளிக் கல்வியை இங்குதான் பயின்றார் நேரு.

இங்கிலாந்தில் பிரதமராக பொறுப்பு வகித்த ஐந்து பேர் இங்கு படித்தவர்கள். இது தவிர ஐந்து மன்னர்கள், நோபல் பரிசுபெற்ற இலக்கியச் சிற்பிகள், உலகப்புகழ் பெற்ற நடிகர்கள் எனப், பலரும் இதேபள்ளியில் படித்துள்ளனர். இங்கு நேரு படித்த போது, அவருக்கு ஒரு புத்தகம் கிடைத்தது. ஐரோப்பியாவை உருவாக்கிய ஜோசப் கரிபால்டியின் வாழ்க்கை வரலாறு தொடர்பான முதல் பகுதி புத்தகம் தான் அது. கருத்தூன்றி வாசித்தார் நேரு. அவரை மிகவும் கவர்ந்து விட்டது. அந்தப் புத்தகத்தின் மற்ற இரண்டு பாகங்களையும் வாங்கி ஆர்வத்துடன் படித்தார். பிற்காலத்தில் இந்திய விடுதலை இயக்கத்தில் அவரை

பங்கேற்கத் தூண்டியது அந்தப் புத்தகம் தான்.

பள்ளியில் கிடைத்த புத்தகப் பரிசு நேருவின் வாழ்க்கையில் உயர்ந்த லட்சியத்தை வகுக்கக் காரணமாக அமைந்தது. பின், இந்தியப் பிரதமராகப் பொறுப்பு வகித்த போது, 1960ல் இந்தப் பள்ளிக்கு வருகை தந்தார் நேரு. மிகச் சிறப்பான வரவேற்பும் மரியாதையும் அளிக்கப்பட்டது. வாழ்வில் ஒழுக்கத்தையும், சிறந்த கல்வியையும், பகுத்தறியும் திறனையும் அந்தப் பள்ளியில் கற்றுக் கொண்டதாக அப்போது நினைவு கூர்ந்தார் நேரு.

புகழ் மிக்க இந்தப் பள்ளி வளாகத்தில் தான், “ஹாரிபாட்டர் அண்ட் தி பிலாசபர்ஸ் ஸ்டோன்” என்ற திரைப்படத்தில் சில காட்சிகளுக்கான படப்பிடிப்பு நடந்தது. நேருவின் பெயரால் இந்தப் பள்ளியில் ஒரு அமைப்பு இன்றும் இயங்கி வருகிறது. இந்த அமைப்பின் தற்போதைய தலைவர் அசர்கான் என்றமாணவர், ‘பள்ளியில் எல்லா மாணவர்களுக்கும் ஜவகர்லால் நேருஒரு முன்மாதிரி...’என பெருமையுடன் குறிப்பிட்டுள்ளார்.

ஜவகர்லால் நேரு பிறந்த நாளில் சிறந்த புத்தகங்களைப் படித்து, நல்லறிவு பெற்று நாட்டையும், நம்மையும் உயர்த்த உறுதி ஏற்போம்.

பொன்மொழிகள்

வாழ்வில் சிறப்பு பெற நல்லறிவுரைகள் பல வழங்கியுள்ளார் நேரு. அவற்றில் சில...”

- இன்றைய குழந்தைகளே நாளைய இந்தியாவை அமைப்பவர்கள்.
- அறநெறியை மறந்துவிட்டால் அழிவொன்றே விளைவாகும்.
- உலக வரலாற்றைப் படிப்பது சிறப்பு: வரலாற்றைப் படைப்பதே அதனினும் சிறப்பு.
- நற்பண்பு இல்லாத அறிவு ஆபத்தானது.
- வாய்மையின் நெருங்கிய நண்பன் அச்சமின்மை
- திட்டமில்லாத செயல் துடுப்பில்லாத படகுக்கு ஒப்பானது
- கோபத்தை அன்பாலும், தீமையை நன்மையாலும் தான் போக்க முடியும்.
- அறிவுள்ள அதிகாரம் சிறப்புறும்.

33 பாட்டினில் அன்பு செய்

இந்தியாவிலுள்ள இசை வடிவங்கள் கிராமியப் பழமையான வரலாறு கொண்டவை. கிராமிய உள்ளூர் இசை மரபுகள், அந்தந்தப் பகுதிகளுக்கான சமூக, பொருளாதார, ஆன்மிகத் தேவைகளோடு இணைந்தே வந்திருக்கின்றன. இந்திய மரபில் கர்நாடக, ஹிந்துஸ்தானி, கஸல், காவாலி, கிராமிய, நாட்டுப்புற இசை எனப்பல இருக்கின்றன. இசை தொடர்பான செய்திகளே காணொளியில் அதிகம் இருக்கிறது என்றால் மனித வாழ்வுடன் ஒன்றியது பாட்டு என்பது புரியும்.

தெய்வங்களுடன் இசைக்கருவியும், பாட்டும் இணைந்தே இருக்கிறது என்பதால் கண்ணனின் புல்லாங்குழல், சரஸ்வதியின் வீணை, சிவனின் உடுக்கை. நந்தியின் மத்தளம், நாரதரின் தும்புரு என இசையின் வடிவங்களாக தெய்வங்களைப் போற்றுகிறோம்.

பிறப்பு முதல். இறப்பு வரை அதாவது தாலாட்டில் தொடங்கும் மனித வாழ்க்கை ஒப்பாரியில் முடிவடைகிறது. பாட்டு என்பது ரசிப்பையும், மகிழ்ச்சியையும் தருவதுடன், கவலை, வேலையின் களைப்பைப் போக்குகிறது. ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பு இருக்காது என்பது நம் வாழ்வின் அங்கமாகி விட்டது.

இதைத் தவிர கோலாட்டம், நலுங்குப் பாட்டு, நடனப் பாட்டு, கோயில் பாட்டு கச்சேரிகள், கூத்துப் பாடல்கள், காதல் பாடல்கள் எனப் பாட்டில் பல வகைகள் உள்ளன.

இசையால் வசமாகாத இதயமில்லை, இசை என்றால் நம்மை இசைய வைப்பது மற்றும் ஒழுங்கு செய்யப்பட்ட அழகு ஒலி எனப் பொருள்.

ஒரே ஓசையை திரும்பத் திரும்ப உச்சரிப்பதால் எழும்பும் அதிர்வு மனித உடலைக் குறிப்பிட்ட லயத்திற்கு வயப்படுத்துவதால் மந்திரங்களே இசையின் தொடக்கமாக இருக்கலாம் என்கிறார்கள் ஆய்வாளர்கள். தங்கள் படைப்புகளில் அன்புடன் கடவுளைப் பாடிப் பரவசப்பட்டதால் தான் அவை காலம் கடந்தும் நிற்கிறது. ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே என சிவனை வணங்குகிறது தேவாரம். கடவுளை வழிபட்ட அடியவர்கள் யாவரும் அன்பாய் உருகிப் பாடி இருக்கிறார்கள். இசையும் அன்பும் பிரிக்க முடியாதது.

இசையும், அன்பும் இருக்கும் இதயம் ஈரமுள்ளதாக இருக்கும்.

இசை ஒருவனை இசைய வைத்து விடும். அதனால் தான் பாரதியார், பாட்டினில் அன்பு செய்"என்கிறார் புதிய ஆத்தி சூடியில். கடவுளைப் பாடிய சைவ, வைணவ அடியார்கள், சங்கீத மும்மூர்த்திகள், தேவாரம் பாடிய தமிழ் மூவர், கம்பன், அருணகிரிநாதர், தாயுமானவர், குமரகுருபரர் எனப் பலரும் கடவுளை அன்பின் வடிவமாகவே கருதிப் பாடினர்.

மகாகவி பாரதியாரின் பக்திப் பாடல்களில் முதல் பாடல் விநாயகர் நான்மணிமாலை. பவளம். முத்து, பச்சை, நீலம் ஆகிய மணிகளைக் கோர்த்து மாலையாக்கினால் எப்படி இருக்குமோ அது போல, வெண்பா, கலித்துறை, விருத்தம், அகவல் ஆகிய யாப்புக் கவிதைகள் ஒழுங்காக அமைத்துப் பாடப்பெறுவது நான்மணி மாலை. இப்பாடலில் இவை 10 முறை பயின்று வருகின்றன. அது மட்டுமல்ல, முதல் பாவின் ஈற்றடிச் சொல்லை வரும் பாவின் முதலடிச் சொல்லாக அந்தாதியாக்கி இருப்பதும் சிறப்பு.

பாரதியாரின் இலக்கியப் புலமைக்கும், இலக்கணத் தேர்ச்சிக்கும் அடையாளமாகத் திகழ்பவை இந்தக் கவிதைகள். அது மட்டுமல்ல... தேசப்பற்றையும் இதில் காணலாம்.

பகவத் கீதையில் கண்ட மெய் ஞானத்திற்கு வடிவம் கொடுக்க நினைத்து உருவாக்கிய இலக்கியமே விநாயகர் நான்மணிமாலை.

அற்புதமான இந்த படைப்பில்,

விண்டுரை செய்குவன் கேளாய்
புதுவை விநாயகனே!
தொண்டுன தன்னை
பராசக்திக் கென்றும் தொடர்ந்திடுவேன்;
பண்டைச் சிறுமைகள் போக்கி,
என்னாவிற் பழுத்தகவைத்
தெண்டமிழ்ப்பாடல் ஒருகோடி
மேவிடச் செய்குவையே.

எனப் பாடுகிறார். அன்றாட வாழ்வு, தேசம் என எல்லாவற்றிலும் அன்பையே பாடல்கள் ஆக்குகிறார்.

"வீணையடி நீ யெனக்கு, மேவும் விரல் நானுனக்கு;
பூணும் வடம் நீ யெனக்கு, புது வைரம் நானுனக்கு;
காணுமிடந்தோறு நின்றன் கண்ணினொளி வீசுதடீ
மாணுடைய பேரரசே! வாழ்வு நிலையே கண்ணம்மா"

எனப் பாரதி இனிய தாம்பத்யத்தில் அன்பை விதைக்கிறார். பாட்டுகளின் கருத்துக்கள் மனிதனுக்கு அறிவை ஊட்டுகின்றன; கவலையை மறக்க வைக்கின்றன.

மனிதனுக்கு அன்றாட உழைப்பை முடித்தவுடன் ஓய்வும் நிம்மதியும் தேவைப்படுகிறது. அது மறுநாள் உழைப்பிற்குத் தயார்படுத்துகிறது; அதற்கு இசை, கலை, இலக்கியம், பாட்டு அவசியம்.

பாரதியார் விரும்புவது இயல்,இசை, நாடகம் என்ற முத்தமிழை அன்பால் போற்றி வளர்க்க வேண்டும் என்பதே.

"அன்பிற் சிறந்த தவமில்லை!
அன்புடையார் இன்புற்று வாழ்தலியல்பு "

அன்பே தவம் என்றும் தவத்தைச் செய்தால் நம் முயற்சியில் வெற்றி கிடைக்கும் என்கிறார் பாரதியார்.

"யாகத்திலே, தவவேகத்திலே
தனி யோகத்திலே பல போகத்திலே
ஆகத்திலே பல பக்தி கொண்டார்
தம் அருளினிலே உயர்நாடு'

என பாருக்குள்ளே நல்ல நாடு பாரத நாடு என்னும் பாடலில் கூறுகிறார்.

"அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்." (குறள் 71)

அன்பிற்கும் பிறர் அறியாமல் அடைத்து வைக்கும் தாழ் உளதோ? தம்மால் அன்பு செய்யப்பட்டாரின் துன்பம் கண்டு அன்புடையார் விடும் கண்ணீரே அன்பை அறிய வைக்கும் என்கிறார் திருவள்ளுவர்.

'அன்பே சிவம்' என்கிறார் திருமூலர்.

வள்ளலாரின் அருட்பெருஞ்சோதி தனிப்பெரும் கருணை என்னும் மந்திரம் அன்பின் வெளிப்பாடே

"அன்பு எனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பு எனும் குடில்புகும் அரசே!
அன்பு எனும் வலைக்குள் படுபரம் பொருளே
அன்பு எனும் கரத்து அமர் அமுதே
அன்பு எனும் கடத்துள் அடங்கிடும் கடலே
அன்பு எனும் உயிர் ஒளிர் அறிவே
அன்பு எனும் அணுவுள் அமைந்த பேரொலியே
அன்பு உருவாம் பரமசிவமே"

அன்பு எனும் பிடியால் கடவுளைக் கட்டிப் போட முடியும் என்கிறார் வள்ளலார். அன்பு என்ற ஒற்றைச் சொல்லுக்குப் பின்னால், மலையில் இருந்து அணு வரை பல வடிவங்கள் உண்டு என விளக்கப்படுகிறது.

அன்பு எனும் குடிலில் புகும் அரசன். அன்பு எனும் வலையில் படும் பரம்பொருள். அன்பு எனும் குடத்துள் அடங்கும் கடல், அன்பு எனும் உயிர் ஒளிரும் அறிவு, அன்பு எனும் அணுவில் அமைந்த பேரொளி எனப் பல்வேறு விதமாக அன்பின் ஆற்றலை விவரிக்கிறது. இந்த அன்பே உருவமாகி பரசிவம் என்ற கடவுளின் வடிவம் என்கிறது திருவருட்பா. கடவுளை அன்பு, ஆன்ம நேயத்துடன் அணுகுவதன் மூலம் அருளைப் பெறலாம் என்கிறது.

உலகில் வாழ்வதற்கு ஒரே ஒரு ஆயுதம் உள்ளது என்றால் அது அன்பு என்னும் ஆயுதம்தான். அன்பு ஒன்றே அனைவரையும் இணைய வைக்கும். இணைக்க வைக்கும். அதனால் தான் அந்த அன்பை பாப்பா பாட்டில்,

"அன்பு மிகுந்த தெய்வமுண்டு துன்பம்
அத்தனையும் போக்கிவிடும் பாப்பா"!

என்கிறார் பாரதியார்.

34 உலகின் சிறந்த 100 மனிதர்கள்

இருபதாம் நூற்றாண்டு வரை, உலகின் சிறந்த 100மனிதர்கள் மைக்கேல் எச். ஹார்ட் வரிசைப் படுத்துகின்றார்...

அதற்கான காரணங்களை விளக்குகின்றார்.

சீசர், அலெக்சாண்டர், தைமூர், கிராகாம்பெல்.

இவர்களுள் மிகச் சிறந்தவர் யார்?

1726இல், லண்டனில் நான் இருந்தபோது, இப்படி ஒரு வாதம், சில அறிஞர்கள் இடையே நிகழ்ந்ததை நான் கேட்டேன் என, வால்டேர் எழுதிய, ஆங்கிலேயர்கள் பற்றிய கருத்துகள் என்ற நூலில் எழுதி இருக்கின்றார்.

அதற்கு ஒருவர், எந்தவிதமான ஐயத்திற்கும் இடம் இன்றி, சர் ஐசக் நியூட்டன்தான், மனிதகுலத்தில் சிறந்த மனிதர் என்றார்.

இதுதான் என் கருத்தும். ஏனென்றால், வன்செயல்களால் நம்மை அடக்கி ஆண்ட அரசர்களை விட, உண்மையின் ஆற்றலைக் கொண்டு மாற்றங்களை விளைவிப்பவர்கள்தான் மாமனிதர்கள் என்கிறார்.

இந்த நிகழ்ச்சி, இந்த உலகில் இதுவரை வாழ்ந்தவர்களுள், வரலாற்றின் போக்கில் பெரும் மாறுதல்களை, பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியவர்கள் யார் என்ற கேள்வியை எழுப்புகின்றது.

இந்த வினாவுக்கு விடைதான், நான் எழுதி இருக்கின்ற இந்த நூல். அந்த வகையில் 100பேர்களை நான் தெரிவு செய்து இருக்கின்றேன். அவர்களை வரிசைப்படுத்தி இருக்கின்றேன்.

முதல் விதி....உண்மையிலேயே வாழ்ந்தவர்கள் மட்டும்தான் இந்தப் பட்டியலில் இடம் பெறுகின்றார்கள். பெயர் தெரியாதவர்கள் தகுதி பெறவில்லை. சக்கரத்தைக் கண்டுபிடித்தவர் யார்? தனி ஒரு மனிதர் அல்ல. அப்படி இருந்தால், அவர்தான் உலகின் மிகப்பெரிய செல்வாக்குப் பெற்றவர்.அவரைப் போலவே, எழுதும் முறையை முதலில் கண்டுபிடித்தவர் யார் என்று தெரியவில்லை.

பெஞ்சமின் ஃபிராங்ளின், இளைய மார்ட்டின் லூதர் கிங், பேப் ரூத், லியோனர்டோ டா வின்சி போன்றோர், 1000 பேருக்குப் பின்வரும் சிறப்புப் பட்டியலில்தான் இடம் பெறுகின்றார்கள்.

ஆனால், ஹிட்லர் இடம் பெறுகின்றார். மின்சாரம் இன்றி இனி உலகு இல்லை.

எனவே, மைக்கேல் ஃபாரடே, மாக்ஸ்வெல் போன்ற அறிஞர்களின் படைத்த வரலாறை, நெடுங்காலத்திற்குப் பின்னரும் நமது தலைமுறையினர் உணர்ந்துகொண்டே இருப்பார்கள்.

உலகின் வரலாற்றை மாற்றியவர்களுள்

முதல் இடத்தை முகம்மது நபிக்குக் கொடுத்து இருக்கின்றேன்.

இரண்டாம் இடம்

ஐசக் நியூட்டன்

இயேசு கிறிஸ்து மூன்றாம் இடம்.

கௌதம புத்தர் நான்காம் இடம்.

மகாவீரர் 99ஆம் இடம்.

காந்தி 108ஆவது இடம்.

அதற்கான காரணங்களை விளக்கி இருக்கின்றேன்.

ரைட் சகோதரர்கள் போலவே, கார்ல் மார்க்சும், ஃபிரடெரிக் எங்கெல்சும் இடம் பெறுகின்றார்கள்.

வானொலியைக் கண்டுபிடித்த மார்கோனி,

பரிணாமக் கோட்பாட்டை வரைந்த சார்லஸ் டார்வின் இடம் பெறுகின்றார்கள். இந்தப் புத்தகத்தைப் படிக்கின்ற உங்களை நான் ஒன்று கேட்டுக்கொள்கின்றேன்.

நீங்களே இதுபோன்ற ஒரு பட்டியலை எழுதிப் பாருங்கள். அப்படி ஒரு பட்டியலைத் தொகுக்கும் பணியில், நீங்கள் பெருமகிழ்ச்சி அடைவீர்கள்.

புதுமைக் காட்சிகளைக் காண்பீர்கள் என்பதில் ஐயம் இல்லை.

மைக்கேல் எச்.ஹார்ட்

சரி.

அவரது பட்டியலில் இடம் பெற்ற 100பேர் யார்?

1. முகம்மது நபி
2. ஐசக் நியூட்டன்/ இயற்கையும், இயற்கை விதிகளும், இருளில் ஒளிந்து கிடந்தன. நியூட்டன் பிறந்ததால், அவை வெளிச்சத்திற்கு வந்தன.
3. இயேசு கிறிஸ்து
4. புத்தர்
5. கன்ஃபூசியஸ்
6. புனித பவுல்

   கிறித்துவ இறை இயலில், மிகப்பரந்த விளைவுகளை ஏற்படுத்தியவர்.
7. சாய் லுன்/ காகிதத்தை ஆக்கியவர்
8. ஜோஹான் கூட்டன்பெர்க் / அச்சுப்பொறி ஆக்கியவர்
9. கிறிஸ்டோபர் கொலம்பஸ் / அட்லாண்டிக் கடல் கடந்தவர்
10. ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் / சார்புக் கொள்கை வகுத்தவர்.
11. கார்ல் மார்க்ஸ்/ பொது உடைமைக் கொள்கை
12. லூயி பாஸ்டியர்/ வேதி இயல் அறிஞர்
13. கலிலியோ கலிலி/ தொலைநோக்கி ஆக்கியவர்
14. அரிஸ்டாட்டில்/ தருக்க இயல் ஆராய்ச்சியைத் தோற்றுவித்தவர்.

15. லெனின்/ ரஷ்யாவில் பொது உடைமை ஆட்சியை நிறுவியவர்.

16. மோசஸ்/ ஹீப்ரு மொழி அறிஞர்

17. சார்லஸ் டார்வின்/ உரு மலர்ச்சிக் கோட்பாட்டை வகுத்தவர்.

18. ஷி ஹவாங் தை/சீனப் பண்பாட்டில் சீர்திருத்தங்கள் செய்தவர்.

19. அகஸ்டஸ் சீசர்/ரோமப் பேரரசை நிறுவியவர்

20. மா சே துங்/ சீனாவில் பொது உடைமை ஆட்சியை நிறுவியவர்

21. ஜெங்கிஸ்கான்/நாடுகளை வென்று வரலாறு படைத்தவர்

22. யூக்ளிடு/கிரேக்கக் கணித அறிஞர்

23. மார்ட்டின் லூதர்/ 16ஆம் நூற்றாண்டு. கத்தோலிக்கத் திருச்சபைக் குறைபாடுகளை நீக்குவதற்காக, கிறித்துவ சமயச் சீர்திருத்த இயக்கத்தைத் தோற்றுவித்தவர்.

24. நிக்கோலஸ் கோபர்னிகஸ்/ தலைசிறந்த வான் இயல் அறிஞர் /போலந்து

25. ஜேம்ஸ் வாட்/ நீராவிப் பொறியை ஆக்கியவர்

26. மகா கான்ஸ்டன்டைன்/ ரோமப் பேரரசை ஆண்ட முதல் கிறித்துவர்.

27. ஜார்ஜ் வாசிங்டன்/அமெரிக்காவை ஒருங்கிணைத்தவர்.

28. மைக்கேல் ஃபாரடே/மின்சாரம்

29. ஜேம்ஸ் கிளார்க் மேக்ஸ்வெல்/ மின்இயல், காந்த இயல் இரண்டுக்குமான அடிப்படைச் சமன்பாடுகளை வகுத்தவர்.

30. ஆர்வில் ரைட், வில்ஃபர் ரைட்/ வான் ஊர்தி

31. அந்துவான் லோரன் லெவாய்சியர் / பிரெஞ்சு வேதிஇயல் அறிஞர்

32. சிக்மண்ட் ஃப்ராய்டு/ கனவுகளுக்கு விளக்கம் அளித்தவர்

33. மகா அலெக்சாண்டர்/ பண்டைய உலகில், பெரும் நிலப்பரப்பை வென்றவர்

34. நெப்போலியன்/ புகழ்பெற்ற தளபதி/பேரரசர்

35. ஹிட்லர் / இரண்டாம் உலகப் போர்.

36. வில்லியம் சேக்ஸ்பியர் /ஆங்கில நாடகம்.

37. ஆடம் ஸ்மித்/ பொருள் இயல் அறிஞர்

38. தாமஸ் எடிசன்/ பல்துறைப் புலமை வாய்ந்த் புத்தமைப்பாளர்.

39.ஆண்டனி வான் லியூவென்குக்/ நோய் நுண்மங்களைக் கண்டுபிடித்தவர்.

40. பிளேட்டோ/ அற இயல், மெய் விளக்க இயல் தோற்றுநர்.

41. மார்கோனி/ வானொலி

42. பீத்தோவன்/ இசை அறிஞர்

43. வெர்னர் ஹெய்சன்பெர்க்/ கதிர் இயக்க இயல் அறிஞர்

44. கிரகாம் பெல்/ தொலைபேசி

45. அலெக்சாண்டர் ஃபிளமிங்/ நோய் நுண்மங்களைத் தடுக்கும் பெனிசிலின் ஆக்கியவர்

46. சைமன் பொலிவர் /கொலம்பியா, வெனிசூலா, ஈக்வடார், பெரு, மெக்சிகோ ஆகிய ஐந்து தென் அமெரிக்க நாடுகளை, ஸ்பானியப் பேரரசின் பிடியில் இருந்து விடுவித்தவர்.

47.ஆலிவர் கிராம்வெல்/ இங்கிலாந்தில் எழுச்சி ஊட்டிய படைத்தலைவர்.

48. ஜான் லேக்/ ஆங்கில அற இயல் அறிஞர்

49. மைக்கல் ஏஞ்செலோ/ கலை இலக்கிய மறுமலர்ச்சி

50. போப் இரண்டாம் அர்பன். / பாலஸ்தீனத்தை, முஸ்லிம்களிடம் இருந்து மீட்கும்படி, கிறித்துவர்களுக்கு ஆணை பிறப்பித்தவர்.

51. உமறு இப்னு அல் கத்தாபு / கலீபாக்களுள் முதன்மை

52. அசோகர் / வட இந்தியாவில் முதலில் பெரும் பேரரசை நிறுவியர்.

53. புனித அகஸ்டைன்/ ரோமானிய இறைமை இயல் அறிஞர்

54. மேக்ஸ் பிளாங் /ஒலி அலைகளின் ஆற்றல் தொடர்ச்சியான ஓட்டம் அல்ல. சிறு சிறு கீற்றுகளை அல்லது பத்தைகளைக் கொண்டது என்பதை விளக்கியவர்.

55. ஜான் கேல்வின் / புரோட்டஸ்டண்ட் இறைமை இயல் அறிஞர்

56. வில்லியம் மோர்டோன்/ மயக்க மருந்தை ஆக்கியவர்.

57. வில்லியம் ஹார்வி / குருதி சுழன்று ஓடுகின்றது என்பதைச் சொன்னவர்.

58. ஹென்றி பெக்வரெல்/கதிர் இயக்கத்தை அறிவித்தவர்.

59. கிரிகோர் மெண்டல் / மரபுவழி குறித்து அடிப்படை வகுத்தவர்.

60. ஜோசப் லிஸ்டர் / அறுவை மருத்துவத்தில், நோய் நுண்மத் தடை ஆன்டிசெப்டிக் ஆக்கியவர்.

61. நிக்கோலஸ் அகஸ்ட் ஆட்டோ/ முதலாவது நான்கு முழு இயக்க உள் எரிப் பொறியை ஆக்கியவர். (ஃபோர் ஸ்ட்ரோக் என்ஜின்)

62. லூயி டேகர் / நிழற்படம் எடுத்தவர்.

63. ஜோசப் ஸ்டாலின்/ சோவியத் ஒன்றியத்தின் தான்தோன்றி

64. ரெனே டேக்கர்ட்டே/ பிரெஞ்ச அற இயல் அறிஞர்

65. ஜூலியஸ் சீசர் / ரோமானியப் படைத் தலைவர், ஆட்சியாளர்.

66. பிரான்சிஸ் பிசாரோ/ பெரு நாட்டின் இன்காஃப் பேரரசை வென்ற ஸ்பானிய வீரர்.

67.ஹெர்னாண்டோ கோர்ட்டே/ மெக்சிகோவை வென்ற ஸ்பானியர்.

68. முதலாம் இசபெல்லா அரசி/ அட்லாண்டிக் கடலைக் கடக்க, கிறிஸ்டோபர் கொலம்பசுக்குப் பணம் கொடுத்தவர்.

69. வில்லியம்/ பிரெஞ்சுக்காரர். 1066இல் ஆங்கிலக் கால்வாயைக் கடந்து, இங்கிலாந்தை வென்று, அங்கே ஒரு பேரரசை நிறுவியர்.

70. தாமஸ் ஜெபர்சன்/ அமெரிக்க விடுதலை அறிக்கையை எழுதியவர். மூன்றாம் குடியரசுத் தலைவர்.

71. ரூசோ/ அற இயல் அறிஞர்

72. எட்வர்டு ஜென்னர்/அம்மை நோய்க்குத் தடுப்பு மருந்து ஆக்கியவர்.

73. ரான்ட்ஜென்/ ஊடுகதிர்களைக் கண்டுபிடித்தவர்.

74. ஜோகான் செபாஸ்டியன் பாக்/ மேற்கு ஐரோப்பாவின் பல்வேறு இசைகளை ஒருங்கிணைத்தவர்.

75. லாவ் தசு/ விழுமிய நெறியும், அதன் ஆன்மிக ஆற்றலும்

76. என்ரிக்கோ ஃபெர்மி / உலகின் முதல் அணு உலையைக் கட்டியவர்.

77. தாமஸ் மால்தஸ் / சமுதாயத்தின் எதிர்கால வளர்ச்சியைப் பாதிக்கும் மக்கள் தொகைக் கொள்கை பற்றிய ஆய்வுரை

78. ஃபிரான்சிஸ் பேகன்/ மெய் விளக்க அறிஞர்

79. வால்டேர் /ஃபிரெஞ்சு மறுமலர்ச்சி இயக்கத்தின் முன்னணித் தலைவர்.

80. ஜான் எஃப் கென்னடி/ அப்பல்லோ விண்வெளி ஆராய்ச்சித் திட்டத்தைத் தொடங்கி வைத்தவர்.

81. கிரிகோரி பிங்கஸ்/ வாய் வழியாக உட்கொள்ளும் கருத்தடை மாத்திரைகளை ஆக்கியவர்.

82. சூயி வென் தை / பல நூற்றாண்டுகளாகப் பிளவுபட்டுக் கிடந்த சீனாவை ஒருங்கிணைத்தவர்.

83. மானி/ இறைவனும் நரகிறையும் நிலைபேறு உடைய சரி ஆற்றல் உடையவர்.

84. வாஸ்கோ ட காமா/ ஐரோப்பாவில் இருந்து ஆப்பிரிக்காவைச் சுற்றிக்கொண்டு இந்தியாவுக்குக் கடல் வழி கண்டுபிடித்தவர்.

85. சார்லிமேன் / கி.பி. 6ஆம் நூற்றாண்டில், பிரான்சு நாட்டை வென்ற ஜெர்மானிய இனக்குழுவின் பேரரசர்.

86. மகா சைரஸ் / பாரசீகப் பேரரசை நிறுவியவர்.

87. லியோனர்டோ யூலர் / சுவிஸ் நாட்டுக் கணித அறிஞர்

88. நிக்கோலோ மேக்கியவெல்லி / ஓர் அரசன் தன் அதிகாரத்தை நிலைநாட்ட, வஞ்சம், சூழ்ச்சி, பொய்மை, ஈவு இரக்கம் அற்ற அடக்குமுறையைக் கையாள வேண்டும் என்று சொன்னவர்.

89. சொராதுஸ்டிரர் / சொராஸ்டிரிய சமயத்தை நிறுவியவர்.

90. மெனஸ் / எகிப்து நாட்டை முதலில் ஒருங்கிணைத்தவர்.

91. மகா பீட்டர் / ரஷ்ய மன்னர்களுள் புகழ் பெற்றவர்

92. மென்சியஸ் / கன்ஃபூசியசுக்குப் பிறகு முதன்மையான சீன அறிஞர்

93. ஜான் டால்டன் / ஆங்கிலேய அறிவியலார்.

94. ஹோமர் / கவிதை/ ..இலியட், ஒடிசி.

95. முதலாம் எலிசபெத் அரசி 1533/1603 / இங்கிலாந்து வரலாற்றில் மிகச் சிறந்த ஆட்சியாளர். இவரது பெயரைச் சூட்டிக்கொண்ட இரண்டாம் எலிசபெத், தற்போது பேரரசியாக இருக்கின்றார்.

96. முதலாம் ஜஸ்டீனியன் / ரோமானியச் சட்டத்தைத் தொகுத்தவர்.

97. ஜோகன்ன்ஸ் கெப்ளர் / கோள்களின் இயக்க விதியைக் கண்டுபிடித்தவர்.

98. பாப்லோ பிகாசோ / கலையின் குறிக்கோள் என்ன? என்பதைக் கூறியவர்

99. மகாவீரர் / சமண சமயத் தலைவர்

100. நீல் போஹ்ர். / அணுக்கள், மூலக்கூறுகள் பற்றிய அமைப்பைக் கூறியவர்.

சிறப்புப் பட்டியல்

1. புனித தாமஸ் அக்வினாஸ் / தலைசிறந்த இறைமை இயல் நூல்களை எழுதியவர். இத்தாலியர்.

2. ஆர்க்கிமிடீஸ் / பண்டைய காலத்தின் கணித அறிஞர்

3. சார்லஸ் பேபேஜ் / இக்காலத்திய மிகப்பெரிய மின்கணிப்புப் பொறிகளுக்கு முன்னோடி. தாம் வடிவமைத்த கருவிக்கு பகுப்பு ஆய்வுப் பொறி எனப் பெயர் சூட்டினார்.

4. சீயோப்ஸ் / எகிப்து கிசா பிரமிடைக் கட்டியவர்

5. மேரி கியூரி / அறிவியல் பணி. அதில் வரலாறு படைத்த முதல் பெண்.

6. பெஞ்சமின் ஃபிராங்ளின் / பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கிய அறிஞர் வணிகம், இலக்கியம், அறிவியல், அரசியல்.

7. மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி / இந்திய விடுதலைப் போராட்டத்தின் தலைவர்.

8. ஆபிரகாம் லிங்கன் / அடிமை முறையை ஒழித்து, 35இலட்சம் பேருக்கு விடுதலை கொடுத்தவர்.

9. ஃபெர்டினாண்ட் மெகல்லன் / கடல் வழியாக முதன்முதலாக உலகத்தைச் சுற்றி வந்தவர்.

10. லியோனர்டோ டா வின்சி. / 15ஆம் நூற்றாண்டிலேயே, வான் ஊர்திகள், நீர்மூழ்கிக் கப்பல்கள் போன்றவற்றைப் பற்றிச் சிந்தித்து, வரைபடங்கள் வரைந்தவர்.

35 தமிழால் இணைவோம்

உலகத் தமிழர்களைத் தமிழால் ஒன்றிணைக்கும் உயர்வான எண்ணத்துடன் துவக்கப்பட்ட உலகத் தமிழ்ப் பேரியக்கம் இணையவழியில் இதுவரை எட்டாயிரம் நிகழ்வுகளைத் தாண்டி வெற்றிநடையோடு மகிழ்வோடு, தன் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

நாளும் தமிழ் வளர்க்கும் நோக்குடன் நாள்தோறும் இணையவழியில் தமிழ் ஆர்வலர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள் என அத்துணை பேரையும் தமிழின்பால் ஈர்த்து அவர்கள் கற்ற தமிழ் இலக்கியங்களை உரையாட வைத்து நிகழ்வுகளை நடத்திக் காணொளிகளாக வெளியிட்டு மக்கள் மனங்களில் தமிழ் உணர்வூட்டிக் கொண்டிருக்கின்றது.

உலகெங்கிலும் இருக்கும் தமிழர்களை ஒன்றிணைக்க 2018-இல் ஏற்படுத்தப்பட்ட இந்த அமைப்பு தமிழ் இலக்கியங்களை இளைய தலைமுறையினருக்குக் கடத்தும் முயற்சியாக, ஒவ்வொரு நாளும் நிகழ்வுகளை நடத்தி வருகிறது. குழந்தைகளை மையமாக வைத்துப் பல்வேறு நிகழ்வுகள் நடந்து வருகின்றன. அவர்களுக்கு எளிய முறையில் தமிழை அறிந்து கொள்ளவும், தமிழ் சார்ந்த பதிவுகளைப் புரிந்து கொள்ளவும், தமிழின் மீது அவர்களுக்கு ஆர்வம் வர வைப்பதற்காகவும் பலதரப்பட்ட நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்படுகின்றன.

இயல், இசை, நாடகம் என முத்தமிழிலும் நிகழ்வுகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. தமிழால் இணைவோம் உலகத் தமிழ்ப் பேரியக்கத்தில் பல்வேறு தரப்பட்ட ஆன்றோர் சான்றோர் பெருமக்கள் தூண்களாகவும் வழிகாட்டியாகவும் பின்புலமாகவும் இருந்து, தொடர்ந்து செயல்பட்டு வருகிறார்கள்.

பள்ளி, கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் தமிழ் அறிவு, பொது அறிவை வளர்க்கப் பல நேரடி நிகழ்வுகளை நடத்திக் கொண்டிருக்கின்றது. அதன் ஒரு பகுதியாகக் கல்லூரிகளில் தமிழில் ஆய்வை மேம்படுத்தும் வகையில் பேராசிரியர்களும், ஆய்வு மாணவர்களும், தமிழ் ஆர்வலர்களும் பங்கேற்கும்

வகையில் நேரடி நிகழ்வுகளாகப் பன்னாட்டுக் கருத்தரங்கங்களைக் கல்லூரிகளின் ஒத்துழைப்போடு நடத்தித் தமிழுக்குச் செழுமையூட்டிக் கொண்டிருக்கின்றது.

மதுரை மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரியுடன் இணைந்து முதல் முதலாக 04.03.2023 அன்று வெகு சிறப்பாகப் பன்னாட்டுக் கருத்தரங்கத்தை நடத்தி ஆய்வு மலரை வெளியிட்டது. இரண்டாவது பன்னாட்டுக் கருத்தரங்கத்தைக் குற்றாலம் பராசக்தி மகளிர் கல்லூரியுடன் இணைந்து 6.10.2023 அன்று மிகப் பெருமை கொள்ளும் வகையில் நடத்தி ஆய்வு மலரை வெளிக் கொணர்ந்தது. மூன்றாவது பன்னாட்டுக் கருத்தரங்கத்தை 14.2.2025 அன்று கோவிலூர் காரைக்குடியில் ஸ்ரீ நாச்சியப்பா கலை அறிவியல் கல்லூரியுடன் இணைந்து மிகச் சிறப்பாக நடத்தி ஆய்வு மலரை ஆய்வாளர்களின் கரங்களில் தவழவிட்டது.

கொங்குச் சீமையில், கோவையில் அமைந்துள்ள பி.பி.ஜி கலை மற்றும் அறிவியல் கல்லூரியுடன் இணைந்து பைந்தமிழ்த் தேர்ப் பாகன் பாரதியின் நினைவு நாளில் 11.9.2025 அன்று பாரதியின் படைப்புலகம் என்ற தலைப்பில் நான்காவது பன்னாட்டுக் கருத்தரங்கத்தை நடத்தி இருக்கிறோம். ஆறு மாதங்களுக்கு ஒரு பன்னாட்டுக் கருத்தரங்கத்தைக் கல்லூரிகளுடன் இணைந்து நடத்துவது கருத்தரங்க வரலாற்றில் மிகப்பெரிய சாதனை.

தமிழால் இணைவோம் பதிப்பகம் தொடங்கப்பட்டு அதன் வாயிலாக பல நூல்கள் வெளிவந்திருக்கின்றன. அதில் கல்லூரிப் பாடத்திட்டம் அடங்கிய நூல்களும் அடங்கும். தமிழால் இணைவோம் பதிப்பகம் வாயிலாகப் பல்வேறு பள்ளிகளுக்கு நூல்கள் கொடையாக அனுப்பப்பட்டு வருகிறது.

சங்க இலக்கியங்கள், நவீன இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள் எனப் பல்வேறு இலக்கியங்களில் தொடர் நிகழ்வுகள் நடத்தப்படுகிறது. பல வரலாற்றுச் சிறப்பான நிகழ்வுகள் பெட்டகமாக இங்கே பதியப்பட்டு வருகிறது.

திருக்குறள், திருமந்திரம், திருவாசகம், கம்ப ராமாயணம், மகாபாரதம், மீனாட்சி பிள்ளைத்தமிழ், திருப்பாவை, திருவெம்பாவை, நாயன்மார்கள், நாச்சியார் திருமொழி, ஆசாரக் கோவை, சொக்கநாத வெண்பா, அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, மணிமேகலை, பட்டினப்பாலை, நெடுநல்வாடை, திருமுருகாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, சிறுபாணாற்றுப்படை இப்படிப் பல்வேறு இலக்கியங்கள் ஆன்றோர்

சான்றோர் பெருமக்களால் தொடர் பொழிவாக வழங்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.


பன்னாட்டுக் கூடுகைகள், புத்தக வெளியீடுகள், கருத்தரங்கங்கள், மாணவர்களின் பல்சுவை நிகழ்ச்சிகள், தமிழால் இணைவோம் சுற்றுலாக்கள் என ஒவ்வொரு வருடமும் நேரடி நிகழ்வுகள் இடம் பெறுகின்றன. வருடந்தோறும் மார்ச் மாதத்தில் பெண்களைப் போற்றும் விதமாக தங்க மங்கை விருதுகள் வழங்கிச் சிறப்பிக்கப்படுகிறது.

தமிழால் இணைவோம் உலகத்தமிழ் பேரியக்கம் கவின் கலை வேந்தர், மாற்று மருத்துவர் திரு. சத்ய நாராயணராஜ் பாலகுரு அவர்களால் நிறுவப்பட்டது. இவ்வமைப்பின் கௌரவத் தலைவராக திருமதி. பரமேஸ்வரி பாலகுரு அம்மா அவர்கள், தலைமை ஆலோசகராக திரு. பாலகுரு ஐயா அவர்கள், துணைத் தலைவராக தங்கமங்கை மீனா திருப்பதி அம்மா அவர்கள், தலைமைச் செயலராக மதிப்புறு முனைவர் வாழும் வரலாறு சுப்பிரமணியம் ஐயா அவர்கள், பன்னாட்டு இயக்குனராக தங்கமங்கை கவிஞர் நெல்லை அன்புடன் ஆனந்தி அவர்கள் (அமெரிக்கா), பன்னாட்டுத் தூதுவர் தங்கமங்கை அபி சங்கரி, தமிழால் இணைவோம் களத்தின் தூண்களாகச் செயல்படக் கூடிய வாழும் வரலாறு சந்திரமோகன் ஐயா அவர்கள், கலைமாமணி பத்மநாபன் அய்யா அவர்கள், வாழும் வரலாறு கோபால் அய்யா அவர்கள், வாழ்நாள் சாதனையாளர் அழகுராஜா ஐயா அவர்கள், இளைய கம்பர் சந்தானகிருஷ்ணன் ஐயா அவர்கள், கூட்டு மாவட்ட ஆளுநர்கள் தங்கமங்கை கவிஞர் வெண்ணிலா அவர்கள், தங்கமங்கை முனைவர் தீபா அவர்கள், தங்கமங்கை பிரபாவதி (அமீரகம்), தங்கமங்கை கலா ஸ்ரீனிவாசன் (ஓமன்), தங்கமங்கை முத்து ஞானம் அவர்கள், தங்க மங்கை முனைவர் சரஸ்வதி அம்மா அவர்கள், திரு. வரதராஜன்(கனடா), திரு. ஹனீஃபா (இலங்கை), திரு. வரதராஜன் (கத்தார்) மேலும் மாவட்ட ஆளுநர்கள், சங்கத் தலைவர்கள், செயலாளர்கள், உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவரின் ஊக்கமும் ஒத்துழைப்பும் தமிழால் இணைவோம் உலகத்தமிழ்ப் பேரியக்கத்தின் வெற்றிக்கான படிகளாக அமைகிறது.

எட்டாம் வருடத்தில் அடியெடுத்து வைத்திருக்கும் தமிழால் இணைவோம் உலகத் தமிழ்ப் பேரியக்கம் இன்னும் பல சாதனை நிகழ்வுகள் நடத்தி பல்லாண்டு காலம் தமிழ்ப்பணி செய்திட மனமார வாழ்த்துகிறோம்.



சென்னை உலகத் திருக்குறள் மையம் நடத்திய உலகச் சாதனை மாநாட்டில் குறள் மாமணி விருது, சான்றிதழ் பெறுதல்.



திருக்குறள் உலக நூல் உலகத்தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றம் மற்றும் மதிப்புரை வழங்கும் நிகழ்வு.



கோவிலூர் நாச்சியப்ப சுவாமிகள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் இலக்கியச் சாரல் விழாவில் பங்கேற்றேர்.



காரைக்குடி உமையாள் இராமநாதன் மகளிர் கல்லூரியின் பெண்கள் தின விழாவின் நிகழ்வு.



சென்னையில் நூலேணி பதிப்பகம் தமிழால் இணைவோம் இணைந்து நடத்திய நெல்லை அன்புடன் ஆனந்தி அவர்களின் நூல்கள் வெளியீட்டு விழாவில்



தமிழால் இணைவோம்–குடும்பச் சுற்றுலா மகாபலிபுரத்தில் பங்கேற்றோர்.



மு.அழகுராஜ்
முதுகலை ஆசிரியர் (ப.நி):
அவனியாபுரம், மதுரை - 625012.
அலைபேசி எண் :
9791913301

ஆசிரியர் மு.அழகுராஜ் சென்னையம்பட்டி, தூத்துக்குடி மாவட்டத்தில் பிறந்தவர். பெற்றோர் அ.முத்துச்சாமி - சீனிவாசக அம்மாள். பிறந்தநாள்: 13.5.1955. எம்.ஏ., எம்.எஸ்சி., எம்.எட்., எம்.ஃபில் என நான்கு முதுகலைப் பட்டங்கள் பெற்றவர். தமிழ்நாடு பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வித்துறையில் மேற்பார்வையாளராக 1983 முதல் ஆறு ஆண்டுகள் பணி செய்தவர்.பின்னர் பள்ளிக் கல்வித்துறைக்கு ஈர்க்கப்பட்டு 24 ஆண்டுகளாக ஆசிரியராகப் பணி செய்தவர். அரசு மேனிலைப்பள்ளி, பழையனூர், சிவகங்கை மாவட்டத்தில் முதுகலை ஆசிரியராக 2013 இல் பணி நிறைவு செய்தவர். குறள் நெறியில் நிற்பவர். திருக்குறளை மாணவர்களிடையே பறை சாற்றுபவர்.



Rs.150